# நமது செட்டிநாடு

மலர் 3 ✿ மணம் 2 ✿ ஹேவிளம்பி ஆண்டு ஆனி ✿ ஜூன் 2017 ✿ ரூ.20







The Most TRUSTED TILES Brand

India's Biggest Retailer
Lakshmi Ceramics
Bringing Life to Life. . .

19 YEARS OF SERVICE EXCELLENCE

H.O ⦿ 63, Brooke Bond Road, Coimbatore-1 | 321, Mettupalayam Road, Coimbatore-43
T 0422 - 4336565 • 4336555 • 2540625 • 4033600 • 4033661

Thiyagaraya Road (Next to Globus), Pondybazaar, T.Nagar, Chennai - 17
T 044-28150054, 80568 84477

| Madurai | Trichy | Tirupur | Karur | New Bus Stand Karaikudi | Kovilur, Karaikudi |
|---|---|---|---|---|---|
| 0452-2382233 | 96777 71291 | 04296-276224 | 04324-267307 | 04565-235227 | 9790382565 |

INDIA'S LARGEST SELLER OF

Kajaria KOHLER. SOMANY CERA RAK NITCO Jaquar TERRASTONNE AGL

www.lakshmiceramics.in

DIGITAL WALL TILES & FLOOR TILES | SANITARY WARES | WELLNESS PRODUCTS

நமது செட்டிநாடு

மலர் 3 மணம் 2 ஜூன் 2017
ஹேவிளம்பி ஆண்டு ஆனி மாதம்

புரவலர்
**இராஜாமணி முத்துக்கணேசன்**

ஆசிரியர்
**ந.ஆவுடையப்பன்**

பதிப்பாளர்
**அண.வயிரவன்**

ஆசிரியர் குழு
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆராவயல் ஆர்எம். சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி

அலுவலக நிர்வாகம்
**ச.குழந்தைவேலு**

தட்டச்சு
**முரு. மலர்விழி**

வடிவமைப்பு
**செ.ஜீவானந்தகுமார்**

விளம்பரம் தொடர்புக்கு
**அண.வயிரவன்**
94445 88928

இணைய இதழ் முகவரி
www.namadhuchettinad.com

செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
**நமது செட்டிநாடு** மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 6–வது தளம்,
603, அண்ணா சாலை,
சென்னை 600 006
தொலைபேசி: 044–46717755
namadhuchettinad@gmail.com
என்ற மின்னஞ்சலிலும் தொடர்பு கொள்ளலாம்.

**உறுப்பினர் சேர்க்கை, முகவரி மாற்றம், விசாரணைக்கு: 044-4671 7755**

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. | 240/– |
| ஈராண்டு சந்தா | ரூ. | 480/– |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. | 1,200/– |
| வாழ்நாள் சந்தா | ரூ. | 10,000/– |


இராஜாமணி முத்துக்கணேசன்
புரவலர்
நமது செட்டிநாடு
ராணி சீதை அரங்கம், 6–வது தளம்,
603, அண்ணா சாலை,
சென்னை 600 006.

# முயற்சித்தால் வெற்றி நிச்சயம்

10ஆவது மற்றும் +2 தேர்வு முடிவுகள் வெளிவந்து விட்டன. வழக்கம் போல் பெண்கள் அதிக அளவில் தேர்வு பெற்றும், மதிப்பெண்கள் பெற்றும் அசத்தி உள்ளனர். ஆனாலும், ஆண்களும் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்து உள்ளனர்.

நமது குழந்தைகள் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் உயர்நிலையில் வந்துள்ளது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நல்ல மதிப்பெண்கள் பெற்றவர்கள் படத்துடன் விவரம் இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது முடிவான பட்டியல் அல்ல. பலர் தகவல் அளிக்காததால் அவர்களின் விவரங்கள் வெளிவரவில்லை. தகவல் தந்தால் தகுந்தவாறு பிரசுரிக்கப்படும்.

இனி அடுத்து என்ன?

இது அவர்கள் மனதில் உள்ள ஆவல் மட்டுமல்ல. பெற்றோர்களின் மனதில் உள்ள கேள்வியும் இதுதான். தகுதிக்கேற்ப எதிர்காலத்தைக் கணக்கில் கொண்டு தகுந்த படிப்பைத் தேர்வு செய்து கவனம் சிதறாமல் படிக்க வேண்டும். அந்த வகையில் பிள்ளைகளின் நியாயமான விருப்பத்தை பெற்றோர்கள் நிறைவேற்ற வேண்டும்.

நம்மவர்கள் தொழில் தொடங்குவதில் அதிகம் கவனம் செலுத்தி அதற்கான முன்னேற்பாடுகளை செய்து வருவது தொன்றுதொட்டு வருவதாகும். வங்கித் துறையும், கணினி துறையும் அதிகம் பேரை கவர்ந்ததால் அத்துறைகளில் பலர் உள்ளனர்.

புகழ்மிக்க மருத்துவர்களாக, நீதி அரசர்களாக, கல்விமான்களாக, வழக்கறிஞர்களாக, பட்டயக் கணக்காளர்களாக, பொறியாளர்களாக அரசு

அலுவலர்களாகப் பணிபுரிந்துள்ளனர், பணிபுரிந்தும் வருகின்றனர். அரசு நிர்வாகத் துறையில் நமது கவனம் ஏனோ பெரிய அளவில் செல்லவில்லை. இந்திய ஆட்சிப் பணியில் மிகச் சிலரும், பிற நிர்வாகத் துறைகளிலும் குறைந்த எண்ணிக்கையில் தான் இருந்து வந்துள்ளனர். அதுவும் பெண்கள் அரசுத் துறையில் நிர்வாகப் பொறுப்பில் இருப்பது மிக அபூர்வமாக உள்ளது.

இருப்பினும், தமிழகக் காவல் துறையில் உமையாள் என்பவர் காவல் துறை கண்காணிப்பாளர் நிலையிலும் மத்திய வருவாய் புலனாய்வுத் துறையில் சாந்தி என்பவர் கண்காணிப்பாளராக இருப்பதும் சற்று ஆறுதலான விஷயமாக இருந்தாலும், மேன்மேலும் பெண்கள் அரசு நிர்வாகப் பணிக்கு வர முயற்சி எடுக்க வேண்டும்.

குறிப்பாக +2 தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர் அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டித் தேர்விலும், மாநில அளவில் நடைபெறும் குரூப்1 தேர்விலும் பங்கேற்க கலை, அறிவியல், மருத்துவம், பொறி யியல், பட்டயக் கணக்கு, சட்டம் என தங்களுக்குப் பிடித்த எந்தத் துறையை வேண்டுமானாலும் தேர்வு செய்து நன்கு படித்துப் பட்டம் பெற்று ஓரிரு முறை அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வு மற்றும் மாநில அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்று இந்திய ஆட்சிப் பணி, துணை ஆட்சியர் போன்ற உயர்நிலைப் பணிகளில் சேர வேண்டும் என்பதை லட்சியமாகக் கொள்ள வேண்டும்.

அதற்காக கல்லூரியில் படிக்கும் போதே போட்டித் தேர்வுகள் எழுதுவதற்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். போட்டித் தேர்வு தொடர்பான பாடத் திட்டங்களை சம்பந்தப்பட்ட மத்திய, மாநில அரசுகளின் (UPSC மற்றும் TNP-SC) போட்டித் தேர்வு ஆணைய வலைத்தளங்களில் அறிந்து கொள்ளலாம். பாடத்திட்டத்திலிருந்து தகுந்த பாடங்களைத் தேர்வு செய்து அவற்றில் கவனம் செலுத்த கூடுதலாக உழையுங்கள். அரசு நிர்வாகப் பணிகளான IAS, IPS, IFS, IRS போன்ற பணிகளில் அதிக எண்ணிக்கையில் இடம் பெற வேண்டும். அதற்கான அறிவும் ஆற்றலும் நமக்கு உண்டு.

"தேவை முயற்சிதான்.
முயற்சித்தால் வெற்றி உறுதி."

என்றும் அன்புடன்,

இராஜாமணி முத்துக்கணேசன்

**(இராஜாமணி முத்துக்கணேசன்)**

**அட்டையில்: திருவாரூர் ஸ்ரீ கமலாம்பாள் உடனுறை ஸ்ரீ தியாகராஜ சுவாமி திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமி ஆழித்தேரோட்டம்**

# உள்ளே...














1. **நகரத்தாரின் ஆன்மிகத் தொண்டும் அருந்தமிழ்ப் பணியும்**
   *புதுவயல் செல்லப்பன்* ................ 06

2. **காஞ்சி ஸ்ரீமகாசுவாமிகள் வாழ்வில்** ............................... 11

3. **தெரிந்ததும் தெரியாததும்**
   *ஆர்.மீனாட்சி, கோட்டையூர்* ........ 12

4. **கண் சிறப்பு மருத்துவர் ஜே.அருண்குமார் ஓர் சந்திப்பு**
   *இல. பழனியப்பன்* ..................... 18

5. **நகரத்தார் சிகரத்தார்**
   *காரைக்குடி நாராயணன்* ............. 22

6. **வாரியார் வாக்கு**
   *ஏ.எல்.எஸ்.நாச்சியப்பன்* ............. 24

7. **இ.பி.கோவும், இன்பத் திருக்குறளும் "தந்தையைக் காத்த தனயன்"**
   *வழக்கறிஞர் என்.எஸ். ராஜன்*........ 26

8. **அப்பாவின் திரைப் பயணம்**
   *கண்மணி சுப்பு கண்ணதாசன்* .... 30

9. **சிலம்பின் கதை**
   *ஞா.மாணிக்கவாசகன்* .................. 36

10. **பாடுவார் முத்தப்பர்**
    *பரசுராமன்* ................................ 41

11. **நகர்வலம் 'மானகிரி'**
    *மெ.அழகம்மை* ............................44

12. **திரை ஓவியம்** ........................ 48

13. **நற்பணிகள் பலசெய்த நகர விடுதி 'மெ'**
    *பேராசிரியர் தேவநாவே* .............. 50

14. **இது நம்ம நாடு** ...................... 55

15. **பிஞ்சு ஓவியம்** ....................... 58

16. **திருமண சேவை** .................... 60

17. **செட்டிநாடு அஞ்சல்** ............... 61

18. **சிறுவர் நாடு** .......................... 64

## நகரத்தாரின் ஆன்மிகத் தொண்டும், அருந்தமிழ்ப் பணியும்




# கலைமாமணி அரு.இராமநாதன்

புதுவயல் செல்லப்பன்




காதலின் பெருமையை எடுத்துரைக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் பெரிய புராணத்திலிருந்து சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்க்கை வரலாறை நாடகமாக எழுதியுள்ளார். இந்நாடகம் எப்போது எழுதப் பெற்றது என்பது தெரியவில்லை. இராமநாதன் இந்நாடகத்தை அச்சிட்டு வெளியிடவும் இல்லை.

அவர் காலத்துக்குப் பிறகு 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிரேமா பிரசுரத்தின் 350ஆவது நூலாக வெளியிடப் பெற்றுள்ளது. அதற்கு, திரு. ம.ரா.போ. குருசாமி அவர்கள் முன்னுரை வழங்கியுள்ளார்கள். நூலின் தலைப்பு 'சுந்தரரின் பக்தியும் காதலும்' நாடகம் தொடங்கும் முன் அதைப்பற்றி இராமநாதன் ஒரு குறிப்பு எழுதியுள்ளார். 'பக்தியின் ஹ்ருதயம் காதல்" என்பதைச் சித்தரிக்கும் ஒரு பெரியபுராண நாடகம் அடியார் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றின் மீது எழும்பி நிற்கும் ஒரு கலைக் கோபுரம்.

பெரிய புராணக் கட்டுக்கோப்பில் தேவாரக் கருத்துக்களை உட்கொண்டு சைவ சமயத்தின் சாரம் ததும்பி நிற்க, புராண

சம்பவங்களை மேடைக்கேற்றவாறு புது மெருகிட்டு, புதுமைப் பாணியுடன் கற்றாரும் மற்றாரும் கடைசி வரை கண்டுகளிக்கும்படி, சுவைபட சுந்தரரது வாழ்க்கை நாடகம் இங்கே சித்தரிக்கப் பெற்றிருக்கிறது"

இம்முன்னுரை குறித்து, தம் முன்னுரையில் திரு.ம.ரா.போ. குருசாமி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்த நாடகத்தை இதைவிட அற்புதமாக யாரும் அறிமுகம் செய்யவோ, திறனாய்வு செய்யவோ முடியாது. அறிமுகப் பாணியும், திறனாய்வுப் பார்வையும் மிகச் செப்பமாக இந்த வாக்கியத்தில் அமைந்துள்ளன. நண்பர் இராமநாதனின் படைப்புக்கு இதுவே போதுமான நற்சான்றிதழ்.

இந்நாடகம் திருக்கயிலையில் பூஞ்சோலையில் கமலினியையும், அனிந்திதையையும், ஆலால சுந்தரன் சந்திப்பதிலிருந்து தொடங்குகிறது. அம்மங்கையர் இருவர் உள்ளங்களும், ஆலால சுந்தரன் உள்ளமும் காதல் வயப்படுகின்றன.

இதை அறிந்த சிவபெருமான் ஆலால சுந்தரனிடம் "நீ மங்கையர் மீது உள்ளம் வைத்தாய். ஆதலால், தென் திசையில் தோன்றி அம்மங்கையரிடம் இன்பம் கலந்து பின்னர் இங்கு வந்து அணைவாயாக" என்று அருள்கிறார்.



ஆதிமூர்த்தியான சிவபெருமான் இங்ஙனம் அருள, ஆலால சுந்தரர் "நிர்க்குணனே! நிர்மலனே! உலகம் மாயை. மனித வாழ்க்கை மாயவலை. மானுஷ்யம் மந்த மயக்கம். அந்த மாயக்காட்டில் சிக்கி மயங்கும் போதும் நின்னை மறவாதிருக்கும் மனம் தா. மானுட வாழ்வில் மையல் கொண்டு மலமாய் அல்லற்படும் பொழுது ஐயனே! தடுத்து ஆண்டருள வேண்டும்" என்று வேண்ட இறைவன் ஏற்றருள்கிறார்.

ஆலால சுந்தரர் தென் திசையில் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் சடையனாருக்கும், இசை ஞானியார்க்கும் மகனாகப் பிறந்து நம்பியாரூரர் எனும் திருப்பெயர் தாங்கி நரசிங்க முனையர் என்ற மன்னரால் வளர்க்கப் பெற்று மணப்பருவம் அடைகிறார். திருவாரூரில் வாழ்ந்த சடங்கவி சிவாச்சாரியரின் மகளை அவருக்குத் திருமணம் செய்யப் பேசி முடித்து, புத்தூரில் மணவிழா நிகழ்த்த ஏற்பாடு செய்யப்படுகிறது. திருமண நாளன்று மணவினை தொடங்குகின்ற நேரத்தில் பழுத்த கிழவர் ஒருவர் வந்து திருமணத்தைத் தடுத்து நிறுத்தி நம்பியாரூரர் தமக்கு அடிமை என்று அவருடைய பாட்டனார் எழுதித் தரப்பட்டதென்று ஓர் ஓலையைக் காட்டி நீதிமன்றத்தில் வழக்காடி வென்று விட்டார். ஓர் அந்தணன் மற்றோர் அந்தணனை அடிமையாக்கிக் கொண்டதால் அக்கிழவர் எவ்வூரைச் சேர்ந்தவர் என்று அனைவரும் கேட்க, கிழவர் கோயிலினுள் சென்று மறைந்து விட்டார்.

நம்பியாரூரர் வழக்காடிய கிழவர் உண்மையில் தம்மை ஆட்கொள்ள வந்த இறைவனே என்பதை உணர்ந்து திடுக்குற்று அவரைப் பித்தன், பேயன் என்று வைததை எண்ணி வருத்தமுற்றார்.

அப்போது சிவபெருமான், 'முன்பு நீ வன்மை பேசி எம்மிடம் வந்ததால் 'வன்றொண்டன்' என்ற பெயர் கொண்டு என்மேல் சொற்றமிழ் பாடுக' என்று ஆணையிட்டார். நம்பியாரூரர் 'உன்னை என் சொல்லிப் பாடுவேன்' என்று வினவ, இறைவன் 'முன்னம் நீ நம்மைப் பித்தன் என்று பேசினாய் எனவே, பித்தன் என்றே பாடுக' என்று கூறினார். அதற்கேற்ப, நம்பியாரூரர் 'பித்தா பிறைசூடி! பெருமானே! அருளாளா! என்ற தொடங்கும் பாடலைப் பாடினார்.

நம்பியாரூரர் ஒவ்வோர் ஊராகச் சென்று சிவபெருமானை வணங்கி பதிகங்கள் பாடிச் செல்லும் வழியில் திருவாரூர் வந்தார். திருக்கோயில் சென்று சிவபெருமானை வழிபட்டுத் திரும்பும் போது பரவையாரைப் பார்க்க, பரவையார் ஆரூரரைப் பார்க்க, இருவர் கண்களும் ஒன்றையொன்று உண்ண, இறைவன் திருக்குறிப்பின்படி, நம்பிஆரூரர் பரவையாரை மணம் புரிந்து கொண்டு திருவாரூரில் வாழ்ந்தார். திருத்தொண்டத் தொகைபாடி அடியார்கள் எல்லோருக்கும் தாம் அடியார் என்று நிலைநாட்டினார்.

நம்பியாரூரர் மீண்டும் ஊர் ஊராகச் சென்று பதிகங்கள் பாடி இறைவனை

**அரு. இராமநாதனின் சைவ சமயத்தைப் பற்றிய அறிவு, பெரிய புராணத்தில் அவருக்கிருந்த ஈடுபாடு, தமிழ்ப் புலமை, தமிழ் நடை, நாடகம் ஆக்கியுள்ள தன்மை, இவையெல்லாம் நம்மை வியப்புறச் செய்கின்றன.**

வழிபட்டு வரும் போது திருவொற்றியூர் வந்து சங்கிலியாரைக் கண்டு மனம் பறிகொடுத்து இறைவனிடம் சங்கிலியாரைத் தருமாறு கேட்டுப் பெற்றுத் திருவொற்றியூரில் வாழ்கிறார்.

திருவாரூர் இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்ற அவாவினால், திருமணத்துக்கு முன் சங்கிலி யாருக்கு 'உன்னைப் பிரியேன்' என்று சத்தியம் செய்ததை மீறிப் புறப்பட்டு திருவொற்றியூர் எல்லை தாண்டும் போது பளிச்சென்று தோன்றிய மின்னலால் நம்பியாரூரரின் இரு கண்களும் பார்வை இழந்து விட்டன.

கச்சி ஏகம்பனைப் பாடி ஒரு கண் பார்வையையும், திருவாரூர்ச் சிவனைப் பாடி மறுகண் பார்வையையும் பெறுகிறார்.

நம்பியாரூரர் சங்கிலியாரைத் திருமணம் புரிந்து கொண்டு வாழ்ந்ததை அறிந்து ஊடல் கொண்டிருந்த பாவையாரிடம் இறைவனையே தூதாக அனுப்பி ஊடலைத் தணிக்கச் செய்து அவரோடு வாழும் காலத்தில் தல யாத்திரை மேற்கொள்கிறார்.

சேர நாட்டில் உள்ள திருவஞ்சைக்களத்தை அடைந்த போது உலக வாழ்க்கையை நீத்து விட வேண்டும் என்ற தம் எண்ணத்தை இறைவனிடம் வெளிப்படுத்த, கயிலையிலிருந்து ஒரு வெள்ளை யானை வந்து நம்பியாரூரரை அழைத்துச் செல்கிறது. நம்பியாரூரரின் நண்பரான சேரமான் பெருமாளும் ஒரு குதிரையில் ஏறி, கயிலை சென்றடைகிறார்.

அரு. இராமநாதனின் சைவ சமயத்தைப் பற்றிய அறிவு, பெரிய புராணத்தில் அவருக்கிருந்த ஈடுபாடு, தமிழ்ப் புலமை, தமிழ் நடை, நாடகம் ஆக்கியுள்ள தன்மை, இவையெல்லாம் நம்மை வியப்புறச் செய்கின்றன.

இந்நாடகத்தில் பெரிய புராணத்திலிருந்தும், தேவாராத்திலிருந்தும் பல பனுவல்கள் எடுத்தாளப் பட்டுள்ளன. தாயுமானவர், இளங்கோவடிகள், கம்பர், சுப்பிரமணிய பாரதியார், சுத்தானந்த பாரதியார், நாமக்கல் கவிஞர் ஆகியோரின் கவிதை வரிகள் மேற்கோள்களாகக் காட்டப் பட்டுள்ளன. கந்தபுராணம், சிவஞான தீபம், வளையாபதி, சித்தர் பாடல்கள் ஆகிய நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டி யுள்ளார்.

இராமநாதன் 'காதல்' பற்றிய தன்னுடைய கருத்தை இந்நாடகத்தில் சுந்தரர் வாயிலாக ஆழமாகப் பதிவு செய்துள்ளார்.

"காதல்" என்பது மனதால் உண்ணக்கூடிய ஒரு தெய்வீக அமுது. கடவுளைப் போல, காதலும் வாதப் பிரதிவாதங்களுக்கு எட்டாத ஒரு அலாதிப் பொருள். இதயத்தோடு இதயம் வைத்துத்தான் இக்காதலை உணர்ந்து அனுபவிக்க முடியும். பக்தியின் ஹிருதயம் காதல். வாழ்வை வண்ண மலராக்கும் சக்தி அதற்குண்டு கடவுளின் சாயா ரூபம் காதல். வாழ்க்கையின் நீரோட்டம் காதல். ஒரே கருத்தில் வளர்ந்து ஒரே திசை நோக்கி மலரும் இரண்டு இளம் உள்ளங்களை ஒட்டி உறவாடச் செய்யும் அற்புத சக்தி காதல்".

இராமநாதனின் 'காதல்' பற்றிய இக்கருத்துகள் அவருடைய பிற்காலப் படைப்புகளில் எல்லாம் அழுத்தமாக வெளிப்படுகின்றன.

இந்நாடகத்தில், 'சாதி வேறுபாடுகள் இல்லை' என்னும் கருத்து வலியுறுத்தப்படுகிறது. நம்பியாரூரர் "சாதி வித்தியாசம், சனாதன தர்மத்துக்குப் புறம்பு" என்று கூறுகிறார்.

இந்நாடகத்தின் மூலம் இராமநாதன் பெண் விடுதலையையும் ஆதரித்துப் பேசுகிறார். நாடகப் போக்கிற்காகவும், நகைச்சுவைக் காகவும், ஆசிரியர் இராமநாதன், சைவப் பழம், சின்னச்சாமி ஐயர், வாண்டு, சோனிக்கம்பன், சுடலைமுத்து, அன்னக்காவடி, அரிச்சுவடி, அங்கையற்கண்ணி, தாமரைக் கண்ணி போன்ற பாத்திரங்களைப் படைத்துள்ளார்.

'சுதந்திரப் பக்தியும், காதலும்' என்ற பெயரில் இராமநாதனின் மறைவிற்குப் பிறகு வெளியிடப் பெற்ற இந்நாடகம் எங்கேனும் அரங்கேற்றப் பெற்றதா என்ற விவரம் தெரியவில்லை.

05.06.1945இல் டி.கே.எஸ். சகோதரர்களால் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ற இராஜ ராஜ சோழன் நாடகம் 1955ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நாளன்றுதான், 11 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் திருநெல்வேலியில்

பொருட்காட்சி சாலை நாடக அரங்கில் அரங்கேற்றப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் அந்நாடக அரங்கேற்றம் குறித்து இராமநாதன் டி.கே.எஸ். சகோதரர்களிடம் எதுவுமே கேட்கவில்லை. காரணம், அவருடைய மறதி என்கிறார்.

பரிசு பெற்ற நாடக வடிவம் அப்படியே நடிக்கப்படவில்லை. இன்றியமையாத பல மாற்றங்களுடன் தான் மேடை ஏற்றப்பட்டது.

அந்நாடகம் பொதுமக்களிடையேயும் பத்திரிகைகளிலும் வெகுவாகப் பாராட்டுப் பெற்றது. 1000 முறைகளுக்கு மேலாக மேடையேற்றப்பட்டது.

**தினமணி நாளிதழ்:**

"தென்னிந்திய நாடக உலகில் அழியாப் புகழ் பெற்றுவிட்ட" இராஜராஜ சோழன் நாடகத்தின் ஆசிரியர் அரு. ராமநாதனின் வசனங்கள் கருத்துக்கினிமை பயப்பதுடன், சோழவம்சத்தின் சிறந்த நாகரிகத்தை நன்கு பறை சாற்றுகின்றன.

**ஆனந்த விகடன்:**

"முன்னேறி வரும் நாடகக் கலையில் ஒரு புதிய வெற்றி என்று நிச்சயமாகச் சொல்ல வேண்டும். நம்மை நாம் உயர்த்திக் கொள்ளச் சரித்திர சம்பவங்கள் உதவுவது போல் வேறெதுவும் உதவாது. நாடகக் கதையும், வசனமும் எழுதிய ஸ்ரீ அரு.ராமநாதன் பாராட்டுக்கு உரியவராகிறார்.

தமிழறிஞர்களும் அந்நாடகத்தைப் பாராட்டி உள்ளார்கள்.

**பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை:**



"தமிழர் வீரம், தமிழ்க் காதல், தமிழ்ப் பண்பு, தமிழர் சமய நெறி யாவும் இந்த நாடகத்தில் நடமிடுகின்றன".

**பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்:**

"என்னுள்ளத்தில் பொங்கியெழும் உணர்ச்சியை வார்த்தைகளால் சொல்ல இயலா". இராஜராஜ சோழன்" தமிழ் நாடக மேடையை வானளாவ உயர்த்தி விட்டது".




நாடகக் கதை கி.பி. 999 இல் தொடங்குகிறது. இராஜ ராஜன் வேங்கி நாட்டு மன்னன் சக்தி வர்மனுக்கு, அவருடைய நாட்டை மீட்க உதவி செய்து முடிசூட்டுகிறார்.

சக்தி வர்மனின் தம்பியான விமாலதித்தன். வேங்கி நாடு எவ்விதமான நிபந்தனையும் இல்லாத சுதந்திரத்தைத்தான் விரும்பும் என்று வலியுறுத்துகிறான். இரட்டபாடி நாட்டு மன்னனான சத்யாசிரியன் சோழர்களின் பகைவன் சத்தியாசிரியனின் ஒற்றனாக பாலதேவர் என்பவர் இராஜ ராஜனுடன் உள்ளார்.




இராஜராஜனின் மகள் குந்தவியும், விமலாதித்தனும் பிள்ளைப் பருவத்திலிருந்தே ஒன்றாக விளையாடிப் பருவமுற்ற போது ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள்.

சில காலத்துக்குப் பின்னர் சோழ நாட்டிற்கும் வேங்கி நாட்டுக்கும் போர் மூள்கிறது. விமலாதித்தன் கைதாகி, புலிக் கூண்டுக்குள் அடைக்கப்படுகிறான்.

எனினும் குந்தவியின் புத்தி சாதுரியத்தால் கவி பாடி இராஜ ராஜனிடம் குந்தவியையே பரிசாகப் பெறுகிறான்.

பாலதேவரின் உள்நோக்கம் இராஜ ராஜனுக்கு நன்றாகவே தெரிந்திருந்தும் தெரியாதது போல் பாசாங்கு செய்து அனைவரையும் சோதிக்கவே நாடகம் ஆடியதாகக் கதை நிறைவுறுகிறது.

அரு. இராமநாதன் இராஜராஜனை மிகுந்த ஆற்றல் உடையவனாகவும் குடிமக்களை மதிக்கும் பேரரசனாகவும் உருவாக்கி உள்ளார்.

"நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமும்
தமிழ் வரம் பறுத்த தண்புனல் நாடு"

என்று சேர, சோழ, பாண்டிய நாடுகளைச் செந்தமிழ் நாடாக ஒன்று சேர்த்துக் கனவு கண்டார் இளங்கோவடிகள். சிலப்பதிகாரம் கண்ட அந்தக் கனவை தான் நிறைவேற்றி விட்டதாக இராஜராஜன் கூறுகிறான்.

இராஜ ராஜன் எம்மதமும் சம்மதம் என்று நினைப்பவன். அரசியலுக்கும், மதத்துக்கும் எவ்வகையான சம்பந்தமும் இல்லை எனக் கருதுபவன். பாண்டி நாட்டில் வழங்கி வந்த வட்டெழுத்து முறையை மாற்றி நவீன கிரந்த எழுத்து முறையை அறிமுகம் செய்கிறான். தமிழுக்கும் ஒரே லிபி ஏற்பட வேண்டும் என்ற கருத்தில் சீன தேசத்துக்குச் செல்லும் வணிகர் குழுவிடம் "தமிழ் நாகரிகம் என்பது வெறும் மண் பரப்பன்று. பௌத்தம், சைவம்,

என்பன போல அதை மக்கள் பரப்புடைய ஒரு பரந்த நாகரிக இலட்சியம் என்று கருதி அக்கருத்தையே கடல் கடந்து வாழும் தமிழ் மக்களுக்குத் தனது செய்தியாகத் தெரிவிக்கிறான்.

இராஜராஜன் கலை வளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும், அறத் துறைக்கு, நிதித்துறைக்கு, வரலாற்றுத் துறைக்கு, அரசியல் துறைக்குப் பயன்படத்தக்க பொது இடமாக பெரிய கோயில் ஒன்றைத் தஞ்சையில் கட்டுகிறான்.

"வெளிப் பார்வைக்குத் தான் பேரரசே தவிர ஒவ்வொரு ஊரிலும், குடியாட்சி முறையும், தேர்தல் முறையும் உண்டு. மக்களால் மக்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்ச் சபையினரால் ஆளப்பட்டு, ஒவ்வொரு கிராமமும் சுய தேவைப் பூர்த்தி உள்ளதாய், சுய நிர்ணய உரிமை உடையதாய் விளங்குகின்றன. விமலாதித்தா நான் மத்திய அரசின் அதிகாரங்களைக் குறைத்துக் கிராம ஆட்சியின் அதிகாரங்களைப் பெருக்கி இருக்கிறேன். எங்கள் நாட்டில் "தாசி லோலர்களையும், கள்ளுக்குடியர்களையும் தேர்தலுக்குத் தகுதியற்றவர்கள் என்று தள்ளி விடுகிறோம்" என்று கூறுகிறான்.

குந்தவி விமலாதித்தனிடம் "வேங்கி இளவரசே, உமக்கும், எனக்குமுள்ள உறவு என்ன தெரியுமா எனக் கேட்கிறாள். அதற்கு விடையாக விமலாதித்தன் "உயிருக்கும், உடலுக்குமுள்ள உறவென்ன? உணர்ச்சிக்கும், உடலுக்குமுள்ள உறவென்ன? பூவிற்கும், மணத்திற்கும் உள்ள உறவென்ன? அதே உறவுதான் எனக்கும், உனக்கும்" என்கிறான்.

பிறிதொரு சமயம் விமலாதித்தன் குந்தவியிடம் "காதலின் பெருமை அளவிட முடியாது! உயிரை அள்ளும் ஓவியம் காதல்! உணர்ச்சியின் கோபுரம் காதல். கவிஞர் கவிதைக்கும், கலைஞர் கற்பனைக்கும் உரமளித்தது காதல். இக்காதலின் பெருமையைக் கனிந்து பாட எழுந்தவையே பஞ்ச காவியங்கள். நம் அகத்தில் ஊறும் இக்காதலின் இலக்கணத்தைக் காட்ட வரைந்தவையே அகத்திணை நூல்கள்.

உஷையின் காதலும், உமையவனின் காதல் தியானமும் கொள்ளை கொள்ளாத கவிஞர் உள்ளமே கிடையாது. முல்லை நிலத் தலைவனான கண்ணன் நப்பின்னையை நாடியதும் இக்காதலினாலே! இக்காதலை வேண்டிய பர்வத்ராஜன் குமாரியான பார்வதியும், கைலாசநாதனை நோக்கிக் கடுந்தவமிருந்தாள். யமுனா நதி தீரத்தில் யசோதை பெற்றெடுத்த செல்வனின் காதலுக்கு ஏங்கிய ராதையும் காத்திருந்தாள். கற்ற கலைகள் யாவும் கரைந்தோடக் கடைசியில் கச்சன் நெஞ்சில் எஞ்சி நின்றதும் இக்காதல் ஒன்றே! பிக்ஷுணியாகவே மனம் கொண்ட மணிமேகலையின் துறவு உள்ளத்தையும் துடிக்கச் செய்தது. இக்காதல் உள்ளத்தில் ஊறும் உண்மையான காதலுக்கு நிகரானது. இந்தப் பூமியில் ஒன்றுமே இல்லை. அந்தக் காதல் மண் நிலத்தை விட விசாலமானது. வானை விட உயர்ந்தது! கடலை விட ஆழ்ந்தது!

காதலின் பெருமையை இராமநாதன் விமலாதித்தன் மூலம் வெளிப்படுத்துகிறார்.

இராஜராஜன், இராஜேந்திரன், விமலாதித்தன், குந்தவி ஆகிய நான்கு பாத்திரங்களும் நாடகம் பார்ப்பவர்களின் உள்ளத்தைக் கவர்ந்து விடுபவை என்பதில் ஐயமில்லை.

தொடரும்.....

# எண்ணூர் துறைமுகம் நவீனமயம்



எண்ணூர் காமராசர் துறைமுகத்தில் ரூ.725 கோடியில் அதிநவீன சரக்கு பெட்டக முனையம், ரூ.151 கோடியில் சரக்கு முனையம், சரக்கு ரெயில் பாதை, மின்னணு அலுவலகம் ஆகியவற்றை 09.06.2017 அன்று நடைபெற்ற வண்ணமிகு விழாவில் மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவில் மத்திய அமைச்சர் திரு.பொன். ராதாகிருஷ்ணன், மாநில அமைச்சர்கள் திரு.ஜெயக்குமார் மற்றும் திரு பென்சமின், சென்னை துறைமுக பொறுப்புக் கழக தலைவர் திரு.எம்.ஏ.பாஸ்கராச்சார், செட்டிநாடு குழும மேலாண் இயக்குநர் திரு.எம்.ஏ.எம். ஆர்.முத்தையா (எ) அய்யப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# காஞ்சி ஸ்ரீ மகாசுவாமிகள் வாழ்வில்...

## கற்கண்டு மலையில் ஒரு சிறுதுளி

படமாடும் கோயில் பகவர்க்கு ஒன்று ஈயில்
நடமாடும் கோயில் நம்பர்க்கு அங்காகா
நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோயில் பகவர்க்கு அஃது ஆமே

என்பார் திருமூலர். நாயன்மார்கள் வரிசையிலும் சித்த புருஷர்கள் வரிசையிலும் இடம்பெற்ற திருமூலர் சொன்ன இப் பாடலின் கருத்து...

"கோயிலில் இருக்கும் தெய்வத்திற்கு ஒன்று செய்தால், அது ஏழை எளியவர்க்கு வந்து சேராது. ஆனால் ஏழை எளியவர்க்கு ஒன்று செய்தால், அது தெய்வத்திற்கே செய்தது போலாகும்".

இதை நடைமுறைப்படுத்திக் காட்டியவர் காஞ்சீ ஸ்ரீ மகாசுவாமிகள். இத் தகவலைத் தான் அனுபவித்ததோடு, வெளிப்படுத்தியவர், பிரபல எழுத்தாளரும், பத்திரிகைத் துறையில் நன்கு அனுபவப்பட்ட வருமான திரு.தாமரை மணாளன் அவர்கள். திருநெல்வேலிப் பகுதியில் ஸ்ரீமகாசுவாமிகள் யாத்திரை மேற்கொண்டிருந்த சமயத்தில்,ஓரிடத்தில் இருந்து மற்றோரிடத்திற்குப் புறப்பட்டார். பரி வாரங்கள் பின்தொடர, மாலை நான்கு மணியளவில் தொடங்கிய பயணம் ஆறு மணியளவில் மற்றோரிடத்தில், தங்கிப் பூஜை செய்வதற்காகப் போய்க் கொண்டிருந்தது ஐந்து மணியளவில்...

மிகவும் எளிமையான ஒரு கிராமத்து சேரிப்பகுதியைக் கடக்கும் போது, அங்கே கூட்டமாய்க்கூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிறுவர் சிறுமியர்களின் மீது ஸ்ரீமகா சுவாமிகளின் கனிந்த பார்வை பதிந்தது. அவ்வளவு தான்! உடனே பரிவாரங்களை நிற்கச் சொல்லி,தானும் அங்கயே நின்று விட்டார். கூட வந்தவர்களுக்கோ அவசரம்;' இப்படியே வேகமாகப் போனால் தான், ஆறு மணிக்குள் போய்ச்சேர்ந்து பூஜை தொடங்கச் சரியாயிருக்கும். ஆனாலும் என்ன செய்ய? பெரியவா நிக்கச் சொல்லிட்டா!" என்ற பரபரப்போடு பரிவாரங்கள் இருந்தன.

அது எதையுமே லட்சியம் செய்யாத ஸ்ரீமகாசுவாமிகளோ, அந்த சேரிக் குழந்தைகளைத் தன்னருகில் வரவழைத்து அவர்களிடம் பேசிச் சிரித்து, கதை சொல்லி அளவளாவ ஆரம்பித்து விட்டார். (அதற்கிடையில் தன் காரியஸ்தர் காதில் ஏதோ சொல்ல, காரியஸ்தர் உடனே ஒரு வாகனத்தைப் பிடித்துப் பறந்து விட்டார்.)

நேரம் போய்க் கொண்டிருந்தது. மாலை ஆறுமணியை நெருங்கியது. ஸ்ரீமகாசுவாமிகளோ எதைப்பற்றியும் பொருட்படுத்தாமல், ஏழை எளிய சிறுவர்சிறுமியரிடம் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார். குழந்தைகளுக்கோ ஆகாயத்தில் உள்ள முழுநிலவு பூமிக்கு இறங்கி வந்து, தங்களுக்கு விளையாடக் கிடைத்து விட்டதைப் போல உற்சாகப் பரவசமாக இருந்தது.

ஆறு மணியைத் தாண்டியதும்... காரியஸ்தர் திரும்பி ஒரு பெரிய மூட்டையுடன் வாகனத் திலிருந்து இறங்கினார். அந்த மூட்டைக்குள் இருந்தவை... அங்கிருந்த அத்தனை சிறுவ சிறுமியருக்குமான 'ரெடிமேட்' ஆடைகள். ஆம்!

அந்தக் குழந்தைகள் நல்ல துணியின்றி அரைகுறை ஆடையோடும் கந்தலான ஆடை யோடும் நின்றதைப் பார்த்ததும் ஸ்ரீமகாசுவாமி களால் அந்த இடத்தை விட்டு நகர முடிய வில்லை. உடனடியாக அவர்களுக்கு, துணிகளை வரவழைத்து அணியச் செய்து, அதைப் பார்த்து மகிழ்ந்தார் அவருடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர்!

அந்த நேரத்தில் பரிவாரங்களில் ஒருவர் ஸ்ரீமகாசுவாமி களை நெருங்கி, பக்கத்து ஊரில் ஏற்பாடாகியிருந்த தெய்வ பூஜையை நினைவுபடுத்தினார். "அதுதான் பூஜை, இங்கேயே ஆகிவிட்டதே!" எனப் பதில் அளித்தார் ஸ்ரீமகாசுவாமிகள்.

'ஏழைகளுக்குச் செய்யும் பணியே,இறைவனுக்குச் செய்யும் பூஜை' என்று உணர்த்தியவர் ஸ்ரீமகாசுவாமிகள்.

**- பி.என்.பரசுராமன்**



"லட்டு" என்றாலே நினைவுக்கு முதலில் வருவது திருப்பதிதான்! திருப்பதி லட்டு என்றவுடன் வாயில் தானாகவே தேனூறும். திருப்பதியும் லட்டும் பிரிக்க முடியாத ஒன்றாகும்!

திருப்பதி லட்டு என்பது நமது நாட்டில் மட்டும் அல்லாது, வெளி நாடுகளிலும் மிகப் பிரபலமான உலகம் தழுவிய பெருமையும் புகழும் பெற்றது. அதன் சுவையும் மணமும் மறக்க இயலாதது.


திருமலை திருப்பதி செல்கிறோம். எல்லாம் வல்ல பெருமாளை வணங்கு கிறோம். அத்துடன் நம் வீட்டிற்குத் திரும்பி விட்டால் அந்தப் பயணம் நிறைவு பெறாது! பெருமாளின் பிரசாதமான அந்த லட்டைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினால்தான் அது திருப்தியான திருப்பதிப் பயணமாகும்! லட்டு

தெரிந்ததும் தெரியாததும்



# அறுசுவை லட்டும் அணையா விளக்கும்

R.மீனாட்சி, கோட்டையூர்



வாங்காமல் திரும்புவர்கள் எவருமே இருக்க மாட்டார்கள். அப்படித் திரும்பினால் மனநிறைவும் இருக்காது. பெருமாளின் பிரசாதத்தை வாங்கி வந்து அதைப் பலருக்கும் கொடுத்து மகிழ்வார்கள். அப்படிப்பட்ட அறுசுவை லட்டுக்குப் பின் எத்துணை விஷயங்கள் இருக்கின்றன தெரியுமா? தெரிந்து கொள்வோம் வாருங்கள்!

வெங்கடேசப் பெருமாளுக்குத் தினமும் நைவேத்தியம் செய்யப்படும் உணவுப் பொருட்களுள் லட்டுதான் மிக முக்கியமானது. தோசை, வடை, அப்பம் போன்ற உணவு பொருட்கள் படைக்கப்பட்டாலும், லட்டு மட்டும் நிரந்தரமான நைவேத்தியப் பொருளாக நாள்தோறும் தினமும் தவறாமல் நைவேத்தியம் செய்யப்படுகிறது.

எவ்வளவு ஆண்டுகளாக இந்த லட்டு விநியோகம் நடைபெற்று வருகிறது என்பதை எவராலும் துல்லியமாகச் சொல்ல இயலவில்லை என்றாலும், இதன் சரித்திரம் 300 ஆண்டுகட்கும் முற்பட்டது என்றும், சுமார் 300 ஆண்டுகளாக இது தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும் என்கிறார்கள்.

அன்றைய காலங்களில் திருமலைக்குத் தரிசனம் செய்ய வருபவர்கள் உணவு அருந்திட உணவு விடுதிகளோ, ஹோட்டல்களோ இல்லை. அவர்களுக்குப் பிரசாதங்களே உணவாக வழங்கப்பட்டன. அந்தக் காலக்கட்டத்தில் முதன் முறையாக 02.08.1715 இல் தான், அதாவது, 300 ஆண்டுகட்கு முன் பூந்தி எனும் வடிவில் இத்தகு இனிப்புகள் வழங்குவது தொடங்கப்பட்டது.

பல்லவ மன்னர்கள் காலத்தில் ஆரம்பிக்கப் பட்டு பெருமாளுக்கு இனிப்பு பூந்தியாக நைவேத்தியம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வந்த இது, அதன்பின் விஜய நகர தேவராய மன்னர்கள் காலத்தில் விரிவுபடுத்தப்பட்டு இறைவனைக் காண வரும் அத்துனை பேருக்கும் பிரசாதமாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால், அந்த பூந்தி, லட்டு வடிவமாக உருவகம் எடுத்தது 1940ஆம் ஆண்டு முதல்தான்!

இந்த லட்டு சாம்ராஜ்யத்திற்கு மூளை யாகவும், இதன் வடிவமைப்பாளராகவும் இருந்தவர் கல்யாணம் அய்யங்கார் என்பவர். இவருக்கு இந்தப் பெயர் ஏற்பட்டதன் காரணம், இவர் ஏழை எளிய மக்களிடம் மிகுந்த அன்பு கொண்டு, தேவைப்பட்ட ஏழைகளின் கல்யாணத்திற்குத் தாலி செய்து இலவசமாக வழங்கி வந்தவர். அவர்கள் கல்யாணத்திற்கு உதவிகள் பல செய்து பல கல்யாணங்களைச் செய்து வைத்ததால், ராஜாஜி அவர்கள் அவருக்கு இந்தப் பெயரைச் சூட்டி உள்ளார். இவருடைய நூற்றாண்டு விழா சமீபத்தில்தான் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இவர் நினைவாக இன்றளவும் திருமலையில் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படு கின்றன.

இவர் தலைமையில், வழிகாட்டுதலில் நூற்றுக்கணக்கானவர்கள் வேலை செய்து இந்த லட்டு சாம்ராஜ்யத்தை 1940இல் துவக்கி



யுள்ளனர். அது இன்று பல ஆயிரம் பேர் வேலை செய்து பல லட்சம் லட்டுகள் நாள்தோறும் உருவாக்கப்பட்டு விநியோகம் செய்யும் அளவு விரிவடைந்துள்ளது.

உலகப் பிரசித்திப் பெற்ற இந்த லட்டுகள் செய்வதற்கு என்று தனியாக மிகப்பெரிய பிரம்மாண்டமான சமையல் அறை உள்ளது. இது முற்றிலும் நவீன மயமாக்கப்பட்ட இயந்திர மயமான சமையல் அறை (Mechanised Kitchen) ஆகும். இதில் முதலில் தயாரிக்கப்படும் பூந்தி கன்வெயர் பெல்ட் மூலம் பல பகுதிகளைக் கடந்து பல நிலைகளைத் தாண்டி இறுதியில் லட்டு வடிவம் பெறுகிறது.

இதில் தினமும் ஷிப்டு முறையில் ஊழியர்கள் 24 மணிநேரமும் பணிபுரிகிறார்கள்.



சுமார் 200 பிராமண அர்ச்சகர்கள் இந்த லட்டைத் தயாரிக்கின்றனர். இவர்கள் குடும்பம் குடும்பமாக தன் தந்தை பாட்டன் தலைமுறை காலத்தில் இருந்து வழிவழியாக இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த லட்டு தயாரிப்பதில் இவர்கள் கை தேர்ந்தவர்கள். இவர்கள் கைமணத்தில் உருவாகும் இத்திருப்பதி லட்டின் சுவை வேறு எந்த லட்டிலும் கிடைப்பதில்லை.

500 அடி நீளமும், 30 அடி அகலமும் கொண்ட மிகப்பெரிய நீண்ட ஸ்டீல் மேஜையில், இந்த 200 பிராமண அர்ச்சகர்களும் CCTV கேமிராக்கள் கண்காணிப்பின் கீழ் வேலை செய்கிறார்கள்.

நாள்தோறும் திருமலைக்குச் சுமார் 50,000 முதல் ஒரு லட்சம் பக்தர்கள் வரை வந்து குவிகிறார்கள். பண்டிகை நாட்கள், உற்சவ தினங்கள், திருவிழாக் காலங்களில் இது இன்னும் அதிக எண்ணிக்கையில் இருக்கும். இவர்களுக்காகத் தினமும் 1,50,000 லட்டுகள் தயார் செய்து விநியோகிக்கப்படுகின்றன. இந்த அளவு தயாரிக்கப்படும் லட்டுகளில் ஏலக்காய், முந்திரி, உலர்ந்த திராட்சை, பாதாம், சர்க்கரை, உயர்ந்த ரக தூய்மையான நெய் எல்லாம் சரியான பக்குவத்தில் சரியான விகிதத்தில் சேர்க்கப்படுகின்றன.

நாள்தோறும் 10 டன் கடலை மாவு, 10 டன் சீனி, 700 கிலோ முந்திரிப் பருப்பு, 150 கிலோ ஏலக்காய், 50 கிலோ உலர்ந்த திராட்சை, 30 கிலோ பாதாம், 500 கிலோ கற்கண்டு மற்றும் 500 லிட்டர் சுத்தமான நெய் ஆகியவற்றால் தனிச்சுவையுடன் தயாரிக்கப்படும் லட்டுகள் தினமும் நைவேத்தியம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இத்தகு பொருட்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை டெண்டர் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன. இத்தகு பொருட்கள் வாங்கிட 300 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது.

தற்சமயம் லட்டுகள் இரண்டு விதமாகச் செய்யப்படுகின்றன. 175 கிராம் எடையில் செய்யப்படும் லட்டு 25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இத்தகைய எடை உள்ள லட்டுகளே மிக அதிக அளவில் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. 750 கிராம் எடையில் செய்யப்படும் பெரிய லட்டு கல்யாண லட்டு என அழைக்கப்படுகிறது. இதன் விலை நூறு ரூபாய் ஆகும். இது கல்யாண உற்சவம் செய்பவர்களுக்கும், மற்ற உற்சவதாரர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இந்த லட்டுகளை எல்லாம் பக்தர்களுக்கு விநியோகம் செய்ய மட்டும் 600 கோயில் ஊழியர்களுடன், 200 பக்த சேவகர்களும் ஈடுபட்டுத் தினமும் பணிபுரிகின்றனர். இதற்காக என்றே தனி விநியோக வளாகம் திறக்கப்பட்டு இதில் 60 கவுண்டர்களில் லட்டு விநியோகம் செய்யப்படுகிறது.

சில ஆண்டுகட்கு முன் வரை பணம் கொடுத்தாலே லட்டு கிடைக்கும் என்று இருந்த நிலை மாற்றப்பட்டு, 2013 முதல்

இலவசமாக லட்டுகள் கொடுக்கப்படும் முறையை தேவஸ்தானம் கொண்டு வந்தது. காலம் காலமாக இருந்து வரும் மிகப் பழைய வழக்கமான கால்நடையாக நடந்து படியேறி திருமலைக்கு வரும் நடைபாதை வழி பக்தர்களுக்கு என்று இலவசமாக ஒரு லட்டு கொடுத்து அதை ஊக்குவிக்க ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், இப்போது எல்லா பக்தர்களுக்குமே விரிவாக்கம் செய்யப்பட்டு இலவசமாக ஒரு லட்டுப் பிரசாதம் என்ற கொள்கை அடிப்படையில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. அதற்கு மேல் லட்டுக்களைப் பெற விரும்பினால் அதன் விலையான 25 ரூபாய் கொடுத்துப் பெற்றுச் செல்ல வேண்டும்.

2010 ஆண்டு முதல் கோயில் தரிசன டிக்கெட்டுகள் ஆன்லைன் மூலம் பதிவு செய்து கொள்ள வசதி செய்யப்பட்டது. தற்சமயம் லட்டுகளையும் ஆன்லைன் மூலம் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

காலப்போக்கில் லட்டின் சுவையும், லட்டின் அளவும், எடையும் குறைந்து போனது என்ற குற்றச்சாட்டுக்களும் உண்டு. இருந்தாலும், இவ்வளவு லட்சம் பக்தர்களுக்குப் பிரசாதம் இப்படி வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையுடன், தினமும் வரும் பக்தர்கள் அனைவரும் ஒன்று அல்லது இரண்டு லட்டுக்களையாவது பெற்றுத்தான் வீடு திரும்ப வேண்டும் என்பதே எங்கள் நோக்கம் என்ற தேவஸ்தானத்தின் கூற்று, குறைகளைப் புறம் தள்ளி விடுகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

"லட்டு தயாரிப்பு என்பது ஒரு கலை. இயன்ற வரை அதன் சுவையை நிலைநாட்டிட, வேண்டிய முயற்சிகள், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் இங்கு தயாரிக்கப்படும் லட்டுகளின் தரமும், தேவஸ்தான Food Lab மூலம் அவ்வப்போது பரிசோதிக்கப்படுகிறது" என்கிறார்கள் தேவஸ்தான நிர்வாக அதிகாரிகள்.

திருப்பதி லட்டின் சுவை அதன் சுவைக்காக மட்டுமல்லாது பெருமாளின் பிரசாதம் என்பதாலேயே அதன் தனிச்சுவை மேலோங்கி நிற்கிறது என்றும் சொல்ல வேண்டும்.

"திருப்பதி பிரசாத லட்டுகள்" என்ற பெயரில் போலி லட்டுகளும் வெளிச்சந்தைகளில் வெளியூர்களில் விற்பனைக்கு வந்து மக்களை ஏமாறச் செய்தன. இதைத் தடுக்கவும் உலகளாவிய உயர் தகுதியை நிலை நிறுத்தவும் காப்புரிமை GI (Patent Right) 2009இல் வாங்கப்பட்டது.

திருப்பதி திருமலை கோயில் வளாகம் தவிர, சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் போன்ற இந்தியப் பெருநகரங்களிலும், UK. USA போன்ற வெளிநாடுகளிலும் திருப்பதி கோவில் தேவஸ்தானத்தால் நிறுவப்பட்டு, நிர்வகிக்கப்படுகின்ற வெங்கடாஜலபதி பெருமாள் ஆலயங்களிலும் இந்த லட்டு விற்கப்படுகிறது.

இந்தியாவிலேயே மிக அதிக செல்வச் செழிப்பு மிக்க பணக்காரக் கோயில் என்ற பெயர் பெற்ற திருப்பதி கோயிலுக்கு, தரிசன நுழைவுச் சீட்டு, உற்சவ டிக்கெட்டுகள், உண்டி இவற்றின் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு அடுத்தபடியாக லட்டு விற்பனையில் அதிக வருமானம் கிடைக்கிறது. 2016 – 17 ஆண்டுக்கான கோயில் நிதி நிலை அறிக்கையில் கோயிலின் வருமானம் சுமார் 1000 கோடி என மதிப்பிடப்பட்ட நிலையில், லட்டு விற்பனையில் மட்டும் 175 கோடி வருமானம் கிட்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் லட்டு விற்பனை 20 முதல் 30% வரை அதிகமாகிக் கொண்டே வருகிறது.

அமோக ஆதரவு பெற்று பல நூறு கோடி ரூபாய் வருமானத்தை ஈட்டினாலும் இந்த லட்டு விற்பனையில் தேவஸ்தானத்திற்கு நஷ்டமே ஏற்படுகின்றது என்பது பலருக்கும் தெரியாத உண்மை! வியப்பாக இருக்கிறது அல்லவா? ஆமாம், 2016ஆம் ஆண்டு 10 கோடி லட்டுகள் விற்பனை செய்யப்பட்டாலும், தேவஸ்தானத்திற்கு 140 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது!

இதற்கான காரணங்கள் என்ன தெரியுமா?

ஒரு லட்டு செய்வதற்கான அடக்கவிலை 33 ரூபாய் ஆகும். ஆனால், அது சலுகை விலையில் 25 ரூபாய்க்குத்தான் விற்பனை செய்யப்படுகிறது. அது மட்டுமல்ல, வரும் பக்தர்களுக்கு எல்லாம் ஒரு லட்டு இலவச விநியோகம் என்ற முறை ஆரம்பிக்கப்பட்டதும் இதற்குக் காரணமாகும்.

காரணம் எதுவாக இருந்தாலும், லட்டு விற்பனையில் நஷ்டமே ஏற்பட்டாலும் பரவாயில்லை, பெருமாளைக் கண்டு தரிசித்து வீடு திரும்பும் பக்தர்கள் திருப்தியாக ஓரிரு லட்டுக்களையாவது பிரசாதமாக எடுத்துச் செல்ல வேண்டும். இது கடவுளின் பரிசு!

மிகப்பெரிய பிரபலமான கோயில் என்றும், உலகில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் அதிக வருவாய் உள்ள கோயிலாகவும் கருதப்படும் திருப்பதி கோயிலுக்கு வரும் மொத்த வருமானத்தில் இந்த நஷ்டத் தொகை ரூபாய் 140 கோடி ஒன்றும் பெரிய இழப்பு அல்ல. இது பக்தர்களுக்கு என்று மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்று என்ற கொள்கையுடன் தேவஸ்தானம் செயல்பட்டு வருகிறது. நஷ்டத்தை ஈடுகட்ட லட்டின் விலையை சிறிது அதிகரிப்பது என்பதும் அல்லது லட்டின் அளவை (size) எடையை இனி குறைப்பதும் என்பது இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இனிப்பான திருப்பதி லட்டு பற்றிய செய்திகளைத் தெரிந்து கொண்டு சுவைத்தோம். இன்னுமொரு தெரியாத செய்தி ஒன்றையும் தெரிந்து கொள்வோம்.

திருமலையில் வெங்கடேசப் பெருமாள் மூலவர் சிலைக்கு அருகில் எண்ணெயில் எரியும் விளக்கு ஒன்று உள்ளது. இது அணையா விளக்கு. காலம் காலமாக தொடர்ந்து சுடர்விட்டுக் கொண்டு வருகிறது. முதன் முதலில் இது எப்போது ஏற்றப்பட்டது என்பது எவருக்கும் தெரியவில்லை. ஆனால், சுமார் 1000 ஆண்டுகட்கு முன்பே அல்லது அதற்கும் முன்பிருந்தே இது ஏற்றப்பட்டு இன்றும் அணையா விளக்காகத் தொடர்ந்து பெருமாளுக்கு முன் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ■



காரைக்குடி விஜயா பேங்க் **மெய்யப்பன்** அவர்களின் மகளும், ஆத்தங்குடி அரசு நாச்சியப்பன் மருமகளுமாகிய **M.சாந்தி** Customs & Central Excise ல் Superintendent ஆகப் பதவி உயர்வு பெற்று சென்னை Directorate of Revenue Intelligence (DRI) ல் பொறுப்பேற்றிருக்கிறார்கள். அவர்கள் பணி சிறக்கவும், நகரத்தார் சமூகத்திற்கு பெருமை சேர்க்கவும் வாழ்த்துகிறோம்.

## சுவீகாரத்திற்கு ஆண் /பெண் குழந்தை தேவை

இளையாற்றங்குடி பட்டினசாமி பிரிவை சேர்ந்த குடும்பத்திற்கு 5 முதல் 10 வயதிற்கு உட்பட்ட ஆண்/பெண் குழந்தை சுவீகாரத்திற்கு தேவை. எந்த கோவில் எந்த பிரிவும் சம்மதம்

தொடர்புக்கு : 84899 36944

ADVT

## சுவீகாரத்திற்கு தேவை

15வயது முதல் 20 வயதுக்கு உட்பட்ட சூரக்குடி கோவிலை சேர்ந்த நன்கு படித்து கொண்டிருக்கும் நல்ல குணமான பையன் சுவீகாரத்திற்கு தேவை

தொடர்புக்கு : 9095221746

ADVT

## கல்வி உதவித்தொகை

+2வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று நிதி நிலை காரணமாக மேற்படிப்பு தொடர இயலாத நகரத்தார் மாணவ, மாணவியர் நிதி உதவி பெற 31.07.2017க்குள் முழு விவரங்களுடன் ரூ.5 தபால்தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட கவருடன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

முகவரி: இரா.ராஜேந்திரன்,
T1, 3வது மாடி, ஜெய் பார்க் கேசல்
4/8 டர்ன்புல் சாலை, நந்தனம்
சென்னை 600035




மலேசியா நாட்டின் பினாங்கில் தைப்பூசம் ஆண்டுதோறும் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. நகரத்தார்கள் எடுக்கும் காவடி, வெள்ளி ரதம் வெகு சிறப்பாக இருக்கும். நகரத்தார் மற்றும் ஏராளமான இந்திய மக்களுடன் சீனர்களும், மலேசியர்களும் அலகு குத்தி காவடி எடுத்து வரும் காட்சிகளும், பல்லாயிரக் கணக்கில் தேங்காய் உடைக்கும் வைபவமும், பினாங்கு நகரமே விழாக் கோலம் பூண்டிருப்பதையும் காணக் கண் கோடி வேண்டும்.

கடந்த 39 ஆண்டுகளாக லியோ டிராவல்ஸ், புதுவயலைச் சேர்ந்த திரு. சுப்பு அவர்கள் டூர் மூலம் நகரத்தார்களை மட்டும் அழைத்துச் சென்று வருகிறார். எதிர்வரும் தைப்பூசத்திற்கும் சென்று வர தற்போதே ஏற்பாடு செய்து வருகிறார்.

தைப்பூசத்திற்கு பினாங்கு செல்ல விருப்பம் உள்ளவர்கள் 98424 54314, 0431 2411444 எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## கல்வி உதவி கோரிக்கை

கோனாபட்டு இளையாற்றக்குடி கோவில் கழனிவாசல் பிரிவைச் சேர்ந்த செல்வன் எஸ்.கற்பக கணேஷ் தனது 9 வயதில் தந்தையை இழந்தவர். தாயின் பாராமரிப்பில் படித்து +2 தேர்வில் 1063 மதிப்பெண்கள் பெற்று தேறிய அவர் மேற்படிப்பிற்கு நிதியுதவி கோரியுள்ளார். நிதி வழங்க விருப்பம் உள்ளவர்கள் 99422 69964 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.


Haganlal
Diamonds & Gold
KARAIKUDI | CHENNAI
KARAIKUDI - 51, AVM building, Kallukatti North, Karaikudi - 1
04565 234581/28342888
CHENNAI - 27/43, North Usman Road, T.nagar, Chennai - 17
044 28341333/28342888



# கண் சிறப்பு மருத்துவர் ஜே.அருண்குமார்: ஓர் சந்திப்பு

மருத்துவப் பணி மகத்தான பணி.

மருத்துவரை மக்கள் மகேசனுக்கு அடுத்த நிலையில் வைத்துப் பார்க்கின்றனர். இந்த சிறப்பை மருத்துவர்கள் தங்கள் உன்னதப் பணி மூலம் பெற்றுள்ளனர். அந்த வகையில் கண் சிறப்பு மருத்துவர் ஜே. அருண்குமார் அவர்கள் தன்னலமற்ற பணியால் மக்களின் மனம் கவர்ந்த மருத்துவராகத் திகழ்கிறார்.

கண் மருத்துவத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டு சாதனைகள் படைத்து வரும் டாக்டர் ஜே. அருண்குமார் அவர்களை 'நமது செட்டிநாடு' இதழுக்காக சிறப்பு பேட்டி கண்டோம். பேட்டியிலிருந்து,

செட்டிநாட்டுப் பகுதியின் நடுநாயகமாக அமைந்திருக்கும் ஆத்தங்குடி பல இலக்கிய வாதிகளையும், கவிஞர்களையும், கல்வியாளர்களையும், தொழில் அதிபர்களையும் தந்த ஊர். "ஆன்மீக ஆத்தங்குடி" என்றே நாம் அடைமொழி கொடுத்து அழைக்கும் தன்மை வாய்ந்த ஊர்.

இந்த ஊரில் வயிரவன் கோவிலைச் சேர்ந்த வீர.சு.ராம. அருணாசலம் செட்டியாரின் மகன் வழிப்பேரன் டாக்டர் அருண்குமார். கண்டரமாணிக்கம் லெ.அழகுசுந்தரம் செட்டியாரின் மகள் வழிப்பேரனும் ஆவார். இவர் இயல்பாகவே அதிக ஆன்மிக ஈடுபாடு கொண்டவர்.

தந்தை ஜம்புலிங்கம் செட்டியார், தாய் இலக்குமி ஆச்சி. இருவரும் முதுநிலைப் பட்டதாரிகள். முதிர்ந்த வயதிலும் சுறுசுறுப்புடன் உள்ளனர். இவர்கள் இருவரும் மருத்துவமனை பராமரிப்பில் டாக்டருக்கு உதவியாக உள்ளனர்.

நாட்டரசன்கோட்டை ஆதி.கண. அண்ணாமலை செட்டியாரின் அருந்தவப் புதல்வி கீதா இவரது அருமை மனைவி ஆவார்.

இந்தத் தம்பதிக்கு அண்ணாமலையான் என்ற மகனும், மகாலெட்சுமி என்ற மகளும் உள்ளனர். டி.ஏ.வி. பள்ளியில் படிக்கின்றனர். படிப்பில் படுசுட்டியாக உள்ளனர்.

டாக்டர் அருண்குமார் அவர்களும் சென்னை கோபாலபுரம் டி.ஏ.வி பள்ளியில் படித்து 10வது மற்றும் 12வது வகுப்பில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றவர்.

பின்னர் அகில இந்திய அளவிலான மருத்துவக் கல்லூரித் தேர்விலும், கர்நாடக மாநில நுழைவுத் தேர்விலும் வெற்றி



பெற்று சாதனை படைத்தார். பின்னர் மங்களூர் கஸ்தூரிபா மருத்துவக் கல்லூரியில் தகுதி அடிப்படையில் இடம் கிடைத்து, அங்கு படித்து உயர்நிலையில் (Distinction) தேர்ச்சி பெற்றார். பின்னர் மதுரை அரவிந்த் மருத்துவ மனையில் பட்ட மேற்படிப்பு MS Ophthalmology படித்ததோடு, கருவிழி சிறப்பு நிபுணராகவும் Fellowship in Cornea தேர்ச்சி பெற்று அதனைத் தொடர்ந்து DNB (Diplomate National Board)-லும் தேர்ச்சி பெற்று பட்டத்தைப் பெற்றார்.

தொடர்ந்து அரவிந்த் மருத்துவமனை நல்லுறவோடு கண் மருத்துவத் துறையில் முன்னேறி, இவற்றிற்குச் சிகரம் வைத்தாற்போல் அமெரிக்காவில் உள்ள மிக உயர்ந்த கண் பயிற்சி மையமான John Moran Eye Centre, Utah, U.S.A.-வில் Fellow of the International Council of Ophthalmology and Eye Transplantation Fellowship என்ற உயரிய பட்டத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர், மாநில தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெற்ற மருத்துவ மாநாடுகளில் கலந்து கொண்டு ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித் துள்ளார்.

குறுகிய காலத்தில் சிறிய வயதில் தனது 20 ஆண்டு பணிக்காலத்தில் இத்தகைய சாதனை படைத்த இவருக்கு பள்ளியில் படிக்கும் போதே அறுவை சிகிச்சை நிபுணராக வரவேண்டும் என்ற உந்துதல் தனக்குள்ளே இருந்தது. அதை திட்டமிட்டு வளர்த்து கண் மருத்துவத்தில் பல பட்டங்கள் பெற்றுள்ளார். இன்றளவும் கல்லாதது உலகளவு என்ற கோட்பாட்டிற்கு இலக்கணமாக, அமைதியாக ஆரவாரமின்றி அவர் செயல்புரியும் பாங்கு நம்மைக் கவர்கிறது.

அரவிந்த் மருத்துவமனையையும், அதன் நிறுவனர் டாக்டர் வெங்கடசாமி அவர்களையும், டாக்டர் நாச்சியார் அவர்களையும் தனது மருத்துவ தொழிலின் வழிகாட்டிகளாக போற்றிப் புகழும் டாக்டர், அரவிந்த் மருத்துவமனையில் பத்தாண்டுகள் பணியாற்றியுள்ளார். அந்த அமைப்பின் தேனி மருத்துவமனையில் தலைமை மருத்துவராக சிறப்பாகச் சேவை புரிந்துள்ளார்.

அதன் பின்னர் சென்னை அண்ணா நகர் வாசன் கண் மருத்துவமனையில், தலைமை மருத்துவராகப் பணியாற்றிய போது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறினார்.

சென்னை, மாதவரத்தில் வாழும் ஆந்திராவைச் சேர்ந்த கிஷோர் அனிதா தம்பதிகளுக்குப் பிறந்த ஒரு மாதக் குழந்தையின் இரு கண்களும் மூடிய நிலையிலேயே இருந்தன.

அண்ணா நகர் வாசன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அக்குழந்தையைப் பரிசோதித்த டாக்டர் அருண்குமார் குழந்தையின் இரண்டு கண்களிலும் புரைநோய் தாக்கியிருப்பதைக் கண்டறிந்து, பெரியவர்களுக்குப் பொருத்தக் கூடிய லென்சுகளைப் பொருத்தி குழந்தைக்கு இரு கண்களிலும் பார்வை கிடைக்கச் செய்துள்ளார். இதன் மூலம் தென் இந்தியாவில் முதன் முறையாக, பிறந்து ஒரு மாதமே ஆன குழந்தைக்கு லென்சுகளை பொருத்தி சாதனை படைத்துள்ளார்.

பல மருத்துவமனைகள் இந்த அறுவை சிகிச்சையைச் செய்ய தயக்கம் காட்டிய போது டாக்டர் அருண்குமார் தனது நுட்பமான திறமையால் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்து சாதனை புரிந்துள்ளார்.

அரவிந்த் மருத்துவமனையில் பணியாற்றிய

## மருத்துவர் ஆலோசனைகள்

**இமைகள் ஒரே அளவில் இல்லாமல் ஒன்றை விட மற்றொன்று கீழிறங்கி இருந்தால் அந்தக் கண் சிறியதாகத் தோன்றும். பிறவியிலேயே இமைச்சரிவு ஏற்பட்ட குழந்தைகளுக்கு மூன்று வயதுக்குள் அறுவை சிகிச்சை மூலம் சரி செய்து விட்டால் பார்வை நரம்புகள் முழுமையாக வளர்ச்சி அடைந்து விடும்.**

**கண் வளர்ச்சிக்கு வைட்டமின் 'A' மிகவும் அவசியம். சில குழந்தைகளின் கண்கள் வெளுப்பாகவோ, இளஞ்சிவப்பாகவோ இல்லாமல் சற்று பழுப்பு நிறமாக இருக்கும். இது வைட்டமின் 'A' சத்துக் குறைவால் வருவதாகும். இதனால் கருவிழிகளும், விழித்திரையும் பாதித்து மாலைக் கண்நோய் உண்டாகும். அதனால், கேரட், பீட்ரூட், கீரை வகைகள், மீன் ஆகியவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.**

**அதிக நேரம் கணினி பயன்படுத்துவோர்க்கு கண் அழற்சி** (Computer Vision Syndrome) **ஏற்படும். சுத்தமான குளிர்ந்த நீரில் கண்களை அடிக்கடி கழுவ வேண்டும். ஒரு நிமிடத்துக்கு 10 அல்லது 15 முறை கண் இமைகளை மூடி மூடித் திறந்தால் கண்ணீர்சுரப்பிகள் நன்கு வேலை செய்யும்.** 20-20-20 **என்பது** rule. **அதாவது** 20 **நிமிடங்களுக்கு பிறகு 20 நொடி, 20 அடி தூரத்தில் உள்ள பொருளைப் பார்த்து** relax **செய்ய வேண்டும்.**

**கண்களில் அமிலம் பட்டால் உடனடியாக சுத்தமான நீரில் பத்து நிமிடங்கள் கழுவ வேண்டும். வாழ்க்கை முறையை பாதிக்கும்பொழுது கண்புரை பரிசோதனை செய்து அறுவை சிகிச்சை செய்து அதன் மூலம் பரிபூரண பார்வையை மீண்டும் பெற முடியும். கண்களின் உட்பகுதியில் திரவ அளவு அதிகமானால் அல்லது திரவம் வெளியேறும் நாளங்களில் தடை ஏற்பட்டால் குளுக்கோமா** (Glaucoma) **எனப்படும் கண் நீர் அழுத்த நோய் ஏற்படும். நீர் அழுத்த நோயை ஆரம்பத்திலேயே மருத்துவரிடம் சென்று கண்டறிந்து விட்டால் சொட்டு மருந்துகள் மூலம் கட்டுக்குள் வைத்துக் கொள்ளலாம்.**

போது பல கண் கருவிழி மாற்று அறுவைச் சிகிச்சைகளை (Eye Transplantation) வெற்றிகரமாக முடித்த பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார். நவீன லேசர் அறுவை சிகிச்சை மூலம் கண்ணாடி அணிவதை நீக்கி பார்வை பெறுவதற்கு உள்ள சிகிச்சையும் செய்து சிறந்த அனுபவம் பெற்றதோடு ஆயிரக்கணக்கான புரை நீக்க அறுவை சிகிச்சைகளையும் வெற்றிகரமாகச் செய்துள்ள இவர், இன்று சென்னை நகரில் மிகச் சிறந்த கண் மருத்துவர்களில் ஒருவராகத் திகழ்கிறார்.



Dr. J.அருண்குமார் குடும்பம்

இன்றைய வர்த்தக உலகில் புரை நீக்க அறுவை சிகிச்சை உடனடியாக செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் பலர் செய்து வரும் நிலையில், டாக்டர் அருண்குமார் தேவையுள்ளவர்களுக்கு தேவையான நேரத்தில் மட்டும் செய்து மருத்துவ உலகின் மாண்பினைக் காத்து வருகிறார்.

சென்னை வாழ் ஆத்தங்குடி நகரத்தார் மன்றம் 2015-லும், திருவான்மியூர் நகரத்தார் மன்றம் 2016 -லும் இவருக்கு சாதனையாளர் விருது அளித்துப் பாராட்டியதை நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறார்.

கடந்த ஓராண்டு காலமாக தனது சொந்த மருத்துவமனையை 68, (பழைய எண்.95) அபிராமபுரம் 4வது தெரு, சென்னை - 600 018-ல் நடத்தி வரும் டாக்டர் அருண்குமார் மேன்மேலும் பல்லாயிரக்கணக்கானோருக்கு கண் ஒளி வழங்கும் உன்னதப் பணியை சிறப்பாகச் செய்து சாதனைகள் பல படைக்க 'நமது செட்டிநாடு' சார்பாக வாழ்த்துகிறோம்.

தொலைபேசி தொடர்புக்கு : 044 2499 6957, 94442 22153

**சந்திப்பு : இல. பழனியப்பன்**

## கண் பாதுகாப்பிற்கு....

- சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள கண் பார்வை குறைபாட்டைப் பயிற்சிகளின் மூலம் சரி செய்யலாம் என பல பெற்றோர்கள் முயற்சி செய்கின்றனர். பயிற்சியை முறையாக தினசரி செய்து வந்தால்தான் அதற்கான பலன் கிடைக்கும். பயிற்சியை சரியாக செய்யவில்லை என்றாலும், பாதியில் விட்டுவிட்டாலும் கண் பார்வை கூடுதலாகப் பாதிக்கப்படும் நிலை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. முறையாக கண் பரிசோதனை செய்து கண்ணாடி அணிந்து கொள்வதுதான் நல்ல தீர்வாக இருக்கும்.
- கண்ணாடி அணிந்து கொண்டவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை கண் பரிசோதனை செய்து கொள்வது கண் பார்வை பாதுகாப்பிற்கு சிறந்தது.
- நாம் சூரிய நமஸ்காரம் செய்யும் பழக்கத்தை காலம் காலமாகக் கடைப்பிடித்து வருகிறோம். சூரியன் உதயமாகும் காலை நேரத்தில் வெளிர் சிகப்பு நிறமாக கதிர்கள் இருக்கும் போது சூரிய நமஸ்காரம் செய்வதுதான் கண்களுக்கு பாதுகாப்பானது. வலு கூட்டுவதும் கூட. வெறும் கண்ணால் சூரியனைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். வெப்பம் மிகுந்த கதிர்கள் விழித்திரையை தாக்கக் கூடும்.
- இரவு நேரங்களில் எதிர்வரும் வாகனங்களின் விளக்கு ஒளியால் கண் கூச்சம் உள்ளவர்கள் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் ஓட்டுவதை தவிர்க்க வேண்டும். தவிர்க்க இயலாத நிலையில் விளக்கு ஒளியை எதிர்கொள்ளும் “ஆன்ட்டி ரிப்ளக்ஷன் கோட்டிங்” கண்ணாடி அணிந்து கொண்டு ஓட்டுவது நல்லது.
- நீரழிவு நோய் (Diabeties) உள்ளவர்கள் கண் விழித்திரையை வருடம் ஒருமுறை அவசியம் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் நீரழிவு நோய் காரணமாக பார்வை இழப்பு ஏற்பட்டால் அது நிரந்தர பார்வை இழப்பாக இருக்க வாய்ப்புள்ளது ஆகவே, வருமுன் காப்பது நல்லது.
- 40 வயதுக்கு மேல் உள்ளவர்கள் அவசியம் (Glaucoma) கண் நீர் அழுத்த நோய் உள்ளதா என்று பரிசோதித்து சரி செய்து கொள்ள வேண்டும். பொதுவாக நம் நகரத்தார் இனத்தில் Glaucoma நோய் மற்ற இனத்தைக் காட்டிலும் அதிகமாக உள்ளது.
- இரு சக்கர வாகனம் ஓட்டுபவர்கள் கட்டாயம் முன்பக்கம் கண்ணாடியுடன் கூடிய தலைக்கவசம் (helmets) அணிவதுடன் கண்களில் தூசி படுவதைத் தவிர்க்க கண் கண்ணாடி அணிவது நல்லது.

## அறிவிப்பு

மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் சார்பாக ஆண்டுதோறும் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொது தேர்வில் (CBSC உள்பட) அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியருக்கு நிதியளித்து பாராட்டி வருகின்றனர். மார்க் ஷீட் நகல், பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், இருப்பிட முகவரி தாய், தந்தை பெயர், சொந்த ஊர், கைபேசி எண். முதலியவற்றைத் குறிப்பிட்டு 05.07.17-க்குள் அனுப்பி வைக்க வேண்டும்.
முகவரி: **முரு. நாச்சியப்பன், செயலாளர், மதுரை நகரத்தார் இளைஞர் சங்கம், பிளாட் எண்.42, பாபா நகர், Y. புதுப்பட்டி மெயின் ரோடு, அரும்பனூர் (அஞ்சல்), மதுரை - 625 104, கைபேசி : 98431 94619**


சென்னை திருவான்மியூரில் பெண்கள் தங்கும் விடுதி **இளையாற்றங்குடி கோவிலைச் சேர்ந்த திருமதிஅண.வள்ளியம்மை ஆச்சியால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.**

**தாமரை - பெண்கள் விடுதி**

கதவு எண்: 9/2 பிள்ளையார் கோவில் தெரு
சென்னை - 600 041

Cell No : 9445027045



24x7 Security
CCTV Camera
Wifi
Washing Machine
T.V.
A/C & Non A/C Rooms
3 & 6 Persons Sharing

ADVT



**இடம் விற்பனைக்கு**

தேவகோட்டை குதிரைப்பாதை ரோடு மெயின் ரோட்டில் நகரின் முக்கியப்பகுதியில் 3000 ச.அடி இடம் விற்பனைக்கு உள்ளது. இடம் தேவைக்கு **8825491052, 9976106089, 9363238196** எண்களில் தொடர்பு கொள்ளவும்.

ADVT



**FOR SALE**

CHENNAI - INJAMBAKKAM - ECR - POSH AREA. CMDA APPROVED.
TWO PLOTS OF 6000 SFT EACH
TOTAL 5- GROUNDS (12,000 SFT)
GENUINE FINANCIALLY POTENTIAL BUYERS ONLY CONTACT:
**76677 - 96699**
NO BUILDERS - NO BROKERS

ADVT



அன்புடையீர்,

வணக்கம். மலேசியா நாட்டின் பினாங்கில் வருடாவருடம் நடைபெறும் தை பூசத் திருவிழாவிற்கான சிறப்பான சேவையை முன்னிட்டு எதிர் வரும் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ந் தேதி நடக்கவிருக்கும் தைப் பூசத்திற்கு சென்று தண்ணீர் மலையானைத் தரிசித்து விட்டும் மற்றும் மலேசியா நாட்டையும், சிங்கப்பூரையும் சுற்றி பார்த்து வரும் சுற்றுலாவுக்கான முன்பதிவினை தொடங்கியுள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



கடந்த முறை பலரும் எங்களிடம் புக்கிங் கொடுக்க வந்தும் எங்களால் இடமின்மையின் காரணமாக எடுக்க இயலவில்லை. ஆகவே இந்த வருடம் டூரில் வர விருப்பம் உள்ளவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ள வேண்டி கேட்டுக் கொள்கிறோம்.


எங்களிடம் உள்நாடு, வெளிநாட்டு விமாணப் பயண சீட்டுகளையும் விசிட் விசாக்களையும் பெற்றுக் கொள்ளலாம். நாங்கள் இந்தத் துறையில் 35வருட அனுபவம் உள்ளவர்கள். மேலும் இது ஒரு IATA அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.

ஒவ்வொரு வருடமும் நாங்கள் ஏற்பாடு செய்யும் தைப் பூச டூர் எங்களது சிறப்புக்கு எடுத்துகாட்டனாது. இது நகரத்தார்களுக்கு என சிறப்பாகச் செய்யும் சேவை.

**லியோ டிராவல்ஸ் (பி) லிமிடெட்**
LEO
*Recognised by Govt. of India*
IATA

5, ராயல் ரோடு, ஹோட்டல் செவனா காம்ப்ளக்ஸ், கண்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி - 620 001.
தொலை பேசி : 0431 - 2411444, 2411314, 98424 54314
email : leotrvl@yahoo.com

ADVT



# நகரத்தார் சிகரத்தார் 20

காரைக்குடி நாராயணன்

சாலி ஆச்சியின் மூத்த பேத்தி மங்கை கலர் கொண்டு வந்து கொடுத்தாள்.

ஏத்தா, மங்கை நீ பாக்க அழகா அந்தக் காலத்து கே.ஆர். விஜயா மாதிரி இருக்கே. ஏன் கல்யாணம் வேண்டாம்குறே. உன்னை வச்சிட்டு உன் தங்கசிச்குச் சேயலாமா. நல்லாவா இருக்கு ஊர்ல பேசமாட்டாக.

ஆயா, நானா கல்யாணம் வேண்டாம்னேன். என் ஜாதகத்தைப் பாத்திட்டு எனக்கு மூல நட்சத்திரமாம். அதனால என்னை வேண்டாம்ங்குறாக.

ஆண் மூலம் அரசாளும், பெண் மூலம் நிர்மூலம்னு ஜோஸ்யர்க சும்மா சொல்றாக. அது அப்படியில்லை. ஆனி மூலம் அரசாளும், பின் மூலம் நிர்மூலம். ஆனி மாசத்தில பொறந்தா பௌர்ணமி தினத்தில யோகம். அதுக்குப்பின் மூலம்ங்குறது நாலாம் பாதத்தில வர்றது. இதைத்தான் தப்பா மாத்திச் சொல்றாக. அதோட கண்ட கழுதைக்கெல்லாம் ஜோஸ்யம் பாத்துக்கிட்டிருக்கக் கூடாது. ஜாதகம்ங்குறது ஒரு கணக்கு. தீர்ப்பு இல்லை.

நான் வேலைக்குப் போயி சம்பாதிச்சாலும் அந்தச் சம்பளத்துக்கு ஆசைப்பட்டாவது மாப்பிள்ளைக வருவாக. அதுவும் இல்லை. என்னை வளத்த ஆயா என்னை வீட்டுக்குள்ளே அடைச்சு பொத்தி பொத்தி வச்சு என் மனசைப் புகைபடிய வச்சிட்டா.

மங்கை கண் கலங்கினாள்.

எதுக்கு அழுகுறே. கண்ணைத் துடைச்சுக்க. கலங்குன தண்ணி தெளிவா வரவும், உலையில கொதிக்குற அரசி சோறாகவும் கொஞ்சம் நேரமாகும்.

உனக்கு வியாழ நோக்கு வந்திட்டா விளக்கு வச்ச நிமிஷமே விடியுற காலம் வந்திடும்.

உனக்கு நல்ல மாப்பிள்ளையாப் பாக்குறேன். நான் பாத்து முடிச்சதும் நீ இப்படி மாப்பிள்ளை வேணும், அப்படி வீடு வேணும், மாமியாரு வீட்டுக்கு வரக்கூடாது, தினமும் ஹோட்டல்ல சாப்பிடணும், கண்டபடி ஊர் சுத்தணும்னு இன்னைக்கு நிறையப் பொம்புளைப் புள்ளைக, சம்பாதிக்குற நெனைப்புல கல்யாணத்தை சல்லிசா நினைச்சு என்னென்னவோ 'கண்டிஷன்' போடுதுக. நீ அப்படி எல்லாம் எதுவும் சொல்லக் கூடாது. சரியா?

சரி ஆயா.

மங்கை காலியான பாட்டில்களை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

அந்தக் காலத்தில எங்க வீடுகல கல்யாணம் ஆக ஒரு பொண்ணு இருக்குன்னு எப்படி சொல்லுவாக தெரியுமா? வாசல்ல மாக்கோலம் போட்டு மத்தியில பூசணிப் பூவையோ, செம்பருத்திப் பூவையோ வைப்பாக, அதைப் பாத்துப் பொண்ணைப் புடிச்சுப் போச்சுன்னா பேசி முடிப்பாக.

சரி, போகலாமா.

ஆச்சி புறப்படத் தயாராக இருந்த போது சகுந்தலா தன் மகள் சீதாவையும், மூணு வயதுப் பேரன் சாமிநாதனையும், அஞ்சு வயதுப் பேத்தி சௌந்தரத்தையும் கூட்டிக் கொண்டு வந்தாள்.

"சகுந்தலா வந்தியா"

ஆமா, ஆச்சி

சீதா, உன் மகனும் மகளுமா?

ஆமா, அப்பத்தா

ஏண்டா உன் பேரென்ன?

சாமிநாதன்

அய்யா பேரா?

அதெல்லாம் தெரியாது. இது என் பேரு

குட்டி உன் பேரென்ன?

சௌந்தரம்

சாக்லெட் எடுத்துக்குங்க. ஆத்தா,

சாலி சொல்லி விட்டு கலர் கொண்டுவர உள்ளே போனாள்.

சீதா, இப்போ எங்கே இருக்கே?

பினாங்குல இருக்கேன்.

நம்ம நகரத்தார்கள் வாழுற நாடு. நான் தைப்பூசத்துக்கு பினாங்கு வந்திருக்கேன்.

மறுபடியும் வந்தா எங்க வீட்டுக்கு அவசியம் வாங்க.

கண்டிப்பா வர்றேன்

வேற எங்கெங்கே போயிருக்கீங்க

அலோஸ்டார், மலாக்கா மாசி மகம். ஈப்போ, தாப்பா, பத்து பகாட் வாலாப்பூர் வைகாசி விசாகம், கூலிம் தைப்பூசம், கோலாலம்பூர், சுங்குரும்பை பங்குனி உத்திரம், தெலுக்கான்சன் சித்ரா பௌர்ணமி, தைப்பிங் ஆடிவேல், மூவார், கிள்ளான் திருக்கார்த்திகை.

சாலி வந்தவர்களுக்கு கலர் கொண்டு வந்து கொடுத்தாள்.

சீதா. புள்ளைகளுக்கு தொட்டில் கட்டுனியா

என் ஆத்தா தொட்டில் கட்ட வரச் சொன்னாக. அப்போ வர முடியலே. பரவால்லை. இப்பவும் புள்ளைகளுக்கு வயசாயிடலே. வர்ற திருவிழாவுல கரும்புல சேலை கட்டித் தோள்ல வச்சு, மேளதாளத்தோட தூக்கிட்டுப் போ.

கரும்புல தான் சேலை கட்டித் தூக்கணுமா? ராஜ்மோகன் கேட்க நினைத்ததை சீதை கேட்டாள்.

தை பொறந்தா வழி பிறக்கும்னு சொல்றதில்லையா. தமிழ் மாசத்தில மொத மாசம் தை மாசம். அதுல நெல்லும் கரும்பும்தான் விசேஷம். உன்னை நான் மார்புலேயும், தோள்லேயும் சுமந்தேன். என் முதுமையில நீ எனக்கு சுமை தாங்கியா இருக்கணும். இந்த தொட்டில் பழக்கம் உன் பரம்பரைக்கும் விருட்சமா இருக்கணும்ங்குறது தான் அதோட அர்த்தம்னு நான் நெனைக்குறேன்.

அப்பத்தா. புள்ளைகளுக்கு பெத்தவுகளைக் காப்பாத்தணும்ங்குற மனசு இல்லேன்னா போகட்டும். இருக்கவே இருக்கு செட்டிநாட்டுல சிகப்பி இல்லம் மூத்த குடிமக்களுக்கான சரணாலயம்.

ஆமாத்தா. எல்லாரும் அதைப்பத்தி நல்லா சொல்றாக. முதுமை, பெத்தவுகளுக்கு மட்டுமா வருது. நாளைக்குப் புள்ளைகளுக்கும்தான் வரும். பகல் மட்டுமா ஒரு நாள் இரவையும் சேத்துத்தான். இளமை மட்டுமா வாழ்க்கை. முதுமையையும் சேத்துத்தான். வடக்குப் பாத்த மச்சு வீட்டைக் காட்டிலும் தெக்குப் பாத்த திண்ணை எவ்வளவோ உசத்தி. வீடே எரிஞ்சாலும் சாமி வீட்டு விளக்கு எரிஞ்சா போதும்.

மேலைக்கு வந்து தொட்டில் கட்டிட்டு போகச் சொல்லி இருக்கேன். சகுந்தலா சொல்லி விட்டு அவள் ஆதங்கத்தையும் சொன்னாள்.

நம்ம காலத்தில ஆம்புளைப் புள்ளையைக் கூட்டிகிட்டு போய் கிலுக்கி எடுத்தோம். பொம்புளைப் புள்ளையா இருந்தா கொப்பி கொட்டுனோம். இப்போ யாரு அதெல்லாம் செய்யுறா.

சிகப்பி ஆச்சி ராஜ்மோகனைப் பார்த்தாள்.

**(உயர்வர்)**

# வாரியார் வாக்கு

ஏ.எல்.எஸ்.நாச்சியப்பன்



எந்த ஒரு செயலைத் துவங்கும் போதும் முதலில் 'பிள்ளையார் சுழி" என்று சொல்லி ‘உ சிவமயம்' என்று எழுதிய பிறகுதான் உலகம் எங்கும் உள்ள நகரத்தார்கள் மட்டுமல்ல பெரும்பாலான தமிழர்களும் ஆரம்பிப்பார்கள். 'பிள்ளையார் சுழி' என்று சொல்லி 'உ' என்று ஏன் எழுதுகிறார்கள் என்பதற்கு கவியரசர் ஒரு முறை பேசும் போது குறிப்பிட்டார் உலகம் முழுவதும் சிவனுக்கு அடக்கம் அதன் காரணமாகத் தான் சிவனின் முதல் பிள்ளை பெயரைச் சொல்லி 'உ' என்று எழுத ஆரம்பிக்கிறோம்.

வாரியார் சுவாமிகள் எப்பொழுது சொற்பொழிவைத் துவங்கினாலும் விநாயகரைப் பற்றி அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ் 'கைத்தல நிறைகனி....' என்ற முதல் பாடலைச் சொல்லிவிட்டு அடுத்து வயலூர் முருகனை வணங்கிய பிறகு தான் தன் உரையைத் தொடங்குவார்.

**கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி**
**கப்பிய கரிமுகன் அடிபேணிக்**
**கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ**
**கற்பக வெனவினை அடிதேடும்**
**மத்தமும் மதியமும் வைத்திரு மரன்மகன்**
**மற்பொரு திரள்புய மதயானை**
**மத்தள வயிறனை உத்தமி புதல்வனை**
**மட்டவிழ் மலர்கொடு பணிவேனே**
**முத்தமி ழடைவினை முற்பொரு கிரிதனில்**
**முற்பட எழுதிய முதல்வோனே**
**முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்**
**அச்சது பொடிசெய்த அதிதீரா**
**அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்**
**அப்புன மதனிடை யிபமாகி**
**அக்குற மகளுட னச்சிறி முருகனை**
**அக்கண மணமருள் பெருமாளே !**

இந்தத் திருப்புகழ் பாடல் பலருக்கும் மனப்பாடம். பலரும் கோயில்களில் விநாயகப் பெருமான் முன்பாகச் சப்தமிட்டுச் சொல்லுவதை, பாடுவதைப் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆனால் அதன் பொருள் பலருக்கும் தெரியாது என்பது உண்மை.

இந்தப் பாடலின் பொருள்: பழம், அப்பம், அவல், பொரி இவைகளை தம் கரத்தால் வாரி உண்ணும் யானை முகத்தை உடைய விநாயகனின் திருவடிகளை விரும்பி, அறிவு சார்ந்த நூல்களைக் கற்கும் அடியவர்கள் மனதில் நீங்காது உறைந்து வாழ்பவனே! நினைத்தவற்றை கொடுத்தருளும் கற்பக விருட்சமே! உன்னைத் துதித்தால் தீவினைகள் யாவும் ஓடி மறைந்து விடும். ஊமத்த மலரும் பிறை மதியையும் தன் சடையில் தரித்துள்ள சிவபெருமானின் மகனே!, திரண்ட தோள்களும் மதயானை போன்ற பெரு வயிறையும் உடையவனே!, உத்தமி பார்வதிதேவியின் மகன் கணபதியே! உன்னை மலர் கொண்டு வணங்குகிறேன். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் மேருமலையில் முதன் முதலாக எழுதிப் பதியச் செய்த முதல்வனே! சிவபெருமானின் தேர் அச்சை முறியச் செய்து தூளாக்கிய தீரனே! சுப்பிரமணியர் வேண்டி அழைத்ததும் வள்ளியை மணம்புரிய அந்தத் தருணத்திலேயே வந்து திருவருள் புரிந்த பெருமானே! உன் பொற்பாதங்களை வணங்குகிறேன்!

மனதை ஒரு நிலைப்படுத்தி மனதார வணங்கும்போது கண்டிப்பாக விநாயகர் அருள்பாலிப்பார் என்பதை அனுபவம் உணர்த்தும். மேற்சொன்ன திருப்புகழ் பாடலில் கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டிய அரியதோர் சிறப்பு அடங்கியிருக்கிறது.

குறிப்பிட்ட ஒரு இலக்கியத்திலோ அல்லது இதிகாச, இலக்கணத்திலோ அதிகமாக ஞானம் பெற்றுள்ள பெரியவர்களை 'கரைகண்டவர்' என்றோ அல்லது 'கரைத்துக் குடித்தவர்' என்றோ சொல்லுவது மரபு.

வ.சுப. மாணிக்கனார் தொல்காப்பியத்தில் கரைகண்டவர் என்றும், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் 'சிலப்பதிகாரத்தை'க் கரைத்துக் குடித்தவர் என்றும், திருக்குறள் முனுசாமி, தவத்திரு குன்றக்குடி தெய்வ சிகாமணி அடிகளார் போன்றவர்கள் திருக்குறளைக் கரைத்துக் குடித்தவர்கள் என்றும் அது போல நெல்லைக் கண்ணன் பாரதியாரைக் கரைத்துகுடித்தவர் என்றும் தமிழருவி மணியன், திருமதி சரஸ்வதி ராமநாதன் போன்றவர்கள் கண்ணதாசன்

பாடல்களில் கரைகண்டவர்கள் என்றும் சொல்லுவதுண்டு. அந்தக் குறிப்பிட்ட பொருளில் அவர்கள் ஞானம் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்பது பொருள். இது போல இன்னும் ஏராளமான சிறப்பு வாய்ந்த அறிஞர் பெருமக்கள் பலர் உண்டு,

வாரியார் சுவாமிகளைப் பற்றிச் சொல்லும் போது 'திருப்புகழை'க் கரைத்துக் குடித்தவர் என்றும், திருப்புகழில் கரைகண்டவர் என்றும் கற்றவர்கள் பலரும் சொல்லுவதுண்டு. வாரியார் தமிழில் உள்ள எல்லா இலக்கியங்களில் இருந்தும், பழம் பாடல்களில் இருந்தும், இதிகாசங்களில் இருந்தும் அதன் சிறப்புக்களை மழை எனக் கொட்டி மகிழ்விப் பவர். எந்தப் பொருள் பற்றி அவர் உரை யாற்றினாலும் கண்டிப்பாக அதில் 'திருப்புகழ்" பற்றிக் குறிப்பிடாமல் தம் உரையை நிறைவு செய்யமாட்டார். அது எவ்வளவு உண்மை என்பதற்காகத் தான் மேற்குறிப்பிடப்பட்டுள்ள திருப்புகழ் பாடல். அதில் அப்படி என்ன சிறப்பு?

எந்த ஒரு பெருமகனார் உரையாற்றினாலும் பாடல்களைச் சொல்லுவார்கள், அதன் அர்த்தத்தைச் சொல்லுவார்கள். பிறகு எப்படி அது பொருந்துகிறது என்று விளக்கம் சொல்லு வார்கள். ஆனால் வாரியார் சுவாமிகளோ அதற்கும் மேலாக பாடல்களில் புதையல் போன்று அதனுள் மறைந்திருக்கும் சிறப்புக்களை எல்லாம் எடுத்துரைப்பார்கள். அவர் எண்ணி எண்ணிக் கற்றவர் என்பதால் தான் பாடல் எழுத்தின் எண்ணிக்கையைக்கூட குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார்.

அப்படி அவர் உரைத்துள்ள சிறப்புதான் இவை.

மேற்கண்ட பாடல் எட்டு இரண்டு வரிகளைக் கொண்டது. (உ-ம்) 'கைத்தல நிறைகனி அப்பமோடவல் பொரி' என்பது முதல்வரி; 'கப்பிய கரிமுகன் அடிபேணி' என்பது இரண்டாவது அடி. இந்தப் பாடலின் சிறப்பு முதலில் வரும் எல்லா வரிகளிலும் (முதல் வரி, மூன்றாம் வரி, ஐந்தாம் வரி, ஏழாம் வரி) 14 உயிர்மெய் எழுத்துக்களும் இரண்டாவது வரும் எல்லா வரிகளிலும் (இரண்டாம் வரி, நான்காம் வரி, ஆறாம் வரி, எட்டாவது வரி) 7+4=11 உயிர்மெய் எழுத்துகளும் உடையவை ஆகும்.

மேலும் ஒரு சிறப்பு கடைசியாக வரும் எல்லாச் சொற்களுமே 4 உயிர்மெய் எழுத்துக்களை உடையவை. (உம்) அடிபேணி; மதயானை. எட்டு இரட்டைவரி, ஒரு இரட்டை வரிக்கு 25 உயிர்மெய் எழுத்துக்கள் வீதம் எட்டு இரட்டை வரிகளுக்கும் சேர்த்து மொத்தம் இருநூறு உயிர் மெய் எழுத்துக்கள். எந்த ஒரு வரியும் 14 + 7+ 4 என்ற விதியை மீறவே இல்லை. அது போல கடைசியில் முடியும் எல்லாச் சொற்களுமே நான்கு எழுத்துக்களில் முடிகின்றன. எல்லா ஒற்று எழுத்துக்களையும் (மெய் எழுத்துக்களை யும்) தவிர்த்து விட்டு எண்ணிப்பாருங்கள், சரியாக 14 +7+4 = 25 என்று இருக்கிறதைத் தெரிந்து கொள்ளலாம். இப்படி ஒரு பாடலை வேறு யாரும் பாடியிருக்கிறார்களா?

கவி காளமேகப் புலவர் பாடியுள்ள வெண்பாவில் 'த' வரிசை (த முதல் த் வரை) உள்ள பதிமூன்று எழுத்துக்களை மட்டுமே பயன் படுத்தி பாடல் எழுதியுள்ளார். அவைகள் எல்லாம் ஞானம் நிறைந்திருந்தவர்களால் மட்டுமே முடிந்த ஒன்று. இப்படிச் சிறப்பு வாய்ந்த பாடல்களை வேறு யாரும் பாடியிருக்கிறார்களா என்ற விபரம் தெரியவில்லை. கற்றுத் தேர்ந்த தமிழறிஞர்கள் விபரம் சொன்னால் பலரும் அறிந்து கொள்ள உதவும்.

வாரியார் அந்தக் காலத்தில் செட்டி நாட்டுக்கு உரைசொல்ல வரும் போது அவருக்கு நமது முன்னோர்கள் சன்மானம் கொடுப்பார்கள். அப்போது சுவாமி 'பிள்ளையார் இருக்கிறார்' என்பார்களாம். அதுபோல சுவாமி 'இரட்டைப் பிள்ளையார்' என்ற சங்கேத மொழியில் சொல்லுவார்களாம். சிலசமயம் மஞ்சளால் ஒன்றும், மாக்கல்லால் ஒன்றும் அளித்திருக்கிறோம் என்பார்களாம். அதன் பொருள் பிள்ளையார் என்றால் ரூ.100 என்றும் இரட்டைப் பிள்ளையார் என்றால் ரூ.200 என்றும் பொருள் என்று வாரியார் சுவாமிகள் சொல்லியிருக்கிறார். அந்தக் காலத்தில் ரூ.100 என்பது மிகவும் பெரிய தொகை. எந்த ஒரு செயலிலும் நகரத்தார் பக்தியுடன் இணைந்தே வாழ்பவர்கள். தன்னுடைய எந்த ஒரு சொற்பொழிவிலும் முதலில் விநாயகரைத் துதித்து வணங்கி சிறப்புமிக்க திருப்புகழின் மேற்குறிப்பிட்ட முதல் பாடலைச் சொன்ன பிறகுதான் உரையை ஆரம்பிப்பார். விநாயகரைப் பற்றிப் பாடினால் தடைகள் அகன்று நற்பலன் கிடைக்கும். இந்தத் திருப்புகழ்ப் பாடலைப் பாடினால் இரட்டைப் பலன் கிடைக்கும். அருணகிரியார் போலவே வாரியார் சுவாமிகளும் ஞானத்தால் உயர்ந்தவர் என்பதை நாம் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

தொண்டை நாட்டில் ஒரு ஊர். குன்றத்தூர் என்று பெயர். அந்த ஊரில் வேளாளர் குலத்தில், சேக்கிழார் மரபில் ஒரு பெரியவர் பெயரும் புகழுடன் வசித்து வந்தார். அவர் சோழ மன்னனிடத்தில். அரண்மனையில் பணிபுரிந்து வந்தார்.

அவருக்கு இரண்டு குமாரர்கள். மூத்தவர் பெயர் அருண்மொழித் தேவர். இளைய மகன் பெயர் பாலராவாயர். மூத்த மகனான அருண் மொழித் தேவர். மிகத் திறமை வாய்ந்த வராகவும், மதிநுட்பம் உடையவராகவும் திகழ்ந்தார். சின்னஞ் சிறு வயதிலேயே அவருடைய அறிவாற்றல் அனைவரையும் வியக்க வைப்பதாக இருந்தது. அவரது தந்தை, தன் இரண்டு மக்களுக்கும் நல்ல கல்வி அறிவைக் கொடுத்து நல்ல அறிஞர்களாகத் திகழும்படி வளர்த்தார். அவர் இல்வாழ்க்கை இனிது அமைந்து இன்பம் ஈந்தது. நல்ல மனைவி, நல்ல மக்களுடன், நல்லறமாகிய இல்லறம் நடத்தி வந்த அவருக்கு ஒரு நாள், பெருஞ் சோதனை ஏற்பட்டது.

சோழமன்னன் தன் அவையில் கம்பீரமாக அமர்ந்து கொண்டு அவரிடம் மூன்று வினாக்களைக் கேட்டான்.

“உலகினும் பெரியது எது?”

“மலையினும் பெரியது எது?”

“கடலினும் பெரியது எது?”

“இந்த மூன்று வினாக்களுக்கும் எனக்கு விடை தெரிந்தாக வேண்டும். நாளை வந்து எனக்கு இதற்கான விடையைக் கூற வேண்டும்“ என்று பணித்தான்.

அந்த மூன்று வினாக்கள் அடங்கிய ஓலையை அவர் கையில் மன்னன் கொடுத்தான். அந்த ஓலையை எடுத்துக் கொண்டு அவர் தனது இல்லத்திற்கு வந்து சேர்ந்தார்.

அந்த மூன்று வினாக்களுக்கும் சரியான விடை அவருக்குத் தெரியவில்லை. மறுநாள் வந்து விடை கூறுமாறு பணித்த மன்னவனுக்கு என்ன பதில் கூறுவது என்ற கவலை அவரைப் பற்றிக் கொண்டது. மனதிலே பெருங் குழப்பம். அவர் கவலை அவர் முகத்தில் பிரதிபலித்தது.

கவலையுடன் இல்லத்திற்கு வந்து நுழைந்த அவரைக் கண்டு, அவர் மனைவி திடுக்கிட்டாள். “என்னவாயிற்று உங்களுக்கு? ஏன் வாட்டமுடன் இருக்கிறீர்கள்? உடல் நலம் ஏதேனும் பாதிப்பா?” என்றெல்லாம் அன்பொழுகக் கேட்டாள்.

“ஒன்றுமில்லை” இது அவரின் பதில்.

“இல்லை..... நீங்கள் பெரும் கவலையில் இருக்கிறீர்கள். சரி...... உணவு உட்கொள்ள வாருங்கள்”....... என்று அழைத்தாள்.

அதையும் மறுத்து, உணவும் உட்கொள்ளாமல் தன் அறைக்குச் சென்றார். பல நூல்களை, ஏடுகளை எடுத்தார். புரட்டுகிறார். படிக்கிறார். ஆராய்ந்தார். இரவெல்லாம் இப்படியே கழிந்தது. ஒன்றும் புரியவில்லை.

இரவு நகர்ந்து கொண்டே இருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்! விடை தெரியாமல்! ஏங்கினார். தவித்தார். அரசனுக்கு என்ன சொல்வது என்று விளங்கவில்லை!

பொழுதும் விடிந்து விட்டது. குறித்த நேரத்தில் நீராடி, வழிபாடும் செய்யவில்லை. உணவும் உண்ணவில்லை. வாடிப்போய், சோர்ந்த

## இ.பி.கோவும், இன்பத் திருக்குறளும் - 17



# “தந்தையைக் காத்த

**வழக்கறிஞர் என்.எஸ். ராஜன்**

நிலையில், முகம் சுருங்கிக் கண்களில் கவலையுடன் காட்சி தந்த தன் தந்தையைக் கண்ட அருண்மொழித் தேவர் திடுக்கிட்டார்.

தன் தந்தையின் காலடியில் வீழ்ந்து வணங்கிய அந்தத் தலைமகன், “என் தெய்வமாகிய என் அன்புத் தந்தையே! ஏன் உங்கள் திருமுகம் இப்படி வாடி உள்ளது? என்றைக்கும் இப்படி நீங்கள் இருந்ததில்லையே! ஏன் உணவும் உட்கொள்ளவில்லை? துன்பம் போக்கும் சிவபெருமானைத் தினமும் தொழுதெழும் நீங்கள் இப்படி வாடி வருந்துவதன் காரணம் என்ன? தயவு செய்து சொல்லி அருளுங்கள்” என்று கேட்டார்.

“என் இனிய செல்வனே! நான் என்ன சொல்ல? நீயோ சிறுபிள்ளை. என் கவலைக்கு உன்னால் மருந்திட முடியாது. இது மகா பெரிய விஷயம். உன்னிடம் நான் சொல்லி என்ன பயன்? எனக்கு வழிவிடு. என் கால்களில் இருந்து உன் கரங்களை எடு. நான் விரைந்து அரசவைக்குச் செல்ல வேண்டும். தாமதமானால்,



அரசர் கோபம் கொள்வார்''.

''என்னை ஈன்றெடுத்த என் அருமைப்பிதாவே! உங்களை வாட்டும் துயரம் என்னவென்று கூறுங்கள். அதைக் கூறாவிட்டால், உங்கள் திருவடிகளை நான் விடமாட்டேன். கருணை கூர்ந்து சொல்லுங்கள். மறுக்காதீர்கள். எல்லாம் வல்ல இறைவன், அந்த ஆதிபகவன், உங்கள் மனக்கவலையை நிச்சயம் தீர்த்து வைப்பார்'' என்று கெஞ்சிக் கேட்கலானான்.


அதன் பிறகு தந்தை சொன்னார். ''அன்பு மகனே! நேற்று, அரண்மனையில் மன்னர் என்னிடம் மூன்று வினாக்களைக் கேட்டு அதற்கான விடையை இன்று கூற வேண்டும் என்று பணித்தார். அந்த மூன்று வினாக்களுக்கான விடை பற்றி இரவெல்லாம் சிந்தித்தேன். கண் விழித்தேன். ஆராய்ந்தேன். சரியான விளக்கம் தெரியவில்லை. விடை கிட்டவில்லை. தக்க விடை கூறவில்லை என்றால் என் மதிப்புக்கும், புகழுக்கும் இழுக்கல்லவா? அத்துடன் மன்னர் மற்றும் மற்றவர் நகைப்புக்கும் ஆளாக நேரிடும். அரசன் என்னைத் தண்டிக்கவும் கூடும் அல்லவா? அதனால்தான் கலக்கம்''

''தந்தையே! அந்த வினாக்கள்தான் என்ன? கூறுங்கள்'' என்றான் புதல்வன்.

''உலகினும் பெரியது எது? மலையினும் பெரியது எது?

கடலினும் பெரியது எது? இவைகள்தான் அந்த மூன்று வினாக்களும்''

உடனேயே அருண்மொழித் தேவர் சொன்னார்: ''எனை ஈன்ற அன்புப் பிதாவே! இதற்காகவா இவ்வளவு வாட்டமும், சோர்வும், கவலையும்! கவலையை விடுங்கள். இப்போது நீங்கள் மறுக்காமல் உணவு சாப்பிடுங்கள். நீங்கள் சாப்பிட்டு முடிப்பதற்குள் நான் அதற்கான



விடையை எழுதித் தருகிறேன். சிறிதும் கவலை வேண்டாம். விடை சொல்ல நான் இருக்க வீண் துயரம் உங்களுக்கு எதற்காக?

இது கேட்ட தந்தை மிக ஆச்சரியப்பட்டார். வியப்புடன் அவனைப் பார்த்தார். இவனால் முடியுமா? என்று மனம் அலை மோதியது. இருந்தாலும் அமர்ந்து உணவு சிறிது உண்டு எழுந்தார். அதற்குள் அருண்மொழித் தேவர், ஒரு ஓலையைக் கொண்டு வந்து தந்தையிடம் தந்தார். தந்தையார் அதை வாங்கிப் படித்துப் பார்த்தார். அதில் மூன்று வினாக்களையும் எழுதி அதன் கீழே அதற்கு விடையாகக் கீழ்க்கண்ட குறட்பாக்கள் எழுதப்பட்டிருந்தன.

*உலகத்தினும் பெரியது*

*காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது.*

*மலையினும் பெரியது*

*நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது.*

*கடலினும் பெரியது*

*பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலின் பெரிது.*

தந்தையார் வியப்புடன் கண்களில் மகிழ்ச்சி பொங்க, விவரிக்க இயலாத பெரும் உவகையுடன் தான் ஈன்றெடுத்த தவமகனைக் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் வடித்தார். மூன்று வினாக்களுக்கும் உரிய சரியான விடையைத் திருக்குறளில் இருந்தே எடுத்துக்கூறி இருந்த தன் மகனின் அறிவைக் கண்டு பெருமை கொண்டார். எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தார். பெற்ற தாயும் தன் மகனை உச்சி மோந்து கட்டித் தழுவினாள்.

தனயன் தந்த ஓலையை எடுத்துக் கொண்டு அரண்மனை நோக்கி ஓடினார் தந்தையார். மன்னனைக் கண்டு அந்த ஓலையை அவனிடம் தந்தார்.

ஓலையை உற்று நோக்கிய மன்னவர், அதில் இருந்த கையெழுத்தைப் பார்த்து விட்டு, "ஐயா, இது உங்கள் கையெழுத்து அல்லவே! இது யாருடைய கையெழுத்து?" என்று கேட்டபடி அதில் எழுதி இருந்த விடைகளைக் கண்டு முகமலர்ந்தார்.

பெரியவர் மன்னவரை வணங்கி, "மன்னர் பெருமானே! இது என் மகனின் கையெழுத்து. அவன்தான் உங்கள் மூன்று வினாக்களுக்கு விடையை இதில் எழுதிக் கொடுத்தான். நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு எனக்குச் சரியான விடை பகரத் தெரியவில்லை. விடை தெரியாது விழித்தேன். இரவு முழுதும் கண் விழித்தேன் என் அறிவை நொந்து கொண்டேன். என் வாடிய முகத்தைக் கண்டு என் துயரைக் கேட்டறிந்த என் அருமைப் புதல்வன், மூன்று வினாக்களுக்கான விடையை நொடிப் பொழுதில் எழுதித் தந்தனன்" என்று உரைத்தார்.

அது கேட்டு பெரு வியப்பும், மகிழ்வும் அடைந்த மன்னன், உடனேயே ஒரு பல்லக்கை அனுப்பி அருண்மொழித் தேவரை ராஜ மரியாதையுடன் அழைத்து வரச் செய்தார். அரண்மனையில் நுழைந்த அவரை அன்பொழுக வரவேற்று உபசரித்தார். அவருடைய திருமுகத்தில் அறிவின் ஒளியைக் கண்டார். அருட்பொலிவைக் கண்டார். அருட்பெருஞ் ஜோதியாகத் திகழ்ந்த அவருக்குப் பெருமை சேர்க்கும் படியாகத் தன் அரசில் அவரை முதன் மந்திரியாக ஆக்கிக் கொண்டார். அவருக்கு வேண்டிய மரியாதைகள் கொடுத்து மதிப்பளித்தார். அவரே சேக்கிழார் எனப் பலராலும் அழைக்கப்பட்டார். குடும்பப் பெயரான சேக்கிழார் எனும் பெயரே அவர் திருநாமமாக வழங்கலாயிற்று.

இக்கதை கூறும் உண்மையைப் புரிந்து கொள்ள விளக்கம் தேவையில்லை. அதையும் குறள் வழியே கூறி விடலாம்.

*தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க்கெல்லாம் இனிது.*


தம்மை விடத் தம் மக்கள் சிறந்த அறிவுடையவர்களாய் விளங்குவது இவ்வுலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும் இன்பத்தைத் தருவதாகும்.

பொதுவாக, ஒருவனை நாம், இவன் அறிவில் மிகச் சிறந்தவன் என்று பாராட்டிப் புகழும் போது, அவன் மனம் இயற்கையாகவே பெருமை கொள்ளும், மகிழ்வுறும். ஆனால், அதே சமயம், தன்னைத் தவிர்த்து, வேறு ஒருவரை அறிஞன், மகா கெட்டிக்காரன் என்றெல்லாம் மற்றவர் புகழ்ந்தால், அதனால் நம் மனம் மகிழ்வடைவதில்லை. மாறாக, தான் பெற்ற செல்வங்கள், தன் வழித் தோன்றல்களான தன் சொந்தப் பிள்ளைகளைப் பிறர் புகழும் போது, நம்மைவிட அவர்கள் அறிவில் சிறந்த அறிவாளிகள் என்று கூறும் போது, "அவன் யாருக்குப் பிள்ளை? தந்தை ஐந்தடி பாய்ந்தால், பிள்ளை ஐம்பது அடி பாய்வான்" என்றெல்லாம் நம் பிள்ளைகளைப் பிறர் பாராட்டிடும் போது, கிடைக்கின்ற உவகை, பெறுகின்ற மன மகிழ்வு இருக்கின்றதே, அது நம்மைப் பலர் பாராட்டுவதை

விடப் பன்மடங்கு மகிழ்வைத் தரும்.

ஒருவன் பெற வேண்டிய செல்வங்களுள் மிகப்பெரியமிகஉயர்ந்தசெல்வம்எதுவென்றால், அது அறிவுடைய நன்மக்களைப் பெறுவதே ஆகும். ஒழுக்கம் நிரம்பிய, பழிச்சொல் இல்லாத நல்ல பண்புடைய மக்களைப் பெறுகின்ற பெற்றோரை, ஏழு பிறவிகட்கும் துன்பங்கள் தீண்டாது.

இல்லறம் அல்லது நல்லறமன்று என்ற கூற்றிற்கு ஏற்ப, நல்ல இல்லறத்தின் பரிசு நன்மக்கட்பேறு ஆகும். குடும்பத்தில் மங்கலம் என்பது நல்ல மனைவியைப் பெறுவதே. மங்கலம் என்பது மனைமாட்சி! அதற்கு நல்ல அணிகலன்கள் என்பவை நல்ல மக்களைப் பெறுவதே! சான்றோர்களால் மதித்துப் புகழப்படும் நல்ல மக்களைப் பெறுவதே அந்த இல்லறத்திற்கு அடுத்த சிறப்பாகும். அதனால்தான், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலத்திற்கு அடுத்தபடியாக, நல்ல மக்கட்பேறு பற்றி வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.



இல்லறத்தான் பெறக்கூடிய பேறுகளில் பிள்ளைப்பேறு தான் பெரும் பேறு. பெற்றோர் என்றால் பிள்ளையைப் பெற்றோரே! நன்மக்களைப் பெற்றோரே தேவருலகில் பெருஞ்சிறப்புப் பெறுவர்.

குழந்தைகள் தவழாத இல்லங்கள் இல்லங் களாகாது. குழந்தைகளின் குரலோசை குயிலோசையிலும் இன்பம் தருவது. தம்மக்கள் மழலைச் சொற்களைக் கேட்டு உணராதவர்களே.

குழல் இசையை இனிது, யாழ் இசையை இனிது என்று கூறுவார்கள் என்கிறார் வள்ளுவர்.

*"குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்*
*மழலைச்சொல் கேளா தவர்"*

தான் ஈன்ற செல்வங்களின் உடலைத் தொட்டுத் தீண்டுவது என்பதே, பெற்றோர்கள் உடலுக்கும், உள்ளத்திற்கும் பேரின்பம் தரும். அந்த இனிய செல்வங்களின் மழலைச் சொற்களைக் கேட்பதே செவிக்கு இன்பம் தரும் என்கிறார் வள்ளுவர்.

அமுதம் இனிப்பானது! அது கிடைப்ப தற்கரியது! பிஞ்சுக் குழந்தை தன் தளிர்ப்பிஞ்சுக் கைகளால் பிசைந்த சோறானது, அக்குழந்தையின் பெற்றோருக்கு அமுதத்தை விட மிக இனிமை தருவதாகும்.

ஒரு தாய் தன் வயிற்றில் தன் அழகு மகனைக் கருவாகச் சுமக்கும் போது, எத்துணை துன்பங்களைத் தாங்கிக் கொள்கிறாள். கருவைச் சுமந்தவள் பெரும் கனவையும் சுமக்கிறாள். தன் பிள்ளை தன் பிஞ்சுக் கால்களால் தன் கருவில் இருந்து கொண்டு தன் வயிற்றுச் சுவரை உதைக்கும் போது அவள் படும் இன்ப வேதனை சொல்லில் அடங்காது! கருவாக மலர்ந்த அந்தச் சிட்டு வெளி உலகிற்கு வந்து, வளர்ந்து, பெரியவனாகி, கல்வி கேள்விகளில் சிறந்து, மாபெரும் சபைகளில் புகழ் மாலைகள் சூட்டப்பட்டு, ஆன்றோர்கள், அறிஞர்கள் போற்றும் பேரறிவாளன் எனப் பாராட்டப்படும் போது, அதைப் பார்க்கும் தாய், அவனைப் பாராட்டும் அந்தப் பாராட்டுச் சொற்களைக் கேட்கும் தாய், அவனைப் பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியை விட மிகப் பெரும் மகிழ்ச்சியை அடைவாள்.

*"ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்"*

பெற்ற கடமை தாய்க்கு என்றால், சான்றோனாக அவனை வளர்க்கும் கடமை தந்தைக்கு! "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" எனும் வாக்குக்கு ஏற்ப, கற்றவர்கள் நிரம்பியசபையில்எல்லோருக்கும்முன்னவனாக இருக்கத் தக்க வகையில், தன் மகனைக் கல்வியில் மேம்பட்டவனாக ஆக்குவதே தந்தை தன் மகனுக்குச் செய்யும் உதவி.

அதற்கு பிரதிஉபகாரமாக, அந்த மகன் தன் தந்தைக்கும் ஒரு உதவி ஆற்ற வேண்டும்! அது அவன் கடமை! அது என்ன?


*"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை*
*என் நோற்றான் கொல்எனும் சொல்"*

"இத்தகு மகனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ?" என அனைவரும் வியக்கும் நிலையை உருவாக்குவதே ஆகும்!

வள்ளுவ வழியில் வாழ்ந்து சிறப்போம்!

நன்மக்கட் பேற்றை நாட்டுக்கு அளிப்போம்!

(ஆய்வு தொடரும்......








# அப்பாவின் திரைப்பயணம் 5

கண்மணி சுப்பு கண்ணதாசன்



மெட்ராஸ்

மாலை ஏழு மணி

சரவணா ஃபிலிம்ஸ் ஆஃபிஸில் மறுநாள் ஒலிப்பதிவு செய்யவிருந்த பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் எழுதிய

"கண்ணு மேல கண்ணை வச்சு...
காசை முன்னே வச்சு
கன்னி என்னைப் பார்கல்லையா!"

என்ற பாடலை பின்னணிப் பாடகி ஜிக்கியை வைத்து ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள் இசையமைப்பாளர்கள் விஸ்வநாதன்– ராமமூர்த்தி மற்றும் அவர்களது குழுவினர்.

இயக்குநர் பீம்சிங்கும், தயாரிப்பாளர் வேலுமணியும் எதிரே உட்கார்த்திருந்தனர்.

லாரியில் பயணம் செய்த களைப்புடனும் கையில் சூட்கேஸுடனும் வந்து சேர்ந்தார் செல்லப்பன்.

எல்லோரும் அவரைப் பார்க்க தயாரிப்பளர் வேலுமணி"பெங்களூரு போனியே என்னாச்சு?" ஒங்க செட்டியார் பாட்டெழுதிக் குடுத்தாரா என்று கிண்டலாகக் கேட்க, செல்லப்பன் சூட்கேசிலிருந்து பாடல் வரிகள் எழுதப்பட்ட காகிதங்களை எடுத்து அவரிடம் நீட்டினார்.

வேலுமணி அதைப் படித்துப் பார்த்தார். அவர் முகத்திலிருந்த கிண்டலான புன்னகையும்,

அவநம்பிக்கையும் மறைந்திருந்தது. படித்து முடித்துவிட்டு இயக்குநர் பீம்சிங்கிடம் கொடுத்தார். பீம்சிங் படித்து முடித்துவிட்டு விஸ்வநாதனிடம் கொடுத்தார். விஸ்வநாதன் படித்து முடித்து விட்டு ராமமூர்த்தியிடம் கொடுத்தார்.

ராமமூர்த்தி பல்லவியை வாய்விட்டுப் படித்தார்...

**"தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்**
**தரத்தினில் குறைவதுண்டோ? - உங்கள்**
**அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்**
**அன்பு குறைவதுண்டோ...**
**சிங்கத்தின் கால்கள் பழுது பட்டாலும்**
**சீற்றம் குறைவதுண்டோ**
**சிந்தையும் செயலும் ஒன்றுபட்டாலே**
**மாற்றம் காண்பதுண்டோ!**

படித்து முடித்ததும் "அடடே... இது ரொம்ப நல்லாயிருக்கு... இதையே ரெக்கார்டு பண்ணிடுலாம்" என்றார் ராமமூர்த்தி. மற்றவர் களும் மனநிறைவுடன் சரி என்றார்கள்.

விஸ்வநாதனும் ராமமூர்த்தியும் சேர்ந்து அந்தப் பாட்டுக்கு மெட்டமைத்தனர்.

ஜிக்கிக்குப் பதிலாக பி.சுசிலாவை வைத்து மறுநாள் அப்பாவின் பாடலை ஒலிப்பதிவு செய்தார்கள். ரெக்கார்டிங்கின் போதே ஹிட்டானது பாட்டு.

பாகப்பிரிவினை படத்துக்கு அடுத்ததாக ஒரு தாலாட்டுப் பாடல் பதிவு செய்ய வேண்டியிருந்தது. பாட்டு எழுதித் தரும்படி ஆஸ்தான கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திடம் கேட்டார் வேலுமணி. அதற்கு பட்டுக்கோட்டையார் "எனக்குத் தாலாட்டுப் பாட்டெல்லாம் எழுத வராது கண்ணதாசண்ணன்கிட்டே கேட்டு எழுதி வாங்கிக்குங்க அவரு நல்லா எழுதுவாரு" என்று கூறிவிட்டார்.

"கண்ணதாசன்கிட்டே ஒரு பாட்டு எழுதி வாங்குறதுக்குள்ளேயே போதும் போதும்னு ஆயிடுச்சு. இன்னொரு பாட்டா?" என்று வேலுமணி தயங்கினாலும் அப்பாவின் பாடலைப் பதிவு செய்தபின் அவருக்கு அப்பா மீது ஒரு அபிமானம் உண்டாகியிருந்தது. ஆகவே அப்பாவிடம் எழுதி வாங்குவது என்று முடிவு செய்தார். இந்த முறையும் செல்லப்பனிடம் அந்தப் பொறுப்பு வழங்கப்பட்டது.

செல்லப்பன் அப்பாவைப் பார்க்கப் போனார். அப்பா தன் அறையில் கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்திருக்க ஒரு பக்கம் இரண்டு வயது தங்கை ரேவதி அப்பாவின் மார் மீது சாய்ந்திருக்க இன்னொருபுரம் நாலு வயது தம்பி அண்ணாதுரை அப்பாவின் தோளைக் கட்டிப்பிடித்தபடி அப்பாவின் கன்னத்தில் முத்தமழை பொழிந்து கொண்டிருந்தான். அப்பா, அவர்களின் பாசப்பிணைப்பில் கட்டுண்டு அமர்ந்திருந்தார்.

செல்லப்பனைப் பார்த்ததும் அப்பா "என்ன செல்லப்பா?" என்று கேட்டார்.

"நீங்க இன்னொரு பாட்டு எழுதிக் குடுக்கணும்ணே" என்றார்.

"இன்னொரு பாட்டா? அடடே... ம்... அந்தப் பாட்டு எப்படி வந்துருக்கு?" என்று கேட்டார், அப்பா.

"தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்" பாடல் ஒலிப்பதிவின் போதே ஹிட்டாகி விட்டதையும், எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது என்பதையும் சொன்னார் செல்லப்பன்.

அப்பா சந்தோஷப்பட்டார். "சரி... இந்தப் பாட்டுக்கு என்ன சிச்சுவேஷன்?" என்று கேட்டார்.

"இது தாலாட்டுப் பாட்டுண்ணே... ஹீரோ பாடுறது" என்று சிச்சுவேஷனை விளக்கினார்.

"ஓ... இப்ப நான் இருக்கிற சிச்சுவேஷனா... சரி அந்தப் பேடை எடுத்துக்கிட்டு சேர்ல உக்காரு" என்றார் அப்பா. செல்லப்பன் பேடை எடுத்து மடி மீது வைத்துக் கொண்டு தரையில் அமர்ந்து எழுதத் தயாரானார்.

அப்பா பாட்டு வரிகளை சொல்லத் துவங்கினார்.

**"ஏன் பிறந்தாய் மகனே...**
**ஏன் பிறந்தாயோ?...**
**நான் பிறந்த காரணத்தை**
**நானே அறியுமுன்னே இங்கு வந்து**
**ஏன் பிறந்தாய்**
**செல்ல மகனே!"**

இந்த பாடலும் ஒலிப்பதிவின் போதே பிரபலமாகிவிட்டது.

வேலுமணிக்கு மிகவும் திருப்தியாக இருந்தது. மீதமிருந்த ஒரு பாடலையும் அப்பா தான் எழுத வேண்டும் என்று முடிவு செய்தார்.

"இந்த பாட்டை அவரு நம்ம ஆபீசுல வந்து எழுதணும். எப்படியாவது அவரை



மல்லுக்கட்டி கூட்டிகிட்டு வந்துரு செல்லப்பா" என்றார் வேலுமணி.

செல்லப்பன் அப்பாவை சந்தித்து மேலும் ஒரு பாட்டு எழுத வேண்டும் என்று கூறிவிட்டு "சரவணா ஃபிலிம்ஸ் ஆபீஸ்லெ கம்போஸிங்" என்றார்.

அப்பா தயங்கினார். பிறகு "ஒங்க அஜந்தா பிக்சர்ஸ் ஆபிஸ்லெ வச்சுக்குங்க... வர்றேன்" என்றார் அப்பா.

அவர் சொன்னபடியே ஏற்பாடு செய்யப் பட்டது.

அப்பா அந்த கம்போஸிங்கிற்குக் கிளம்பும் போது அம்மா "இன்னிக்கு எந்தக் கம்பெனிக்கு போறீங்க...? என்ன பாட்டு எழுதப் போறீங்க?" என்று கேட்டார்கள்.

"ஒன்னைப் பத்திதான் எழுதப் போறேன்" என்று சிரித்தபடி கூறிவிட்டுப் போனார்.

அஜந்தா பிக்சர்ஸ் ஆஃபீஸில் அப்பாவுக்காகக் காத்திருந்த வேலுமணி அப்பாவை அன்புடன் வரவேற்றார். அப்பாவும் அன்போடு அவருக்கு வணக்கம் தெரிவித்தார்.

இசையமைப்பாளர்கள் விஸ்வநாதன் – ராமமூர்த்தி தங்கள் இசைக் குழுவினருடன் அமர்ந்திருக்க இயக்குநர் பீம்சிங், கதாசிரியர், அஜந்தா ஆனாரூனா முதலியோரும் இருந்தனர்.

"என்ன சிச்சுவேஷன்?" என்று கேட்டார் அப்பா.

கதாசிரியர் எம்.எஸ்.சோலைமலை கதையை சுருக்கமாகச் சொல்லிவிட்டு "ஹீரோ அறிமுகம்ண்ணே... எருமை மாட்டு மேல ஒக்காந்துகிட்டு ஹீரோயினை ஃபாலோ பண்ணபடி தன் காதலை ஜாடை மாடையா பாட்டுல சொல்லுறாரு" என்றார்.

அப்பா யோசனையில் மூழ்கினார். படத்தில் கதாநாயகியின் பெயர் பொன்னி. என் அம்மாவின் பெயர் பொன்னம்மாள். அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்ததை உண்மையாக்கும் விதமாகப் பல்லவியை சொன்னார்.

**தாழையாம் பூ முடிச்சு**
**தடம் பார்த்து நடை நடந்து**
**வாழை இலைபோல வந்த பொன்னம்மா - என்**
**வாசலுக்கு வாங்கி வந்ததென்னம்மா.**



இந்தப் பாடலைப் பற்றி எப்போது பேசினாலும் "நான் கல்யாணமாகி வரும்போது ஒன்னும் கொண்டு வரலையாம். அதான் வாசலுக்கு வாங்கி வந்ததென்னம்மா"ண்ணு எழுதுனாராம். நான் எம்புட்டு வெள்ளம் கொண்டு வந்தேன்" என்பார்கள் அம்மா.

ஜி.என்.வேலுமணியின் படங்களுக்கு அப்பாவை பாடல்கள் எழுத வைத்த பெருமைக்குரிய இந்த செல்லப்பன் யார்?

அஜந்தா பிக்சர்ஸின் சென்னை மேனேஜராகப் பணியாற்றி பல ஆண்டுகள் அனுபவத்தை மூலதனமாகக் கொண்டு பிற்காலத்தில் தயாரிப்பாளரானவர்.

இவர் தயாரித்த முதல் படத்தைத் தயாரிப்பதற்கு கொஞ்சம் "தில்லு" வேண்டும். அப்படி ஒரு கதையை தேர்வு செய்துவிட்டார்.

காஞ்சி ரங்கமணி என்பவர் எழுதி ஐநூறு முறை மேடையேற்றப்பட்ட "நவக்கிரக நாயகி" என்ற கதையை விலைக்கு வாங்கி, வியட்நாம் வீடு சுந்தரத்தை வசனகர்த்தாவாகப் போட்டு இயக்குநர் கே.சங்கரின் இயக்கத்தில் படத்தை தயாரிக்க முடிவு செய்து பணிகளைத் துவக்கினார்.

முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க கே.ஆர். விஜயா, சோ, விஜயகாந்த், பாண்டியன், சுரேஷ், நளினி, விஜி, சசிகலா, மேஜர், மனோகர், ஹெரான் ராமசாமி மற்றும் 30 நடிகர்களையும் ஒப்பந்தம் செய்தார்.

இயக்குநர் – கே.சங்கர், ஒளிப்பதிவு – எம்.சி.சேகர்,

இசை – எம்.எஸ்.விஸ்வநாதன்.

"நவக்கிரக நாயகி" படப்பிடிப்பு துவக்கப்படுவதற்கு முன்பு அதைப் பற்றிய செய்தி நாளிதழ்களில் வெளிவந்தது.

அந்த செய்தியைப் படித்து விட்டு இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் தொலைபேசி மூலம் செல்லப்பனிடம் தொடர்பு கொண்டு "வேண்டாம் செல்லப்பன். இந்தப் படம் சரியா வராது. ஒங்களை மாதிரி நான் நவக்கிரகங்களை வச்சு புராணப்படம் எடுக்கலே. சாதாரண சோஷியல் படத்துக்கு நவக்கிரகம்னு டைட்டிலை வச்சதுக்கே படத்தை எடுத்து முடிக்கிறதுக் குள்ளே எனக்கு நெறைய கஷ்டத்தைக் குடுத்து வதையை வாங்கி, நெஞ்சு வலி வந்து ஏகப்பட்ட சோதனைக்கப்புறம்தான் படத்தை முடிச்சேன். நீங்க நவக்கிரகங்களை வச்சே படம் எடுக்கப் போறீங்க. ரொம்ப கஷ்டப்படுவீங்க, தயவு செஞ்சு இந்தப் படத்தை டிராப் பண்ணிடுங்க" என்று அறிவுரை கூறினார்.

"நான் அஷ்டலக்ஷ்மி படத்தை ஆரம்பிச்சு கால் வாசி எடுக்குறதுக்குள்ளே படாதபாடு பட்டுட்டேன். அதையே என்னால தாக்குப் புடிக்க முடியலே. செலவு பண்ணுன பணம் நஷ்டமாப் போனாலும் பரவால்லேன்னு அத்தோட படத்தை ஏறக் கட்டிட்டேன். அதுக்கப் புறம்தான் நிம்மதி வந்துச்சு. நீங்க மொதல் படம் எடுக்குறீங்க. என்னை மாதிரி நீங்க படத்தைப் பாதியிலேயே கைவிடுற அவல நிலைக்கு ஆளாகக் கூடாதுங்குற உண்மையான அக்கரையோட சொல்றேன். இந்தக் கதை வேண்டாம். வேற ஏதாவது கதை எடுங்க" என்று உரிமையோடு அறிவுரை கூறினார் இயக்குநர் ஸ்ரீதர்.

"கௌரி கல்யாணம் படத்தை எந்த சிரமமும் இன்றி முடிச்சிருப்பேன். நவக்கிரகங்களைப் பத்தி ஒரு பாட்டை எழுதி படமாக்கி டைட்டில் போடணும்னு ஆசைப்பட்டது தப்பாப் போச்சு. டைட்டில் சாங்கை ரெக்கார்டு பண்ணுன நாள்ளே இருந்து படத்தை எடுத்து முடிக்கிறதுக்குள்ளே நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும்" என்றார் தயாரிப்பாளரும், டைரக்டருமான பி.ஆர்.பந்துலு. நவக்கிரங் களையே படமாக எடுக்கிறாய் யோசித்துச் செய் என்றார்.




"உங்களுக்கு எதுக்கு இந்த தேவையில்லாத ரிஸ்க்கு? கதையை விலைக்கு வாங்கிட்டீங்கங் குறதுக்காக நவக்கிரக நாயகியை எடுத்தே தீரணும்னு நெனைக்காதீங்க. ஒங்களுக்கு நான் சிவாஜியையும், தேவிகாவையும் வச்சு ஒரு நல்ல படம் பண்ணித் தர்றேன்" என்று உதவ முன் வந்தார் டைரக்டர் பீம்சிங்.

தன்னிடம் பல ஆண்டுகள் விசுவாசமாக வேலை பார்த்த செல்லப்பன் தயாரிப்பாளரா வதைப் பார்த்து சந்தோஷப்பட வேண்டிய அஜந்தா பிக்சர்ஸ் நிறுவன அதிபர் 'ஆனாரூனா'வால் சந்தோஷப்பட முடிய வில்லை. காரணம் அவருக்கும் "திக்" என்றுதான் இருந்தது. அதனால் "இந்தப் படத்தை மட்டும் எடுத்து முடிச்சுட்டான்னா இவன் கெட்டிக்காரன்" என்ற கமென்ட்டோடு முடித்துக் கொண்டார்.

அறிவுரை கூறிய அன்பு நெஞ்சங்கள், உதவ முன்வந்த உண்மையான உள்ளங்கள் எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டு "நவக்கிரக நாயகி"யைத் திட்டமிட்டபடி ஆரம்பித்தார் செல்லப்பன்.

அவருக்கு அந்தத் துணிவைத் தந்தது எது?

"நவக்கிரக நாயகி நாடகத்தை ஐநூறு தடவை மேடையேத்துன காஞ்சி ரங்கமணி நல்லாத் தானே இருக்காரு. நாம மட்டும் கெட்டுப் போயிடுவமா" என்கிற எண்ணம் தான்.

எந்தப் பிரச்சினையும் இல்லாமல் படப்பிடிப்பு சுமூகமாக நடந்தது. படமும் வேகமாக வளர்ந்தது. ஆனால் மற்றவர்கள் எச்சரித்தப்படி அவருக்கும் சோதனை வந்தது.

எப்போது தெரியுமா?

நவக்கிரகங்கள் ஒன்பதும் சந்திக்கிற காட்சியை செட் போடாமல் இயற்கை எழில் சூழ்ந்த ஒகேனக்கலில் மலை மற்றும் அருவியின் பின்னணியில் எடுத்துவிடலாம் என்று டைரக்டர் கே.சங்கர் முடிவு செய்ய அதற்கான ஏற்பாடுகளை செய்து செல்லப்பன் நட்சத்திரப் பட்டாளத் தையும் படப்பிடிப்புக் குழுவை ஒகேனக்கலுக்கு அழைத்து சென்றார்.

முதல் நாள் படப் பிடிப்பு துவங்குவதற்கு சற்று நேரத்துக்கு முன்பு டெல்லியில் இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி காட்டுத்தீ போல் பரவி ஒரு கலவரமான நிலையை உருவாக்கிவிட்டது. உடனடியாக படப்பிடிப்பை ரத்து செய்து விட்டு அனைவரும் தங்கியிருந்த ஹோட்டல் களுக்குத் திரும்பினார்கள்.

மாலைக்குள் நிலைமை கட்டுக்குள் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து அடுத்த நாளும் கலவரமான சூழ்நிலை. இந்தியா முழுவதும் நிலவியதால் சென்னைக்குத் திரும்பி வருவதுதான் புத்திசாலி தனம் என்று செல்லப்பனும், டைரக்டர் சங்கரும் முடிவு செய்து, அனைவரையும் அழைத்துக் கொண்டு சென்னை திரும்பினார்கள்.

ஸ்டுடியோவில் செட் போட்டால் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பிரச்சனை இல்லாமல் படப்பிடிப்பை நடத்தலாம் என்று முடிவு செய்து செல்லப்பன், அருணாச்சலம் ஸ்டுடியோவில் Full Floor செட் போட்டார்.

ஆனால் முதல் நாளன்று படப்பிடிப்பை

**வீரபாண்டிய கட்டபொம்மன் திரைப்படத்தில் வரும் வெள்ளையத் தேவன் கதாபாத்திரத்திற்கு முதலில் S.S. ராஜேந்திரன் அவர்களைத் தான் கேட்டார் BR. பந்துலு. சிவாஜி கணேசன் அவர்களும் S.S.R.ஐ ஒப்புக்கொள்ள வற்புறுத்தினார்.**

**ஆனால், சிவகங்கைச் சீமை படத்தில் நடிப்பதால் வீரபாண்டிய கட்டப்பொம்மனில் நடிக்க இயலாது என்று கூறிவிட்டார் S.S.R.**

**பிறகு தான் நடிகர் ஜெமினி கணேசனை வெள்ளையத்தேவன் கதாபாத்திரத்திற்கு ஒப்பந்தம் செய்தார் BR. பந்துலு.**

நடத்த முடியவில்லை. அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உடல் நிலை பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகவும், அவரது உடல்நிலை சீரியஸாக இருப்பதாகவும் தகவல் வந்ததால் நடிகர் நடிகைகள் படப்பிடிப்புக்கு வர மறுத்து விட்டார்கள்.

எம்.ஜி.ஆர். உடல்நிலை தேறி வீட்டுக்குத் திரும்பியதற்குப் பின்னால்தான் மீண்டும் எல்லா நடிகர், நடிகைகளும் கால்ஷீட் தந்தார்கள்.

குறிப்பிட்ட தேதியில் மாலை ஆறு மணிக்கு படப்பிடிப்பைத் துவங்குவதற்கு கே.ஆர். விஜயாவைத் தவிர மற்ற நடிகர் நடிகைகளெல்லோரும் வந்துவிட்டார்கள்.

முதல் ஷாட்டுக்கான லைட்டிங்கை செய்து கொண்டிருந்தார் கேமராமேன் எம்.சி.சேகர். அப்பொழுது இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. அதனால் மழை நீர் கேபிள் ஒயர்களுக்குள் புகுந்து மின்தடையை ஏற்படுத்த ஸ்டுடியோ இருளில் மூழ்கியது.

இதற்கிடையில் கே.ஆர்.விஜயாவின் கார் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நடுவழியிலேயே நின்றுவிட்டதைக் கேள்விப்பட்டு செல்லப்பன் தனது பேபி ஆஸ்டின் காரில் சென்று கே.ஆர்.விஜயாவை மீட்டுக் கொண்டு வந்தார்.

மழை தொடர்ந்து நீடித்தது. ஆனாலும் படப்பிடிப்பை ரத்து செய்யக்கூடாது என்ற வைராக்யத்துடன் செல்லப்பன் நான்கு ஜெனரேட்டர்களுக்கு ஏற்பாடு செய்தார்.

ஜெனரேட்டர்கள் வந்து சேர்ந்து படப்பிடிப்பைத் துவக்கியபோது விடிகாலை நான்கு மணி. அவர்களும் ஒத்துழைக்க மாலை ஐந்து மணி வரை படப்பிடிப்பை நடத்தி நவக்கிரகங்கள் சம்பந்தப்பட்ட காட்சிகளை முடித்து படத்தையும் முடித்தார் டைரக்டர் கே.சங்கர்.

செல்லப்பனை எச்சரித்த நண்பர்கள், இயக்குநர்கள் அவரது வைராக்யத்துக்காக அவரைப் பாராட்டினார்கள்.

படம் ரிலீஸாகி வெற்றியடைந்தது. பத்திரிகைகள் படத்தைப் புகழ்ந்ததோடு தயாரிப்பாளர் செல்லப்பனின் தன்னம்பிக்கையும், மனத்துணிவையும் புகழ்ந்தன.

நவக்கிரக நாயகியின் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாவது படத்தையும் பக்திப் படமாகவே எடுக்க விரும்பினார். செட்டிநாட்டு மக்களின் இஷ்ட தெய்வமான முருகனைப் பற்றிய படம் என்று முடிவு செய்தார்.

அப்போது அப்பா எழுதிய தனிப்பாடல் ஒன்று அவருக்குக் கிடைத்தது.

**வேலுண்டு வேலுண்டு வேலைய்யா !**
**வினையில்லை வினையில்லை முருகையா**
**செட்டி முருகனென்று பெயர் பெற்றவன்**
**தெண்டாயுதமல்லவா அந்த**
**சித்திர வள்ளியும் ஜாடையில் மற்றொரு**
**செட்டிமகள் அல்லவா.**

இந்த தனிப்பாடலின் முதல் இரண்டு வரிகளைக் கொண்டு படத்தின் டைட்டிலை "வேலுண்டு வினையில்லை" என்று வைத்து வியட்நாம் வீடு சுந்தரத்திடம் தனது யோசனைகளைச் சொல்லி முருகனின் ரத்திர வேலைவைத்துகதைவசனத்தைஎழுதவைத்து கே.சங்கரின் டைரக்ஷனில் எம்.சி.சேகர், ஒளிப்பதிவில், எம்.எஸ்.விஸ்வநான் இசையில் படத்தை தயாரித்தார்.

விஜயகாந்த், அம்பிகா, செந்தில், எம்.என். நம்பியார் ஆகியோர் பிரதான கதாபாத்திரங் களில் நடித்தனர்.

வேலுண்டு வேலுண்டு வேலைய்யா – என்று துவங்கும் அப்பாவின் தனிப்பாடலில், நான் சின்ன சின்ன திருத்தங்களை செய்து கொடுத்தேன். அது இசையமைக்கப்பட்டு படத்தில் இடம் பெற்றது. அத்துடன் அந்தப் பாடல் முழுக்க முழுக்க பழனி மலையைச் சுற்றியே எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தான் படம் தயாரிக்கிறபோது பாட்டெழுத கண்ணதாசன் இல்லையே என்கிற செல்லப்பனின் மனக்குறையை அப்பாவின் தனிப்பாடல் தீர்த்து வைத்தது.

இந்த படத்தைத் தயாரித்த வகையில் இவருக்கு ஆத்ம திருப்தியைத் தந்தது.

இந்தப் படமும் வெற்றி பெற்று நூறு நாட்களைத் தாண்டி ஓடியது. அதற்கு பின்னால் சில படங்களுக்கு பைனான்ஸ் செய்துள்ளார்.

பயணம் தொடரும்.. ■ .

# வாழ்த்துகிறோம்



**மு. சௌம்யா**
தந்தை மு. முத்துராமன்
தாயார் மு. வள்ளிமலர்
வைரவன் (பெரிய வகுப்பு)
வலையபட்டி
10 -ஆம் வகுப்பு : 497 / 500



**S. உமையாள்**
தந்தை AR. சேது
தாயார் S. மங்கையர்க்கரசி
இலுப்பைக்குடி
தேவகோட்டை
10 -ஆம் வகுப்பு : 496 / 500



**சோம. விசாலாட்சி**
தந்தை அரு. சோமசுந்தரம்
தாயார் ந. வெள்ளச்சி
இளையாற்றங்குடி (பெருமருதூர்)
தேவகோட்டை
10 -ஆம் வகுப்பு : 494 / 500



**S.மெய்யப்பன்**
தந்தை Y.சரவணன்
தாயார் S. பார்வதி
வயிரவன் கோவில்
கண்டரமாணிக்கம்
10 -ஆம் வகுப்பு : 487 / 500



**S. அன்னபூரணி**
தந்தை L. சுப்பிரமணியன்
தாயார் S. மீனாட்சி
மாத்தூர் (அரும்பாக்கூர்)
சண்முகநாதபுரம்
10 -ஆம் வகுப்பு : 485 /500



**அழ. சின்னையா**
தந்தை அழ.கரு.அழகப்பன்
தாயார் அழ. நிலா
இளையத்தங்குடி (கழனிவாசல்)
கீழச்சிவல்பட்டி
10 -ஆம் வகுப்பு : 456 /500



**S.ஹிரண்யா**
தந்தை சுரேஷ் நாச்சியப்பன்
தாயார் நாகம்மை சுரேஷ்
வைரவன் கோவில்
(பிள்ளையார் வகுப்பு)
நாச்சியாபுரம்
CBSE : A1 Grade (சிங்கபூர்)



**C. சரஸ்வதி**
தந்தை S. சிதம்பரம்
தாயார் C. அலமேலு
மாத்தூர் (மணலூர்)
கண்டவராயன்பட்டி
+2 : 1190 / 1200



**M.சுவாமிநாதன்**
தந்தை S. முத்தப்பன்
தாயார் M. கல்யாணி
நேமங்கோவில்
மேலைச்சிவபுரி
+2 : 1185 / 1200



**நா. நாச்சம்மை**
தந்தை RM.சின்ன நாச்சியப்பன்
தாயார் N.பொன்னழகம்மை
நேமங்கோவில்
காரைக்குடி
+2 : 1182 / 1200



**சந்தியா செந்தில்நாதன்**
தந்தை செந்தில்நாதன்
தாயார் கண்ணபுரம்
பிள்ளையார்பட்டி
தேவகோட்டை
+2 : 1176 / 1200



**அரு. அன்னபூரணி**
தந்தை KN. அருணாசலம்
தாயார் AR. செல்லம்மை
மாத்தூர் (அரும்பாக்கூர்)
அலவாக்கோட்டை
+2 : 1171 / 1200



**நா. நாச்சம்மை**
தந்தை N. நாச்சியப்பன்
தாயார் N. விசாலாட்சி
காரைக்குடி
+2 : 1165 / 1200




**PL. நாச்சம்மை**
தந்தை முல்லை மு. பழநியப்பன்
தாயார் PL. விசாலாட்சி
மாத்தூர் (கண்ணூர்)
தேவகோட்டை
+2 : 1161 / 1200

திருமா பத்தினிக்குத் தெய்வச் சிலை வடிக்கப் பொதிகை மலையில் இருந்து கல் கொணர விரும்பாது, முடியுடை மூவேந்தரைப் பழித்துப் பேசிய வடபுலத்து மன்னர் கனகவிசயரை போரிட்டு வென்று, இமயப் பனிமலையில் இருந்து கல் கொணர்வதை நோக்கமாகக் கொண்டு, வடதிசை நோக்கி படையெடுத்துச் சென்று, கனகவிசயரை வென்று சிறைப்படுத்தி, கண்ணகிக்குச் சிலை செய்யப் பெயர்த்த கல்லை, அவர்கள் தலைமேல் சுமந்து வரச் செய்து வெற்றிப் புகழோடும், வீரர் குழாமோடும் சேர மன்னன் செங்குட்டுவன் தலைநகர் வஞ்சி மாநகர் வந்தடைந்தான்.

வீடெல்லாம் மகிழ்ச்சி வெள்ளம், வீதி எல்லாம் விழாக் கோலம் எனத் திகழ்ந்தது வஞ்சி மாநகரம்.

கணவன் வரவை எதிர்பார்த்துக் கவலையுடன் அரசி வேண்மாள் மகிழ, மன்னன் அரண்மனை அந்தப்புரம் வந்தடைந்தான். அரசனைக் கண்டு மகிழ்ந்த அரசி வேண்மாள் அரசனோடு அமர்ந்து நிலா முற்றத்தில் சாக்கியர் ஆடும்



## சிலம்பின் கதை 20

# போரால் வருவதல்ல புகழ்

ஞா.மாணிக்கவாசகன்

கொடு கொட்டி என்னும் கூத்தைக் கண்டு மகிழ்ந்திருந்தார்.

பொழுது விடிந்தது. புதுநாள் மலர்ந்தது. அது சேரமான் புகழ்பாடும் வெற்றித் திருநாளாகவும் அமைந்தது. அந்தப்புரம் விட்டு நீங்கி அத்தாணி மண்டபம் வந்தடைந்த சேரமான், அரியணை மணித்தவிசில் வெற்றிப் பெருமிதத்துடன் வீற்றிருந்தான். ஆடுநரும், பாடுநரும் அவனை வந்து கண்டு வணங்கி ஆடிப்பாடி பரிசில் பெற்று மகிழ்ந்தனர். குறுநில மன்னர்களும் வரி, திரை செலுத்துவோரும் வந்து கண்டு வணங்கி வாழ்த்துப் பெற்றுச் சென்றனர்.

அப்போது அங்கே -

வடதிசைப் போரில் சிறைப்பிடித்த கனகவிசயரை சோழ, பாண்டிய மன்னர் களுக்குக் காட்ட நீலன் தலைமையில் அனுப்பப்பட்ட தூதுவர்கள் கனகவிசயருடன் மாலனும், மன்னனைக் காண வந்து காத்திருப்பதை வாயில் காப்போன் வந்து கூற, அவர்களை உடனே அழைத்து வரக் கட்டளை இட்டான். கட்டளை ஏற்று அழைத்து வரப்பட்ட அவர்களும் சேரமான் முன்வந்து நின்று தொழுது பணிந்து வணங்கினர்.



சென்று வந்த நாடுகளின் நடப்புகளைக் கூறுங்கள் என்று மன்னன் கட்டளையிட, நீலன் மன்னனைப் பார்த்து, "வெற்றிப் போர் பல கண்ட வீரக்கழல் அணிந்த வேந்தே! பழம்பெரும் புகழ்ப் பெருமை மிக்க சோழநாடு சென்றோம். அங்கே வச்சிர நாட்டுப் பந்தரும், அவந்தி நாட்டுத் தோரண வாயிலும், மகத நாட்டுப் பட்டிமண்டபமும் சூழ்ந்த சித்திர மண்டபத்தில் வீற்றிருந்த சோழ மன்னனிடம் கனகவிசயரைக் காட்டிய போது வாளோடு வாள் மோதும் போர்க்களத்தில், வீரத்தோடு போர் புரியாது வாளையும், குடையையும் போட்டு விட்டு உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடி ஒளிய நினைக்கும் கோழைகளைப் பிடித்துக் கொண்டு வருவது வீரனுக்கு அழகல்ல என்றும், இந்திரவில் போலும் வெற்றிமாலை அணிந்த மாவீரனுக்கு அழகல்ல, அது வெற்றியும் ஆகாதென்றும் சோழ மன்னன் சொன்னான் என்று உன் மன்னவனிடம் போய்ச் சொல்" என்று சோழப் பேரரசர் கூறியதைக் கேட்டுக் கொண்டு, மன்னர் பெருமானே! நாங்கள் மாமதுரைப்பாண்டியரைக் காணப்போனோம். அவரும் போர்க்களத்தில் தோற்றோடிப் புறமுதுகிட்டவரை, விரட்டிப் பிடித்து வந்து, ஒரு காட்சிப் பொருளைப் போல ஊர் ஊராகச் சென்று காட்டுவது வீரர்கள் வரலாற்றில் இதுவரை இல்லாத புதுமையாக இருக்கிறதே என்று கேலி பேசிச் சிரித்தார் என்று நீலன் கூறியதைக் கேட்ட சேரமன்னன் கண்கள் சிவந்தன, உதடு துடித்தது, உள்ளம் கொதித்தது. பேராற்றல் மிக்க மூவேந்தர்களை இழித்தும், பழித்தும் பேசியவர்கள் வாய்க் கொழுப்பு அடங்க, அவர்களோடு போரிட்டு வென்று, நம்மை இழித்தும், பழித்தும் பேசியவர்கள் இந்தக் கயவர்கள் தான் கண்ணாரக் காணுங்கள் என்று அனுப்பி வைத்தால் சோழனுக்கும், பாண்டியனுக்கும் என்னைப் பாராட்ட மனம் இல்லாது

போனாலும் பரவாயில்லை, இதுவா வீரம் என்று பரிகாசம் செய்யாமலாவது இருந்திருக்கக் கூடாதா என்று ஆத்திரப்பட்ட அவன் வாய்ச் சொற்கள் நெருப்புத் துண்டங்களாக வெளிவந்து விழுந்தன.



நீலனுடன் அரசனைக் காண வந்த மாடல மறையவன் சேர மன்னனின் சினத்தைத் தணிக்க நினைத் தவனாய், சேரன் செங்குட்டு வனைப் பார்த்து, "வேந்தர் வேந்தே! சினம் தணிக! நெய்தல் பூ மலரும் வியலூரை அழித்து வென்றவன் நீ. நேரிவாயில் என்னும் ஊரில் ஆத்தி மலர் மாலை சூடிய ஒன்பது சோழர்களை வென்றவன் நீ! பின்னர் இடும்பில் புறத்தில் நடந்த போரிலும் நீயே வென்றாய்! கடலில் கலம் விட்டவன் நீ! இப்போதும் இமயம் வரை படை நடத்திச் சென்று ஈடில்லா வெற்றி பெற்றுத் தலைநகர் திரும்பியுள்ளாய். போர் வெற்றியே புகழ்ச் சொத்தாகப் பெற்ற நீ, இதற்குப் போய் இவ்வளவு கவலைப்பட்டுக் கனல் கக்க வேண்டாம். ஆறுவது சினம், அமைதி அடைவாயாக".

"மாமன்னா! நின் வாழ்நாள் குளிர்நீர்ப் பொருநை ஆற்று மணலிலும், அதிக எண்ணிக்கை உடையதாக வளர்க. சேர வேந்தே!நான் கூறுவதைச் சற்றே செவி மடுத்து சிந்தையில் கொள்வாயாக. மண்ணாளும் மன்னன் நீ! உன் ஆயுள் ஐம்பது ஆண்டுகளைக் கடந்து விட்ட நிலையிலும் நீ இன்னும் போர், போர் என்றே அலைகிறாய். போர் வீரத்தையே பெரும் புகழாகக் கருதுகிறாய். போர்க்குணம் மன்னர்க்குத் தேவைதான், பகை மன்னர் படையெடுப்பைத் தடுக்க, உள்நாட்டில் எழும் கலகங்களை அடக்க, ஆனால் போரிடுவதையே குணமாகக் கொள்வது உன் போன்ற மன்னர்க்கு அழகல்ல. வெற்றி தரும் பனம்பூ மாலை அணிந்த உன் முன்னோர்களான, கடல் நடுவே கடம்ப மரத்தை வெட்டிய மன்னன் நெடுஞ்சேரலாதன் ஆனாலும், இமயப் பெருமலை உச்சியில் வில் கொடிச் சின்னம் பொறித்த வீரம் மிக்க வேந்தன் குடக்கோச் சேரன் ஆனாலும், மறை ஓதும் அந்தணர் பாலைக் கவுதமனார் விரும்பியபடி அவரை சொர்க்கத்துக்கு அனுப்பிய மன்னன் பல் யானைச் செல் குழு குட்டுவன் ஆனாலும், கொடியவர்களான யவனர்களை வென்று, இமயம் வரை படை நடத்திச் சென்றவன் ஆனாலும், பகையரசர் காவல் மதில்களை அழித்த மாமன்னன் ஆனாலும், அயிரை மலையில் எழுந்தருளியிருக்கும் கொற்றவைக்குக் குடமுழுக்குச் செய்ய இரண்டு கடல்களில் இருந்தும் நீர் கொண்டு வந்து நீராட்டுச் செய்தவன் ஆனாலும், அமராவதிப் பட்டினத்தில் இருந்து சதுக்க பூதங்களை வஞ்சிக்குக் கொண்டு வேள்வி செய்தவன் ஆனாலும், போர் பல புரிந்து பல உயிர்களை மடியச் செய்ததில் எமனையும் வென்ற உன் முன்னோர்கள் பலராயினும், அவர்களில் யாரும் இன்றில்லை.

இளமை நிலையற்றது, உடல் ஒரு நாள் அழியக் கூடியது என்பதையும் நீ உணரவேண்டும். செல்வச் செழிப்பு, அரண்மனை வாசம், அரச வாழ்வு எல்லாம் ஒரு நாள் ஒன்றுமில்லாமல் போய் விடவும் கூடும் என்பதற்கு அடையாளமாக உன்னால் சிறைப்பிடிக்கப்பட்ட இந்தக் கனகவிசயர்களே இருப்பதை நீ எண்ணிப் பார்க்க வேண்டும். மன்னராய் விளங்கியவர்கள் இன்று அவமானச் சின்னமாக இங்கு நிற்கிறார்கள். போரால் இவர்கள் பெற்றிருந்த புகழ், பெருமை எல்லாம் இன்று புழுதி மண்ணில் புதையுண்டு போய்விட்டதைப் பார்த்தாய் அல்லவா? திருமகள் போலும் அழகு. கொலுவிருக்கும் இளமங்கையராய் இருந்தவர்கள் எல்லாம், கால வேகத்தில் நரை, திரை, மூப்பு எய்தி நலிவடைந்து கிடப்பதையும், வில் வளைத்துப் போரிட்ட வீரத் தோள்கள் எல்லாம் கூனிக் குறுகிக் குந்திக் கிடப்பதையும் நீ பார்த்ததில்லையா.......? உடல் அழியக் கூடியது. அழிவற்றது உயிர் மட்டுமே! வாழ்நாளில் செய்த நன்மை தீமைக்கு ஏற்ப

உயிர் புதுப்புது உடல் எடுத்துப் பிறக்கும். மன்னனாக பிறந்தவன் தொடரும் எல்லாப் பிறப்புகளிலும் மன்னனாகவே பிறப்பான் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. இப்பிறப்பில் செல்வச் சீமானாகப் பிறப்பெடுத்தவன் அடுத்து வரும் பிறவியிலும் செல்வச் சீமானாகவே பிறப்பான் என்பதும் நிச்சயம் இல்லை.

புலவர் போற்றும் புகழுடைய மாமன்னா! நான் பாடிப் பரிசில் பெற வரும் பாணன் அல்ல. பெறுதற்கரிதான மனிதப் பிறப்பெடுத்த உயிர்கள் அறவழிச் சென்று மேன்மை அடைய எண்ணாமல் உயிர்க் கொலை புரியும் பாவச் செயல்களில் ஈடுபட்டுப் பெரும் பழிக்கு ஆளாகிவிடக் கூடாது என்கிற ஆதங்கத்தால் உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்! வேல் அன்று வெற்றி தருவது. போர் அன்று புகழ் தருவது. நல்லறச் செயல்கள் ஒன்றே உயிர்க்கு ஊதியம் என்பதை வேந்தே! நீ இனியாவது உணர்ந்து அதன்படி நடந்தால் நீ இறவாப் புகழ் பெறலாம். உயிர் உடம்பெடுத்து உலகில் பிறந்தவர்கள் எத்தனை நாள் இங்கு வாழ்வார்கள் என்று யாராலும் உறுதியாகச் சொல்ல இயலாது. வழிப்போக்கர் தங்கும் சத்திரம்போன்றது உயிர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை. எனவே, உடலில் தெம்பும், உயிரும் இருக்கும் போதே நல்லதைச் செய்துவிட வேண்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போட்டால், காலன் நம்மை அள்ளிக் கொண்டு போக வந்துவிடவும் கூடும். எனவே, அன்றன்று செய்த நல்லறம், உள்ளத்துள் பொய்யாது ஒழுகுபவன் வானுலகத் தெய்வத்துக்கு நிகராவான்.

"நீதிநெறி பிறழாது செங்கோல் செலுத்தும் மன்னனும், உள்ளத்தால் பொய்யாது ஒழுகும் மக்களும் நிறைந்திருக்கும் நாட்டில் மண்ணில் தெரியும் சொர்க்கம், மனிதர் கண்ணில் தெரியும் தெய்வம். எனவே, சேர வேந்தே! நீயும் உன் நாடும் இந்த உயர் நிலை அடைய இனியாவது ஆவன செய்வாயாக" எனச் சேரமான் மனம் கொள அறிவுரை கூறிய மாடல மறையவன் மன்னனிடம் விடைபெற்றுச் சென்றான்.



மாடல மறையவன் விடைபெற்றுச் சென்று விட்டான் என்றாலும், அவன் அரசன் மனம் கொளச் சொன்ன அறிவுரைகளை அவன் நனைவைச் சுற்றி வந்து வட்டமிட்டபடியே இருந்தன. பகைவர் படையெடுத்து வந்தால் நாட்டைப் பாதுகாக்கப் போர்க்களம் காண வேண்டியது கட்டாயம் ஆகும். அதே போல் உள்நாட்டில் மக்கள் நலனுக்கு எதிராக சண்டை, சச்சரவுகள், கலகம் நிகழுமானால் அமைதி காக்கப் போரிடத்தான் நேரும். ஆனால், பகை மன்னர் சிலர் கூடியிருந்த விருந்து மண்டபம் ஒன்றில் கனகவிசயர் இருவரும் வாய்க்கொழுப்பெடுத்து, நம் போன்ற மன்னர்கள் இங்கில்லாத காலத்தில் மூவேந்தர்களும் இங்கே வந்து நமது இமயமலையில் தங்களின் புலி, வில், கயல் சின்னங்களைப் பொறித்து விட்டுப் போய் விட்டார்கள். இப்போது அவர்கள் இங்கே வந்தால் நாம் அவர்களுக்குத் தகுந்த பாடம் புகட்டுவோம் என்ற பேசியதைக் கேட்ட சிலர் இங்கே வந்து கூறக்கேட்டு அவர்களோடு போரிடப் புறப்பட்டு, போரிட்டு வெற்றி கொண்டு, அவ்விருவரை சிறைப் பிடித்து வந்ததை ஒரு கணம் மனத்திரையில் செங்குட்டுவன் சித்திரமாக ஓடவிட்டுப் பார்த்தான். தெய்வச் சிலை செய்யக் கல் கொணர வடதிசை சென்றது என்பது ஒரு காரணம்தான். காரியம் வேறு என்பதை அவன் உள்ளுணர்வு அவனுக்கு இடித்துரைத்திருக்கும்

ஒரு திருமுகம் அனுப்பிய இமயப் பெருமலையில் இருந்து தெய்வச்சிலை வடிக்கக் கல் வேண்டும் என்று கேட்டிருந்தால், வடக்கே சேரனுடன் நட்புறவில் இருந்த மன்னர்கள் பலரில் ஒருவர் கல்லோடு வந்து சேரனைக் கண்டு மகிழ்ந்து தங்கள் காணிக்கைப் பொருளாகவே அக்கல்லை வைத்துக்

கொள்ளச் சொல்லித் தந்திருக்க மாட்டார்களா? தந்திருப்பார்கள். பின் சேரன் அதை ஏன் செய்யவில்லை? போர் வெறி. எனவே, வெற்றி விழா எடுத்த திருநாளில் சேரமன்னன் ஒரு முடிவெடுத்தான். இனிப் போரில்லை, எவரோடும், பகையில்லை என்ற நல்ல முடிவு தான் அது. அமைச்சர் அழும்பில் வேளையும், வரிவிதிக்கும் கணக்கரையும் அழைத்தான். சிற்றரசர்கள் யாரும் இனிக் கப்பம் கட்ட வந்து அரண்மனை வாயிலில் காத்திருக்க வேண்டாம் என்று சொல்லுங்கள், வரிவிலக்கு அளியுங்கள் என்று ஆணையிட்டான். படைத் தலைவன் வில்லவன் கோதையை அழைத்து, நாட்டில் உள்ள சிறைச்சாலைகளை எல்லாம் தகர்த்தெறியுங்கள், காவல் கைதிகளை எல்லாம் விடுதலை செய்க என்றான்.

சிறைக் கூடங்களாக இருந்தவை பொது மன்றங்களாயின. வழிப்போக்கர் வந்து தங்கும் மண்டபங்களாயின. நாடாளும் அரச நீதி கேடுறாது செயல்படும் ஒரு நாட்டில்தான் பெண்களின் கற்பொழுக்கம் பெருமைப்படும். கற்றவர்கள் அறவொழுக்கம் போற்றப்படும். பசி இல்லாத நாடும் வசை இல்லா அரசும் பெருமைக்கு உரிய புகழ்ச் சின்னங்கள் அல்லவா? சேர மன்னன் செங்குட்டுவன் சிந்தையில் இந்த எண்ணங்களுக்கே இப்போது முதலிடம்.

சோழவள நாட்டிலே பிறந்து செல்வச் செழிப்போடும், சிறப்போடும் வாழ்ந்த கண்ணகி, ஊழ்வினை வந்து உறுத்த பாண்டிய நாடு வந்து வீண் பழிக்கு ஆளாகிக் கொலையுண்ட தன் கணவன் கோவலனுக்காக நீதி கேட்டு நெடுஞ்செழியப் பாண்டியன் அரசவை வரை சென்று வாதாடி, நீதி தவறிய குற்றத்திற்காகப் பாண்டிய மன்னன் தன் உயிரை மாய்த்துக் கொண்டது கண்டும் தன் சினம் தணியாது, மதுரை மாநகரையே தீ உண்ணச் செய்துவிட்டு, தன்னுடைய சேர நாடு திருச்செங்குன்றம் வந்து மலை மீது வேங்கை மர நிழலில் தனித்துத் தவித்திருந்த போது வானவருடன் வந்த கணவனோடு மேலுலகம் சென்ற பொற்புடைப் பெண்

கற்புடை கண்ணகிக்குக் கோட்டமும், கோவிலும் கும்பிடச் சிலையும் செய்யத் திட்டம் இட்டான்.

திட்டம் இட்டதோடு நின்று விடாமல், சிற்ப நூல் தேர்ந்த தெய்வச் சிலை வடிப்பதில் கைதேர்ந்த சிற்பிகளைக் கொண்டு இமயப் பனிமலையில் பெயர்த்தெடுத்த கல்லை கங்கையில் புனித நீராட்டி கனகவிசயர் சுமந்து வர வஞ்சி நகர் கொண்டு வந்து பத்தினிக் கோட்டத்தில் அமைந்த கண்ணகி திருஉருவச் சிலைக்குப் பொன் அணிகலன் பூட்டிப் பூ மாலை சாத்தி வாசமலர் தூவி அர்ச்சனை செய்து, திசைக் காவலர்களை வாசலில் நிறுத்தி விழாக்களும், வேள்விகளும் முறையாக நடக்கத் தக்க ஏற்பாடுகள் செய்து காண்பவர் வியக்கக் கண்ணகி கோவிலை கட்டி முடித்தான்.

வட இமயம் முதல் தென் குமரி வரை தன் ஆணைச் சக்கரம் சுழல ஒரு குடைக்கீழ் அரசாண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மகன், ஞாயிற்றுச் சோழன் மகள் மணக்கிள்ளி பெற்ற பிள்ளை செங்குட்டுவன், கொங்கரைப் போரிட்டு வென்றவன். கங்கைக் கரை வரை சென்று இமயப் புகழ் பெற்றவன். போர்க்குணமே தன் பொதுக் குணமாகக் கொண்ட இவனை மாடல மறையவன் அறிவுரைகள், போரை வெறுத்து அமைதி தான் நாடெங்கும் ஆட்சி செய்யும் அவா மேலிடக் காரணம் ஆனது. இளமையும் அழகும் நிலையற்றது. செல்வமும் வாழ்வும் ஆறிடும் மடுவும் மேடும் போலாகும். உயர்ந்தவர் தாழ்வர். தாழ்ந்தவர் உயர்வர். இதுவே உலக இயற்கை என்பதை உணர வைத்தது. மனம் திருந்திய மன்னன் மாதர் கற்பின் பெருமைக்கு நிலையான ஓர் அடையாளமாக, எடுத்துக்காட்டாக இருக்கக் கண்ணகி கோட்டம் அமைத்தான். இதனால் மானிடப் பெண்ணாகப் பிறந்த கண்ணகி திருமா பத்தினி தெய்வமானாள். பெண்ணின் கற்பு புகழ் மகுடம் சூட்டப் பெற்று புனிதம் பெற்றது.

பூவும் அகில் புகையும் வாசச் சந்தன மணப் பொருட்களும் கொண்டு பூசை விழாக்கள் சிறப்புற நடக்க இறையிலியாக நிலம் வழங்கி, கண்ணகி தேவிக்கு பூசை செய்யும் நித்தியத்தொண்டை வேதந்திகையிடம் ஒப்படைத்து விட்டு, கண்ணகி திருக்கோயிலை மூன்று முறை வலமாகச் சுற்றி வந்து வணங்கி நின்றான் இமய வரம்பன் சேரன் செங்குட்டுவன்.

ஒலிக்கும்.....

பாடுவார் முத்தப்பர்



# மருதீசர் திருவிளையாடல்

## பரசுராமன்

மனம்! அது என்னவோ கெட்டதிலேயே, பதிந்து கிடக்கின்றது. என்னதான் முயற்சி செய்தாலும், வருவதுபோலப் போக்குக் காட்டி விட்டு, அந்த மனம் மறுபடியும் கெட்டதிலேயே, முன்பைவிட ஆழமாகப் பதிந்து விடுகிறது. ஒப்புக் கொள்கிறோமோ இல்லையோ? இதுதான் உண்மை.

ஓர் உதாரணக் கதையைப் பார்த்து விட்டுப் பாடுவாரிடம் போகலாம். இவ்வளவு பீடிகையும் / முன்னறிவிப்பும் எதற்காக என்பது புரியும்.

சுவாமிக்கு நைவேத்தியம் செய்ய வேண்டும் என்பதற்காக ஒருவர், ஒருடஜன் வாழைப் பழங்கள் வாங்கி வந்திருந்தார்.

ஆனால் மறுநாள் பூஜையின்போது பார்த்தால் இருபழங்கள் மட்டுமே இருந்தன. கேட்டதற்கு...

"நல்லாயிருக்கான்னு பாக்கறதுக்காக ரெண்டுபழம் சாப்பிட்டுப் பார்த்தேம்பா! நல்லா டேஸ்டா இருந்திச்சா, இன்னம் ரெண்டயும் எடுத்து உள்ள தள்ளிட்டேன். ராத்திரி சாப்பாட்டுக் கப்பறம் அப்பிடி இப்பிடின்னு பத்து பழம் காலியாயிருச்சு. இந்த ரெண்டக்கூட, காலையிலியே காலி பண்ணிருப்பேன். லேசா அழுகினா மாதிரி இருந்திச்சு. சரிதான் போ! சாமிக்கி இதயாவது வைவேத்தியம் செஞ்சிரலாம்னு வெச்சிட்டேன்" என்று பதில் சொன்னார்.

அழுகலாக இருந்ததால் விட்டு வைத்தாராம். இல்லையேல் அதையும் உள்ளே தள்ளியிருப்பா ராம். மொத்தத்தில், நல்லதெல்லாம் நமக்கு; கெட்டதெல்லாம் சுவாமிக்கு என்பதில் தெளிவு! இந்தத் தெளிவை, பாடுவார் என்ன செய்கிறார் என்பதை அவர் பாடல் வாயிலாகவே பார்க்கலாம். அவர் எதிர்க்கட்சியில் நிற்கிறார்.

*வல்ல வரகுணன் சோழன் மகளை மணம்*
*செய்தருளி வடிவைப்பார்த்து*
*அல்லிருக்கும் குழலியிவள் மருதப்பர்க்கு*
*ஆவள் நமக்கு அன்னையாமென்றே*

*தில்லை மன்றில் ஆடி மெய்யில் ஐக்கியமாம்*
*படி சேர்த்தான் செயங்கொண்டாரே!*
*நல்லது கண்டால் நாயகன் தனக்கு என்றே*
*உலகில் உள்ளோர் நவிலுவாரே*

பாடுவாரின் இப்பாடல், பிரமிப்பை ஊட்டக்கூடியது. "அட!

அப்படி என்னங்க பிரமிப்பு? பெரூ....சா சொல்லிட்டாரு!" எனநினைத்தால், அதற்குப் பாடுவார் பொறுப்பாக மாட்டார். பாடு வாரைப் போன்ற உயர்ந்த உள்ளம்படைத் தவர்களை உணராத நம்முடைய தன்மையைத்தான் அது வெளிப்படுத்தும்.

வாருங்கள்! ஒரு சிறு காசோலையில் (செக்), கோடிக்கணக்கான ரூபாய்களை ஒருசில சொற்களில் எழுதுவதைப் போல, பாடுவார் எழுதியிருக்கும் இப்பாடலின் ஆழத்தைச் சற்று காண்போம்!

வரகுணன் எனும் மன்னர், தன் மனைவியைச் சிவபெருமானுக்கே சமர்ப்பித்த மாபெரும் வரலாற்றைச் சொல்கிறது இப்பாடல் இப்பாடலை நாம் உணர வேண்டுமானால், இப்பாடலில் சொல்லப்பட்ட வரகுணன் எனும் மன்னரைப் பற்றி, ஓரளவிற்காவது உணர்ந்தால் தான், பாடுவாரின் உள்ளம் புரியும்.

வரகுண மன்னரைப் பற்றிய அத்தகவல்கள் ஒரு சிறு குறிப்பு...சிவபெருமானுடன் நேருக்கு நேராகப் பேசும் ஆற்றல் கொண்டவர். திருவிடைமருதூர் ஆலயக்கிழக்கு வாசலில், 'பிரம்ம ஹத்தி'என ஒரு வடிவம் இடம்பெற்றிருக் கிறதே; அதற்குக் காரணர்த்தா இவரே! பிரம்மஹத்தியால் பீடிககப்பட்ட வரகுணன், சிவபெருமான் உத்தரவுப் படிக் கிழக்குவாசல் வழியே நுழைய, சிவனை எதிர்கொள்ள முடியாத பிரம்மஹத்தி, அங்கேயே வாசலில் இருந்து விட்டது. சிவ பெருமான் உத்தரவுப்படி வரகுணன், மேலைவாசல் வழியே வெளியேற, வரகுணன் வருகையை எதிர்பார்த்துக் கீழை வாசலில் காத்திருந்த பிரம்மஹத்தி ஏமாந்து போனது.

அடுத்து... திருக்கைலாய தரிசனத்தை இம்மன்னருக்காக சிவபெருமான் மதுரையில் காட்டியருளினார்.

அடுத்து... வேப்பமரத்தின் அடியில் வேப்பம் விதைகள் ஏராளமாக விழுந்திருந்தன. அவற்றைப் பார்த்ததும், அவ்விதைகள் சிவலிங்கம் போலத் தோற்றம் அளித்ததால், உடனே அவ்விடத்தில் வேப்பமரத்திற்கு விதானங்கள் அமைத்தவர்.

அடுத்து... நம் அனைவருக்கும் ஓரள



விற்காவது நன்றாகத் தெரிந்த வரலாறு... திருவிளையாடல் எனும் திரைப்படத்தில், ஹேமநாத பாகவதர் மதுரைக்குவந்து, தன்னோடு போட்டியிட்டுப்பாட சவால் விடுக்க, மன்னர் பாணபத்திரரை பாட்டுப் போட்டியில் ஈடுபடவேண்ட, பாணபத்திரருக்காக சிவபெரு மானே போய்ப் பாடல் பாடி ஹேமநாதபாகவதரை வென்றதாகப் பார்த்தோமல்லவா? அந்நிகழ்வில் இடம்பெற்ற மன்னர் இந்த வரகுணபாண்டியர் தான்.

இவ்வாறு வரகுண பாண்டியரின் தூய்மையான சிவபக்தியை விவரிக்கும் நிகழ்வுகள் பலப்பல. அவற்றை ஓரளவிற்காவது அறிந்தால் தான், பாடுவாரின் இப்பாடல் பொருள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் மனதில் பதியும். மன்னரின் சிவபக்தியில் சிலவற்றைப் பார்த்தோமல்லவா? அந்த நினைவோடு, பாடுவாரின் பாடல் சொல்லும் வரலாற்றைப் பார்க்கலாம் வாருங்கள்!

மதுரை மன்னரான வரகுண பாண்டியர், சோழமன்னர் மகளை மணம் புரிந்தார். திருமணம் திருவிடைமருதூரில் நடைபெற்றது. முதல்நாள் இரவு! படுக்கை வீட்டில் மன்னர், மென்மையான நறுமணம் வீசும் மஞ்சத்தில் மாப்பிள்ளை கோலத்தில் வீற்றிருந்தார்.

சிறிது நேரத்தில் தோழிப் பெண்கள், சோழர் மகளான மணமகளை அழைத்துவந்து, அறையில் விட்டுப் போனார்கள். அவர்கள் போனதும், மணமகள் மிகுந்த நாணத்தோடு மெள்...ள நடந்து, மஞ்சத்தை நெருங்கினாள்.அப்போது அவளைப் பார்த்த மன்னர் பரவச நிலையை அடைந்தார்.

வேறு யாருக்கும் கிட்டாத அப்பரவச நிலையையும், அதனால் விளைந்த விளைவையும் திருவிடைமருதூர்ப் புராணம், நேர்முக ஒலிபரப்பே செய்கிறது.

*அளக பாரமும் ஆதிதன் பாரமும் இடையும்*
*களப வண்டலும் கண்ணிமை வண்டையும் கண்டு*
*இளகு நெஞ்சுடன் எம்பிராற்கு இவள் தகும் என்றே*
*புளகிதத்துடன் மனைவியைக் கொடு புறப்பட்டான்*
*(திருவிடைமருதூர்ப் புராணம்)*

அறைக்குள் நுழைந்து மஞ்சத்தை நெருங்கிய, புதுமண மகளைப் பார்த்ததும், கூந்தல் தொடங்கி கால்கள் வரை அழகுப் பதுமையாய் விளங்கிய மனைவியின் அழகு, மன்னர் மனதில் பரவச நிலையை உண்டாக்கியது. நெஞ்சு இளகியது.

"ஆகா! அழகுப்பதுமையான இவள், எம்பெருமான் திருவிடைமருதூர் ஈசனாகிய மருதீசனுக்கல்லவா தகுந்தவள்! இவளை மருதீசனுக்கே சமர்ப்பிக்க வேண்டும்" என்று கூறி, மனதில் குதூகலம்பொங்க, மனைவியின் கையைப்பிடித்து, அந்த நடுநிசி வேளையில் கோயிலை அடைந்தார் மன்னர். அங்கு போனதும் வாசலில் மனைவியை நிறுத்தி, "மருதப்பா! மருதப்பா!" என்று கூவினார்.

"வரகுணா! ஏன் அழைத்தாய்?"என்றபடியே சிவபெருமானும் ஆலயக்கதவுகளைத் திறந்து கொண்டு வந்தார்.

இறைவனைத் தரிசித்ததும், வணங்கிய வரகுணன்,"சிவப்பரம்பொருளே! இந்தப் பெண் எனக்குத் தாயைவிட உயர்ந்தவள்! ஆகையால் இவள் உமக்கே தகுந்தவள். இவளை நீர் ஏற்றுக் கொண்டால் தான், யான் உயிர்பிழைத்து உய்வேன். இல்லையேல் நான் உயிர்வாழ மாட்டேன்" என்றார்.

*கோயிலில் புகுந்து இடைமருது இறைவனைக்கூவி*
*வாயினைத் திறந்து இறைவனும் வரகுணாவென்ன*
*தாயினும் நலமெனக்கு இவள் உமக்ககிவள் தகுமென்று*
*ஆயில்உய்குவேன் அல்லது உய்யேனென வறைந்தான்*
*(திருவிடைமருதூர்ப் புராணம்)*

வரகுண பாண்டியரின் தூய்மையான உள்ளமும், அவர் வார்த்தைகளும் கேட்ட மருதீசர், "வரகுணா! உன் எண்ணப்படியே இவளை நான் ஏற்கிறேன்" என்று சொல்லி, ஆலயத்தின் உள்ளே அழைத்துப்போய், தனக்குள்ளே ஐக்கியப்படுத்திக் கொண்டார். அதேசமயம்...

"நம் பக்தனான இந்த வரகுணனின் தூய்மையான உள்ளம் புரியாமல், பெண்ணைச் சார்ந்தவர்கள் இவளைத் தேடிக் காணாமல், 'வரகுணன் அவளைக் கொன்று விட்டான்' என்று, வரகுணனை ஏசுவார்களே!" என்று, தனக்குள்ளே ஐக்கியப்படுத்திக் கொண்ட பெண்ணின் கையும் வளையலும் மட்டும் வெளியே, பார்வைக்குத் தெரியும் படியாக வைத்தார் சிவபெருமான்.

மனைவியைச் சிவபெருமானிடம் சமர்ப்பணம் செய்த வரகுண பாண்டியரோ, படுக்கை வீட்டிற்குத்திரும்பினார். மறுநாள் மன்னரின் மனைவியைக் காண வந்த பணிப் பெண்களும் தோழியரும் அவளைக் காணாமல் தேடத்துவங்க...

மருதீசர் கோயிலில் ஆலயக்கதவுகளைத் திறந்து, தீபங்களை ஏற்றினார்கள். தீபஒளியில் சிவலிங்கத் திருமேனியில் ஒருபெண்ணின்கையும் வளையலும் முளைத்ததைப்போல இருந்ததைக் கண்டு திகைத்தார்கள். தகவல்பரவ, சோழ மன்னர், வரகுணபாண்டியர் உட்பட அனைவரும் ஆலயத்தில் கூடிவிட்டார்கள்.

சிவலிங்கத் திருமேனியில் வெளிப்பட்டுத் தெரிந்த பெண்ணின் கரத்தையும் வளையலை யும் கண்டு திகைத்தார்கள். விவரம் அறிந்த வரகுணபாண்டியர் கதறினார்; "சிவப்பரம் பொருளே! நானளித்த அப்பெண்ணை ஏற்ற நீ, அவள் கையையும் வளையையும் இப்படி வெளியில் விட்டு விட்டாயே! நான் தொட்டு அழைத்து வந்த கை அது என்பதால், அதை மட்டும் ஏற்கவில்லையா பரம்பொருளே! "எனக் கதறினார்.


அதே வேளையில் அனைவரும் பார்க்கும் படியாக, சிவலிங்கத் திருமேனியில் வெளிப் பட்டிருந்த கையையும் வளையையும், மருதீசர் தனக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்டார். அனைவரும் திகைத்த அவ்வேளையில் வரகுண பாண்டியர் நடந்ததைச் சொன்னார்.

"நேற்றிரவு அழகுத் திருமேனியுடன் மன்னர் மகளைக் கண்டதும்,அவள் என் கண்களுக்கு அம்பிகையாகவேதெரிந்தாள். நல்லதெல்லாம் இறைவனுக்கு அல்லவா? ஆகையால் நானே அவளை அழைத்து வந்து, மருதீசருக்கு அர்ப்பணித்தேன்" என விவரித்தார்.அனைவரும் வியந்தார்கள்.

"நல்லது கண்டால் அது நாயகனுக்கு என்று உலகிலுள்ளோர் சொல்வார்கள். வரகுண பாண்டியர் மூலமாக அதை நிரூபித்த சிவபெருமானே!" என்று இப்பாடலில் பாடித் துதிக்கிறார் பாடுவார்.

கட்டுரை தொடக்கத்தில் கண்டவாறு, நல்லதை இறைவனுக்கு சமர்ப்பணம் செய்ய வேண்டுமே தவிர, அழுகிய வாழைப்பழத்தை ஆண்டவனுக்குச் சமர்ப்பிக்கக் கூடாது என, மருதீசர் திருவிளையாடலைச் சொல்லிப் பாடமே நடத்தி விட்டார் பாடுவார். கூடவே தூய்மையான உள்ளத்தின் செயல் பாட்டையும் தூய்மையான பக்தியின் செயல் பாட்டையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

நகர்வலம்



# எங்கள் ஊர் மானகிரி

**"வாழி நகரத்தார் வள்ளன்மை மிக்கோர்கள்**
**வாழி பலவும் உயர்ந்திருக்க ஆழிசூழ்**
**இத்தலத்தில் கோயில் இயற்றினோர் வாழியவே**
**எத்தலமும் போற்றி இனிது".**

என்னும் பெரியோர்களின் பெருந்தன்மைக்கும், அருள்வாக்கிற்கு ஒப்ப வாழ்ந்திருப்பவர் நகரத்தார். தற்போது நகரத்தார் வாழும் 76 ஊர்களில் மானகிரியும் ஒன்று. மானகிரி, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகா, மானகிரி சுக்கானேந்தல் வட்டத்தைச் சேர்ந்தது.



கல்லல் ஊராட்சியின் கீழ் உள்ள தளக்காவூர் பஞ்சாயத்தைச் சேர்ந்தது. மானகிரியின் தாய்க் கிராமம் தளக்காவூர்.

மானகிரி என்ற பெயர் வந்த விதம் ஒரு சுவையான கதையாகும். முன்பு மானகிரியைச் சுற்றி அடர்ந்த காடுகளும், நீர் நிலைகளும் இருந்தனவாம். அங்கு ஏராளமான மான்கள் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தனவாம்.

நீர் நிலைகளில் நீர் அருந்தி மகிழ்ந் திருந்தனவாம். எனவே, மான்கள் வாழும் மான் ஏரி என்று பெயரிட்டு அழைத்தனராம். அது நாளடைவில் மருவி தற்பொழுது மானகிரியாகத் திகழ்கிறது.

இங்கு 95 நகரத்தார் புள்ளிகள் உள்ளனர். இலுப்பைக்குடிக் கோவில் 41, வைரவன் கோவில் 42, மாத்தூர் (மணலூர்) 11, இளையாத்தங்குடி 1 ஆக 95 புள்ளிகள் உள்ளனர். ஒவ்வொரு கணக்குக்காரரும் ஒரு வருடம் கோவில் காரியஸ்தர் ஆவார்கள். ஒரு கரைக்கு ஒருவர் வீதம் ஒரு வருடம் கோயில் காரியஸ்தராய் இருப்பார்கள்.

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழிக்கேற்ப சிறிய



அளவில் கோவில் கட்டி இறைவழிபாடு செய்து வந்தனர்.

இங்கு ஆதிகாலத்தில் இருந்து வேல் ஊன்றி வைக்கப்பட்டு, ஓட்டுக் கூடாரத்தில் இறை வழிபாடு நடந்து வந்தது. இந்த வேல் மிகச் சக்தி வாய்ந்தது. "வேல் நெடுங்கண்ணி வேலவனுக்குக் கொடுத்த வேல்" போன்று சக்தி வாய்ந்தது. இக்கோவிலுக்கு வேலாயுதங் கோவில் என்றே பெயர் நிலவி வந்தது. காலை மற்றும் இரவு ஆக இரு வேளைகள் பூசை நடைபெறுகின்றது. பாசிப்பயறு, சுண்டல் முன்னர் நெய்வேத்யமாக வழங்கப்பட்டு வந்தன.

பின்னாளில் கோவிலை விஸ்தீகரிக்க விரும்பினர். உள்ளூர், வெளியூர், உள்நாடு மற்றும் வெளிநாட்டில் வாழும் மானகிரி நகரத்தார்களின் பேருதவியினால் திருமுருக சுப்பிரமணிய சுவாமி கோவில் உருவாயிற்று. கோவில் கட்டும் பொழுது வேலை எடுக்க முனைந்தனர். எடுக்க வரவில்லை. எனவே, வேல் இருந்த இடத்திலேயே வேலை வைத்து பூசை செய்து வருகிறார்கள். அருள்மிகு கிருபானந்த வாரியார் மற்றும் அப்போதைய மதுரை ஆதீனம் வந்திருந்து அருளாசி வழங்கினார்கள்.

சுப்பிரமணிய சுவாமி கோவிலில் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி பிரதானக் கருவறையில் இடம் பெற்றுள்ளனர். உள் சுற்றுப் பிரகாரத்தில் கணபதி, சிறிய காசி விஸ்வநாதர் விசாலாட்சி, சண்டிகேஸ்வர் உள்ளார்கள்.

வெளி மண்டபத்தில் நவக்கிரகங்கள், தங்கள் தம்பதியருடன் காட்சி தருகின்றனர். இவர்கள் மிகச் சக்தி வாய்ந்தவர்கள். இவர்களை 3 வாரம் அல்லது 9 வாரம் தொடர்ந்து சனிக்கிழமைகளில் வணங்கி வந்தால் திருமணம் கைகூடும். தம்பதி சமேதரராக இருப்பதால் தம்பதி சமேதரராகும் வைபவம் கூடிய விரைவில் கைகூடும்.

சிவன்கோவில் கட்டும் எண்ணம் மானகிரி மக்களின் மனதில் உதித்தது. பாலாலயம் செய்யப்பட்டது. திருப்பணி வேலைகள் நடந்தன. காசியிலிருந்து சிவலிங்க மூர்த்தி கொண்டு வரப்பட்டது. காஞ்சிபுரத்திலிருந்து ஆவுடை மற்றும் பரிவார மூர்த்திகள் கொண்டு வரப்பட்டன. சிவன் தனிச் சன்னிதானத்தில் காணப்படுகிறார். அவரது நாமம் "தன புவன கங்காபுரீஸ்வரர்". மிக அருகில் மற்றொரு சன்னிதானத்தில் அம்பாள் அருள்பாலிக்கிறாள். அவளது திருநாமம் "சுகந்த பரிமள சுந்தரி அம்பாள்" ஆகும்.

சிவனுக்கு அருகில் கணபதியும், பால முருகனும் வீற்றிருக்கிறார்கள். சிவனைச் சுற்றி பரிவார மூர்த்திகளாக நர்த்தன கணபதி, குரு பகவான், லிங்கோத்பவர், துர்க்கை, சண்டிகேஸ்வரர் திகழ்கிறார்கள். சுப்பிரமணிய சுவாமி சன்னிதானத்தின் உட்பிரகாரத்தில் தனித்தனி சன்னிதிகளில், விநாயகருக்கு அருகில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதரராகப் பெருமாளும், மகாலெட்சுமியும், வைரவரும் எழுந்தருளியுள்ளார்கள்.

தொன்றுதொட்டு ஆண்டுதோறும் வைகாசி மாதம் கடைசி வெள்ளியன்று மகேஸ்வர பூசை நடைபெறும். பூசையன்று அரிசி உள்ள குடத்தினுள் வேலை ஊன்றி, வேலை இடும்பன் போல் அலங்கரிப்பர். பூசை இடும்பனுக்கு நடைபெறும். மாவிளக்கு ஏற்றுவர். பின்னர் அன்னதானம் நடைபெறும்.

அன்னதானத்தைத் தொடர்ந்து சுப்பிரமணிய சுவாமி வள்ளி தெய்வானையுடன் ஊஞ்சலில் இருப்பார். திருக்கல்யாணம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து கணபதி மூஷிக வாகனத்திலும், முருகன் மயில் வாகனத்திலும் திருவீதி உலா வருவார்கள்.

பிரதோஷம் என்றாலே பிரகாசம் தான். மிகச் சிறப்பாக நடைபெறும். அபிசேக



ஆராதனைகள் நடைபெறும். சுவாமி அம்பாள் ரிஷப வாகனத்தில் சிவன் கோவிலைச் சுற்றி உலா வருவார்கள். மகளிர் கூடி சிவ மந்திரங்களைப் பாடி கூட்டுப் பிரார்த்தனை செய்வார்கள்.

நகரத்தாரிடையே புரட்டாசி மாதம் ஏடு படித்தல் என்னும் இராமாயணம் படித்தல் நிகழ்ச்சி இன்றும் பல ஊர்களில் நடைபெறுகிறது. இது போல சுப்பிரமணிய சுவாமி கோவிலிலும் 70 வருடங்களுக்கு மேலாக இராமாயணம் படித்து வருகிறார்கள். முன்பு 1 மாதம் 1 1/2 மாதம் படித்து வந்துள்ளனர்.

தற்பொழுது காலத்தின் அருமை கருதியும், மக்களின் மனநிலை கருதியும் ஒரு வாரம் படிக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு காண்டம் வீதம் படிக்கப்படுகிறது.

திரு. லெ.அருணாசலம் செட்டியார் அவர்களால் 1926ஆம் ஆண்டு லெட்சுமி ஆச்சி, அருணாசலம் செட்டியார் துவக்கப் பள்ளி துவங்கப்பட்டது. 1966ல் நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. 2006ஆம் ஆண்டில் சிறந்த பள்ளிக்கான விருது (Best Award) தமிழக அரசு வழங்கியது. ஊரில் சில பிற சமூகத்தினரும் வாழ்ந்து வருகிறார்கள். எல்லோரும் இன, மத நல்லிணக்கத்துடன் நட்புடன் கூடி வாழ்ந்து வருகின்றனர்.

“மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது” என்பர். மானகிரி ஊர் சிறியதாக இருப்பினும், புள்ளி களின் எண்ணிக்கை குறைவாக இருப்பினும் செய்யும் செயல்கள் கூடி வாழும் குணம், பண்பாடுகள் பெரிதாகக் காணப்படுகிறது.



எளிய கிராமச் சூழலில், நகரமும் இல்லாமல் கிராமமும் இல்லாமல் நகரத்தோடு ஒட்டிய கிராமச் சூழலில் காணப்படுகிறது மானகிரி. குழல் விளக்குகள், சாலைகளின் அமைப்பு, தெரு விளக்குகள் அனைத்தும் போதுமான அளவில் இடம் பெற்றுள்ளன.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தபால் அலுவலகம், கடைவீதிகள் ஒருங்கே செவ்வனே அமைந்துள்ளன. உப்பு முதல் கற்பூரம் வரை, இருந்த இடத்தில் இருந்தே வாங்கி விடுமளவுக்கு ஏராளமான கடைகள் உள்ளன.

குடிநீர், மின் இணைப்பு, பேருந்து வசதிகளுடன் வளமாக விளங்குகிறது மானகிரி.

மானகிரி ஒரு முன் மாதிரிக் கிராமமாகத் திகழ்கிறது என்பது நாம் காணும் உண்மை.



**தகவல்: மெ.அழகம்மை,** B.Sc.,MA.,MEd
தலைமையாசிரியை (ஓய்வு)

குறிப்பு: மானகிரி பற்றிய கட்டுரையில் விடப்பட்டுள்ளதாகக் கருதப்படும் கூடுதல் விவரங்கள் இருப்பின் அவற்றை வாசகர்கள் அனுப்பி வைக்கலாம். தகுந்தவை பிரசுரிக்கப்படும்.

– ஆ-ர்

## அறிவிப்பு

நமது செட்டிநாடு மாத இதழில் நகர்வலம் பகுதியில் (1) கோட்டையூர், (2) அரியக்குடி, (3) ஆறாவயல், (4) தேவகோட்டை, (5) காரைக்குடி, (6) கல்லல், (7) தானிச்சாவூரணி, (8) மானகிரி, (9) கல்லுப்பட்டி, ஆகிய நகரத்தார் ஊர்களைப் பற்றிய கட்டுரைகளை முனைவர் மு.பழனியப்பன் மற்றும் கானாடுகாத்தான் கரு. மணிகண்டன் ஆகியோர் இணைந்து கள ஆய்வு செய்து எழுத உள்ளார்கள். அவர்களுக்குத் தேவையான விவரங்களை அந்தந்த ஊர்களைச் சார்ந்தவர்கள் வழங்கி ஒத்துழைப்பு நல்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு: செல் : 94429 13985
போன்: 04561-272985


சண்முகநாதன் பொறியியல் கல்லூரி
SHANMUGANATHAN ENGINEERING COLLEGE
STRIVE·EXCEL·CREATE
www.shanmuganathanengg.in
www.snec.ac.in
( Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai )
( NAAC அங்கீகாரம் & ISO 9001: 2008 தரச்சான்று பெற்ற கல்வி நிறுவனம் )
Ph: 04333 - 274913 / 274914 / 207450
அரசம்பட்டி - 622 507, திருமயம், புதுக்கோட்டை (மாவட்டம்)
ஒழுக்கம் நிறைந்த கல்வி !
ஒப்பற்ற வேலைவாய்ப்பு !!
SHANMUGANATHAN ENGINEERING COLLEGE
PLACEMENT
2017 BATCH
150+ OFFERS
2015 - 2016ம் கல்வியாண்டின் அண்ணா பல்கலைக்கழக ரேங்க் பட்டியலில் எமது மாணவர்கள்
8
B.E.
Civil
CSE
ECE
EEE
MECH
M.E.
CSE
Structural Engineering
VLSI Design
Ph.D.
Civil Engg.
+2 பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு கல்வி கட்டணத்தில் ஏராளச் சலுகைகள்.
SC / ST மாணவர்களுக்கு கல்வி கட்டணம் கிடையாது.
பேருந்து மற்றும் தங்கும் விடுதி வசதி உண்டு.
நகரத்தார் சமூக மாணவ, மாணவியருக்கு 4 ஆண்டுகளும் கல்வி கட்டணத்தில் 25% சிறப்பு சலுகை அளிக்கப்படும்.
அட்மிஷன் தொடர்புக்கு :-
73 73 73 15 41
73 73 73 15 61
Counselling Code
3918
அறக்கட்டளை அலுவலகம்
306, செக்காலை ரோடு,
காரைக்குடி
Ph : 04565 - 233245, 210339

# திரை ஓவியம்







## ஆயிரம் கோடியில் மகாபாரதம்!

பாகுபலி கற்பனையாக உருவான கதை என்றாலும், அதில் இருந்த நியாய, தர்மங்கள் ரசிகர்களின் அதீத கவனத்தை ஈர்த்தது. இந்நிலையில் இந்தியாவின் மிகப் பெரும் இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரதம், ஆயிரம் கோடி ரூபாய் செலவில் பிரம்மாண்டமான முறையில் திரைப் படமாக உருவாகவுள்ளது.

மனித வாழ்வின் மகத்துவத்தையும், வாழ்வியல் நெறிகளையும் கூறும் மகாபாரதத்தை இன்றைய காலகட்ட நவீன தொழில்நுட்பத்தில், அடுத்த தலைமுறையும் ரசிக்கும் வகையில் ஹைடெக் திரைப்படமாக எடுக்க முடிவு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுபற்றி ஐக்கிய அரபு எமிரேட்டில் “யு.ஏ.இ. எக்ஸ்சேஞ்ச் மற்றும் என்.எம்.சி. ஹெல்த்கேர்” நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் சேர்மன் ரகுராம் ஷெட்டி வெளியியிட்டுள்ள அறிவிப்பில், பெரும் பொருட்செலவில் “தி மகாபாரதம்” எனும் பெயரில் திரைக் காவியமாக தயாராகக் கூடிய இந்தப் படத்தின் படப்பிடிப்பு அடுத்த ஆண்டு (2018) செப்டம்பர் மாதம் தொடங்குகிறது. இரண்டு பாகமாக தயாராகும் இப்படம் வரும் 2020ஆம் ஆண்டில் வெளியிடத் திட்டமிடப் பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

பிரபல இயக்குநரும், தயாரிப்பாளருமான வி.ஏ.குமார் மேனன் இப்படத்தை இயக்குகிறார். எம்.டி.வாசுதேவன் நாயர், திரைக்கதை எழுதி வருகிறார். அவர் கூறும்போது, மகாபாரத காவியத் திரைப்படம் 100க்கும் மேற்பட்ட மொழிகளில் வெளியாகும். உலகில் சுமார் 300 கோடி மக்களை இப்படம் சென்றடையும் எனத் தாம் நம்புவதாகக் குறிப்பிட்டார். மோகன்லால் முக்கிய கதாபாத்திரம் ஏற்கிறார். மற்ற கதாபாத்திரங்களுக்கு அனுஷ்கா, காவ்யா மாதவன் ஆகியோரின் பெயர்கள் பரிசீலனையில் இருந்து வருகின்றன. தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்கள் ஒப்பந்தமாகவுள்ளனர்.



## தயாரிப்பாளரான இயக்குனர்!

மறைந்த இயக்குநர் ராம. நாராயணனின் மகன் என்.முரளி ஸ்ரீதேனாண்டாள் பிலிம்ஸ் சார்பில் தயாரிக்கும் படத்துக்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை. விஜய்யின் 61 ஆவது படமாக உருவாக உள்ள இப்படம் தேனாண்டாள் பிலிம்ஸ் தயாரித்த படங்களிலேயே பிரம்மாண்டமான படமாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. விஜய் அட்லி கூட்டணி ‘தெறி’. படத்தைத் தொடர்ந்து மீண்டும் இப்படத்தின் மூலம் இணைந்திருக்கிறார்கள். இப்படத்தில், சமந்தா, காஜல் அகர்வால், நித்யா மேனன் ஆகியோருடன் வடிவேலு முக்கிய வேடத்தில் நடிக்கிறார். ஏ.ஆர். ரஹ்மான் இசையில், கடந்த பிப்ரவரியில் தொடங்கப்பட்ட இப்படம் வரும் தீபாவளிக்குத் திரைக்குவரும் என்கிறார்கள் படக்குழுவினர். இதற்கிடையே அட்லி தயாரிப்பாளராக பிரமோஷன் ஆகி, தயாரித்த சங்கிலி புங்கிலி கதவ தொற படம் வெளியாகி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.



# கபாலி 2.0 காலா!

பா. ரஞ்ஜித் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் காலா படத்தின் படப்பிடிப்பு மும்பையில் தொடங்கியுள்ளது. ரஜினி தவிர படத்தில் நடிக்கும் மற்ற நடிகர்களின் அதிகாரப்பூர்வ பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. ஹியூமா குரேஷி, ஈஸ்வரிராவ், நானா படேகர், அஞ்சலி பாட்டீல், சமுத்திரக்கனி, சம்பத், ரவி கேளா, சாயாஜி ஷிண்டே, பங்கஜ் த்ரிபாதி, மகி மகிஜா, மேஜர் பிக்ரம்ஜித், அருள்தாஸ், அரவிந்த் ஆகாஷ், 'வத்திக்குச்சி' திலீபன், ரமேஷ் திலக், மணிகண்டன், அருந்ததி, சாக்ஷி அகர்வால், நிதிஷ், வேலு, ஜெயபெருமாள், கருப்பு நம்பியார், யதின் கார்யகர், ராஜ் மதன், சுகன்யா உள்ளிட்ட பலர் ரஜினியோடு நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். மும்பையில் நடந்து வரும் முதற்கட்ட படப்பிடிப்பில் ரஜினியோடு சமுத்திரக்கனி, அருள்தாஸ், வத்திக்குச்சி திலீபன் உள்ளிட்டோர் நடித்து வருகின்றனர். இதையடுத்து நானா படேகர், சாயாஜி ஷிண்டே உள்ளிட்டோரும் படப்பிடிப்பில் கலந்து கொள்கின்றனர். ரஜினி அரசியல் பிரவேசம் ஒருபுறம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்க, ரசிகர்கள் கபாலிக்கு அடுத்த படமாக காலா வருமா அல்லது 2.0 க்கு அடுத்த படமாக காலா வருமா என்று பந்தயம் கட்டி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.



# மின்மினியில் அமலா பால்!

விஷ்ணு விஷால் அமலா பால் நடித்து வரும் புதிய படம் 'மின்மினி'. 'முண்டாசுப்பட்டி' படத்திற்கு பிறகு இயக்குநர் ராமும், விஷாலும் மீண்டும் இணைந்து பணியாற்றி வருகின்றனர். அமலா பால் கதாநாயகியாக நடிக்கிறார். 'ஆக்ஸஸ் பிலிம் பேக்டரி' சார்பில் ஜி டில்லிபாபு தயாரிக்கும் இப்படத்தில், இசையமைப்பாளர் ஜிப்ரான், ஒளிப்பதிவாளர் பி வி ஷங்கர், படத்தொகுப்பாளர் சான் லோகேஷ், கலை இயக்குநர் ஏ கோபி ஆனந்த், ஸ்டண்ட் மாஸ்டர் விக்கி, ஆடை வடிவமைப்பாளர் ஏ கீர்த்தி வாசன் என பல திறமையான தொழில் நுட்ப கலைஞர்கள் பணியாற்று கின்றனர். சைக்கோ திரில்லர் பாணியில் உருவாகி வரும் எங்கள் 'மின்மினி' படத்தின் டீசரை நாங்கள் விரைவில் வெளியிட முடிவு செய்துள்ளோம்" என்று உற்சாகமாக கூறுகிறார் இயக்குநர் ராம்.

எஸ்.பானு



# அமைரா தஸ்தூர் ஆட்டம்!

வாசன் விஷுவல் வென்ச்சர்ஸ் என்ற தயாரிப்பு நிறுவனம் சார்பில் கே.எஸ். சீனிவாசன், கே.எஸ்.சிவராமன் தற்போது பாலாஜி தரணிதரன் இயக்கத்தில் காளிதாஸ் ஜெயராம் நடிக்கும் "ஒரு பக்க கதை " படத்தை தயாரித்து வருகிறார்கள் அந்த படம் விரைவில் திரைக்கு வர இருக்கிறது. தொடர்ந்து பிரபு தேவா நடிக்கும் " எங் மங் சங்" படத்தையும் தயாரித்து வருகிறார்கள். தற்போது சந்தானம் நாயகனாக நடிக்கும் " ஓடி ஓடி உழைக்கனும்" படத்தையும் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். நாயகியாக அமைரா தஸ்தூர் நடிக்கிறார். ஓடி ஓடி உழைக்கணும் படத்தின் இரண்டு கட்டப் படப்பிடிப்பு முடிவடைந்தது. சமீபத்தில் அமைரா தஸ்தூர் ஜாலியாக ஆடிப் பாடிய பாடல் காட்சி சென்னை செம்மொழிப் பூங்காவில் அசோக்ராஜா நடன அமைப்பில் படமாக்கப் பட்டது. அவர் ஜாலியாக ஆடிப்பாடும் அழகை சந்தானம் மெய்மறந்து ரசித்த காட்சியையும் படமாக்கினர் படக்குழுவினர். ஜாலியான ஒரு கதையை படமாக உருவாக்கிக் கொண்டிருக்கிறார் கண்ணா லட்டு தின்ன ஆசையா வெற்றிப் பட இயக்குனர் கே.எஸ். மணிகண்டன் .

# நற்பணிகள் பலசெய்த நகர விடுதி 'மெ'



அரச குடும்பத்தின் அடுத்த தலைமுறையின் தொடர்பும் கிடைத்திருக்கிறது.

தேவகோட்டையில் இலுப்பைக்குடிக் கோவிலைச் சேர்ந்த ஐந்து வீட்டுப் பங்காளிகளில் ஒருவராகிய திரு.மு.ராம.லெ.ராம. அண்ணாமலை செட்டியார் - வள்ளியம்மை ஆச்சி தம்பதியருக்கு 13.06.1932ல் திரு.அண. மெய்யப்ப செட்டியார் பிறந்தார். தேவகோட்டை நகரத்தார் பள்ளியில் மிகவும் கண்டிப்பான குணமுடைய தலைமை ஆசிரியர் திரு.வாஞ்சி ஐயர் வழிகாட்டுதலில் பயின்றார். 1949ல்பள்ளி இறுதி வகுப்புப் படிக்கும் போது திருமணம் ஆயிற்று. பள்ளிப் படிப்பு நின்று போனது.

சிங்கப்பூரில் பல திருக்கோயில் பணிகளைத் தலைமையேற்றுத் திறம்பட நடத்தி வருபவரும், லயன் சித்தி விநாயகர் கோயில், நகரத்தார் தெண்டாயுதபாணி கோயில், ஸ்ரீ ருத்ரகாளியம்மன் கோயில், ஆகியவற்றின் தலைவராக சிறப்பாகப் பணி செய்தவரும், சிங்கப்பூரில் பல ஆண்டுகளாகச் சைவமும், தமிழும் வளரப் பாடுபட்டு வருபவருமாகிய டாக்டர் திரு.இராம.கருணாநிதி அவர்களின் மூத்த சகோதரி திருமதி மீனாட்சி என்ற கனகாம்பாள் ஆச்சி இவருடைய துணைவியாராக வாய்த்தார். இவர் தேவகோட்டை வயிரவன் கோவில் பிரிவு திரு.சித.சொ. இராமசாமி செட்டியார் - ஏகம்மை ஆச்சியின் மூத்த புதல்வி ஆவார்.

திருமணமான பின் கருங்குளம் ரங்கனாதன் செட்டியாருக்குச் சொந்தமான பேப்பர் ஸ்டோரில், திருவனந்தபுரத்தில் 2 ஆண்டுகள் பணி செய்தார். பின்னர் மதுரையில் பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் அவர்கள் மகன் திரு. கனக சபாபதி செட்டியார் நடத்தி வந்த கதிர்மணி பேப்பர் ஸ்டோர் மற்றும் உலகம்பட்டி நா.கரு. சண்முகம் செட்டியார் நடத்தி வந்த யுனிவர்சல் பேப்பர் ஸ்டோர் ஆகியவற்றில் சுமார் 8 ஆண்டுகள் பணியாற்றினார்.

மதுரை நகர விடுதியில் கலைத் தந்தை திரு.கருமுத்து தியாகராசன் செட்டியார் தலைவராகவும், மீனாட்சி புத்தக நிலையம் திரு.செல்லப்ப செட்டியார் செயலாளராகவும் இருந்த காலத்தில் 04.11.1960 அன்று நகர விடுதி மேலாளராகப் பொறுப்பேற்றார். பொதுவாக நகரத்தார் பொது நிறுவனத்தில் ஒருவர்

கொஞ்சம் குறைவான உயரம், சிறிது பருத்த உடல், சற்றே சரிந்த தொப்பை நரைத்த தலைமுடி, தீட்சண்யமான கண்கள், சிரித்த முகம், எல்லையற்ற நினைவாற்றல் இவற்றுக்குச் சொந்தக்காரரர் 85 வயதான பின்னும் இடையறாது இயங்கிக் கொண்டிருக்கும் திரு.அண. மெய்யப்ப செட்டியார், மதுரை நகர விடுதி 'மெ' என்றால் இவரை செட்டிநாடு அறியும்.

அண்மையில் நகரத்தார் மகளிர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஒரு விழாவில் செட்டிநாடு குழும மேலாண் இயக்குநர் திரு.எம்.ஏ.எம்.ஆர். முத்தையா அவர்கள் திரு.'மெ.' அவர்களைச் சந்தித்து மகிழ்ந்த போது 'நெடுநாள் ஒரு நகர விடுதியின் வரலாற்றில் தன்னை ஈடுபடுத்திப் பணி செய்த ஒருவரைப் பற்றி உலகம் அறிய வேண்டும்' என்ற அவருடைய விழைவே இந்தக் கட்டுரைக்கான காரணம்.

1945ல் திரு.'மெ.' அவர்கள் பள்ளியில் படித்த போது தேவகோட்டை ஸ்ரீ மீனாட்சி வித்யா பரிபாலன சங்கத்தின் பள்ளிக் கட்டிடத்தை டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தான் திறந்து வைத்தார்களாம். அவர்கள் மதுரையில் வாழ்ந்த போது டாக்டர் எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்களோடும், டாக்டர் எம்.ஏ.எம். ராமசாமி செட்டியார் அவர்களோடும் பேசிப் பழகும் வாய்ப்புப் பெற்றார். இப்போது

பணி செய்யும் போது தலைவர்கள், செயலாளர்கள் மாறி வரும் போது தொடர்ந்து பணியாற்ற இயலுவதில்லை. ஆனால், திரு.'மெ.' அவர்கள் பொறுப்பில் உள்ளவர்கள் விருப்பங்களுக்கு ஏற்ப செயல்பட்டு திறமையாலும், பணிவுடையவராகவும், மிகுந்த பொறுமை உடையவராகவும், யாருடைய மனமும் புண்படாமல் பேசுகிற இயல்பினாலும் 30.11.1993 வரை 33 ஆண்டுகள் நகர விடுதி மேலாளராகத் தொடர்ந்து பணியாற்றி வரலாறு படைத்தார்.

**பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**
**அணியல்ல மற்றுப் பிற**

என்ற திருவள்ளுவரின் இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்த பெருமகன் இவர். கலைத்தந்தை திரு. கருமுத்து. தியாகராசன் செட்டியார் (ஸ்ரீ மீனாட்சி நூற்பாலை அதிபர்) கண்டரமாணிக்கம் திரு.லெ.அழகு சுந்தரம் செட்டியார் (ஸ்ரீ மகாலெட்சுமி நூற்பாலை அதிபர்), இவருடைய சகோதரரும், கலைத் தந்தையார் அவர்களுடைய மாப்பிள்ளையுமான திரு. லெ. நாராயணன் செட்டியார், (ஸ்ரீ விசாலாட்சி நூற்பாலை அதிபர்), பனையபட்டி திரு. எஸ்.பி.ஏ. நடராசன் செட்டியார் (ஸ்ரீ ராஜேஸ்வரி நூற்பாலை அதிபர்) ஆகியோர் தலைவர்களாக இருந்தார்கள். திரு.ஏவி.கே. தியாகராசன் செட்டியார், டாக்டர் சுப. அண்ணாமலை, பொற்கிழிக் கவிஞர் திரு. சொ.சொ.மீ. சுந்தரம் ஆகியோர் பல்லாண்டுகளாகச் செயலாளர் களாக இருந்தார்கள்.

மதுரை நகர விடுதி மேலாளராக திரு.'மெ.' அவர்கள் பணியாற்றிய போது ஒரு வியக்கத்தக்க சம்பவம் நடைபெற்றது. திரு. கக்கன் அவர்கள் தமிழ் நாடு அரசின் உள்துறை அமைச்சராக இருந்தார். அவருடைய மகனுக்கும், மகளுக்கும் ஒரே நாளில் மீனாட்சி அம்மன் கோவிலில் திருமணம் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. தன்னுடைய பிள்ளைகளை மதுரை நகர விடுதியில் திருமணத்தன்று தங்க வைத்து, மேளதாளத்துடன் கோவிலுக்குள் அழைத்துச் செல்ல விரும்பினார் அமைச்சர். இந்தக் காலமாக இருந்தால் மாவட்ட ஆட்சியர் மூலம் தகவல் தெரிவித்துத் தங்கள் அதிகாரத்தை வெளிப்படுத்தி விடுதியைப் பயன்படுத்திக் கொண்டிருப்பர். திரு.கக்கன் அவர்கள் மிகவும் சான்றாண்மை மிக்க ஒரு எளிய தலைவர் என்பதால் திரு.'மெ.' அவர்களிடம் தொலைபேசியில் இசைவு கேட்டிருக்கிறார். 'மெ.' எதையும் தலைவர் அறியாமல் தன்னிச்சையாகச் செய்யமாட்டார். கலைத் தந்தையாரிடம் செய்தி தெரிவித்த போது அவர்கள் அனுமதி கொடுத்தார்கள்.

திருமணத்திற்குச் சில நாட்கள் முன்பு அமைச்சர் அவர்களும், மாவட்ட ஆட்சியரும் விடுதியை வந்து பார்த்தார்கள் (பழைய கட்டிடம்). அவர்கள் இடம் போதுமானது என முடிவு செய்தபின், திரு.'மெ.' அவர்களிடம் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா என்று கேட்டார்கள். அவர் உடனே நகர விடுதிக்குக் குடிநீர் இணைப்புக் கேட்டு விண்ணப்பித்து வெகுநாட்களாகியும் கிடைக்கவில்லை என்றார்களாம். மறுநாளே குடிநீர் இணைப்புக் கொடுக்கப் பெற்றது. திருமணத்தன்று அமைச்சர் பெருமக்கள், அதிகாரிகள் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உள்ளிட்ட திரைப்பட நடிகர்கள் புடைசூழ மேளதாளத்துடன் திருமணமாக வேண்டிய பிள்ளைகளை நகர விடுதியிலிருந்து திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று திருமணம் நடைபெற்றது.

திரு. 'மெ.' அவர்கள் நகர விடுதி மேலாளராக இருந்த போது மகமை மிகவும் குறைவு. வேறு வருமானம் இல்லை. எனவே, இவர்கள் பெரு முயற்சி செய்து வாழ்நாள் உறுப்பினர்களாகப் பலரைச் சங்கத்தில் இணைத்து வந்தார்கள். அப்போதுதான் இவர்கள் சம்பளம் எடுத்துக் கொள்ள முடியும். ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்குத் திரும்பப் பெறும் கல்வி உதவித் தொகை வழங்கப் பெற்றபோது தகுதியானவர்களுக்குப் பரிந்துரை செய்தார். படிப்பு முடிந்து வேலைக்குச் சென்றவர்களிடம் மிக முயன்று பணம் திரும்பப் பெற்று மற்றவர்களுக்கு உதவ இருப்பு இருக்குமாறு பார்த்துக் கொண்டார்.

செட்டிநாட்டுப் பகுதியில் உள்ள அனைத்து ஊர்களிலும் உள்ள பல விலாசங்களை இவர் அறிவார். தொலைபேசி எண்களைத் தொகுத்து வைத்திருப்பார். தன்னை அணுகுபவர்களுக்குத் தேவையான விபரம் சொல்லி உதவுவார். திருமணப் பேச்சுக்களுக்குத் துணை செய்வார். திரு.லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைவராக இருந்த போது கட்டிட நிதி வசூலிக்கக் குழுவினரோடு அல்லும் பகலும் இடையறாது பாடுபட்டார்.

நான்கு பெண்களுக்குத் தந்தையாகவும்

இரு மகன்களைப் படிக்க வைக்க வேண்டிய சூழ்நிலையிலும் இருந்தமையால் மிகுந்த வறுமையில் இருந்தாலும், நேர்மையாக உழைப்புக்கு அஞ்சாதவராக வாழ்ந்தார். இவருடைய மைத்துனர் திரு.இராம. கருணாநிதி இவருடைய பெண்களின் திருமணங்களுக்குப் பெரிய அளவில் பொருளுதவி செய்தார்.

எனவே, தேவகோட்டையில் இராம. ஏகம்மை திருமண மண்டபத்தை அவர் கட்டிய போது அதனை மேற்பார்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. கடந்த 24 ஆண்டுகளாக அந்தப் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறார். இன்று வரை கண்ணாடி இல்லாமல் எழுதவும், படிக்கவும் இயலுகிறது.

இவருடைய மூத்த மகன் திரு.கண்ணப்பன் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியிலிருந்து ஓய்வு பெற்றுப் பொதுப்பணிகளில் ஈடுபட்டு வருகிறார். இரண்டாவது மகன் கிருஷ்ணன், வண்டலூர் அருகே இரத்தினமங்கலத்தில் இலட்சுமி குபேரர் கோவிலும், அரைக்காசு அம்மன் கோவிலும் கட்டிப் பராமரித்து வருகிறார். திரைப்படத் துறையினரும், அரசியல் தலைவர்களும், பொதுமக்களும் பெருமளவில் ஈடுபாட்டோடு இக்கோயில்களுக்கு வருகை தருகிறார்கள். நாள்தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறுகிறது. ஆங்கில வருடப் பிறப்பன்று அளவில்லாத கூட்டம் கூடும்.

தேவகோட்டையில் பலருக்கும் உதவியாக வாழ்ந்து வரும் திரு.'மெ' தன்னுடைய 100 ஆவது பிறந்த நாளில் திருவாசக முற்றோதலில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் வேஷ்டி சேலை வாங்கித் தருவதாக நம்பிக்கையோடு வாக்களித்திருக்கிறார். அந்த நல்ல நாளை ஆவலோடு எதிர் நோக்கிக் காத்திருப்போம்.

**கட்டுரை: பேராசிரியர் தேவநாவே** ■


# புனர்ஜனி

## ஹோலிஸ்டிக் ஹெல்த் & ஹீலிங் ஹோம்

**67, செக்காலை முதல்வீதி, காரைக்குடி - 2**

**அறுவை சிகிச்சை இல்லாமல் மூட்டுவலி, முட்டித் தேய்மானம், முதுகுத் தண்டு பிரச்சனைகளுக்கு மருத்துவ நிபுணர் குழுவால் சிறப்பு கேரள ஆயுர்வேத சிகிச்சைகள்**

### ஆயுர்வேத சிகிச்சைகளுக்காக
### கேரளா செல்ல வேண்டிய அவசியம் இனி இல்லை!

அனைத்து நீண்டகால, குறுகியகால நோய்களுக்கு ஒருங்கிணைந்த கேரள ஆயுர்வேத, சித்தா, யோகா மற்றும் நிரூபிக்கப்பட்ட மாற்று மருத்துவ முறைகள் மூலம் பக்க விளைவுகள் இல்லாத மூலிகை மருந்துகள் கொண்டு தகுதி வாய்ந்த மருத்துவ நிபுணர் குழுவால் தகுந்த கட்டணத்தில் சிகிச்சை அளிக்கப்படும்.



### சிறப்பு சிகிச்சைகள்:

▸ தண்டுவடப் பிரச்சனைகள் ▸ ஆண்மைக்குறைவு ▸ குழந்தையின்மை ▸ கழுத்து வலி ▸ இடுப்பு வலி ▸ மூட்டுவலி ▸ குடிப்பழக்கம், சிகரெட் பழக்கத்திலிருந்து விடுபட ▸ பக்கவாதம் பாதித்தவர்களுக்கான மறுவாழ்வு மருத்துவம் ▸ கணினி நிபுணர்கள் / வங்கி அலுவலர்களுக்கான சிகிச்சைகள் ▸ மூளை வளர்ச்சி குன்றியவர்களுக்கு (ஆட்டிசம்) சிகிச்சை ▸ எடை குறைத்தல்.

**மருத்துவ ஆலோசனை பெற முன்பதிவு அவசியம்**


**தொடர்புக்கு**

**போன்: 04565 226036 செல்: 9487918806** www.karaikudiayurveda.com

ADVT



# நகரத்தார் பெருமக்களுக்காக சிறப்பு யாத்திரை



கடவுளைக்காண கயிலாயம் செல்ல அரிய வாய்ப்பு...

புறப்படும் நாள் : 12.09.2017 / சென்னையிலிருந்து 11 நாட்கள்

**சிவ பக்தர்களான நகரத்தார் பெருமக்களாகிய நீங்கள் சிவனுறையும் கயிலையை காண சேர்ந்து வாருங்கள் என அன்புடன் அழைக்கின்றோம்...**

முற்றிலும் நகரத்தார் பெருமக்களுக்காகவே இந்த பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நகரத்தார் பெருமக்களை தனிகவனத்துடன் நயம்பட அழைத்துசெல்வதில் பெருமை கொள்கிறோம். இந்த திருப்பயணம் சம்பந்தமாக ஜூலை மாதத்தில் காரைக்குடியிலும், சென்னையிலும் LCD Projector மூலம் திருக்கயிலை, மானஸரோவர் தரிசன காட்சி காண்பித்து விளக்கம் சொல்கின்றோம்.

மேலும் விபரங்களுக்கும், முன்பதிவிற்கும்

சென்னை. செல் : **99659 33673**

## முக்திநாத் யாத்திரை - 6/10 நாட்கள் (மாதம் ஒரு குழு)

2000ம் ஆண்டு முதல் தொடர்ந்து 18ம் ஆண்டு பயணம்



# திருக்கயிலாயம் - மானஸரோவர்



ஹெலிகாப்டரில் 11 நாட்கள் புறப்படும் நாள் : ஆகஸ்ட் 23 / செப்டம்பர் 12

திருக்கயிலாயம், மானஸரோவர் யாத்திரைக்கு சம்பள ஆட்களை அனுப்புவதில்லை. 18 ஆண்டுகள் அனுபவமுள்ள நாங்களே உங்களுக்கு சேவை செய்ய வருகின்றோம்.

கட்டணத்தை குறைத்து வசதிகளை குறைப்பதில்லை, பயண நாட்களையும் குறைப்பதில்லை.

தமிழக அரசின் மானிய தொகை கைலாஷ் யாத்திரைக்கு ரூ.40,000, முக்திநாத் யாத்திரைக்கு ரூ.10,000. எங்கள் குழுவில் வரும் அடியார்களுக்கு கிடைக்க ஆலோசனை வழங்கப்படும்.

நவசோதிர்லிங்கம் பண்டரிபுரம், ஷீரடி, துவாரகை கடல் கோவில் - 16நாட்கள் (மாதம் ஒரு குழு)

ஷீரடி, சனிசிங்கனாப்பூர் விமானத்தில் 2 நாட்கள்

பூரி, கொல்கத்தா, கயா, காசி/ஹரித்துவார் டெல்லி, ஆக்ரா, ஜெய்ப்பூர்-10/15 நாட்கள் விமானத்தில் காசி, கயா, அலகாபாத் 5 நாட்கள் மாதம் ஒரு குழு

ஆன்மீக இலங்கை 7 நாட்கள்
யாழ்ப்பாணம், தேவாரப்பாடல் பெற்ற சிவாலயங்கள், இராமாயணம் தொடர்புள்ள இடங்கள், சக்திபீடங்கள், முருகனின் கதிர்காமம், கந்தசாமி கோவில் மற்றும் புத்தமத தலங்கள் தரிசனம்

அந்தமான் தீவுகள் விமானத்தில் 5 நாட்கள் அனைத்து செலவுகளுடன் ரூ. 20,003

உல்லாச இலங்கை 3 / 4 / 5 நாட்கள்

சிங்கப்பூர் மலேசியா 6 நாட்கள்

துபாய், அபுதாபி 4 நாட்கள் / மாதம் ஒரு குழு

பேங்காக் பட்டயா 4 நாட்கள் / மாதம் ஒரு குழு

கம்போடியா வியட்நாம் 9 நாட்கள்

மாலத்தீவுகள் 4 நாட்கள்

இந்தோனேஷியா பாலித்தீவுகள் 7 நாட்கள்

பூடான் சிக்கிம் 13 நாட்கள் / மாதம் ஒரு குழு

மொரிசியஸ் மஹாசிவராத்திரிக்கு 5 நாட்கள் (மாதம் ஒரு குழு)

கேங்டாங் டார்ஜிலிங் 10 நாட்கள்

சிம்லா குல்லு மணாலி 10 நாட்கள்

தாங்கள் ஒரு குழுவாக இருந்தால் விரும்பும் தேதியில் விரும்பும் சுற்றுலாக்கள் நடத்தித் தருகின்றோம்.

ஒரு குழுவிற்கு 32 அன்பர்கள் மட்டும். குழுவாக வருபவர்களுக்கு கட்டணச்சலுகை உண்டு

அனைத்து உள்நாடு, வெளிநாடு சுற்றுலாக்களுக்கு அணுகவும்





# மனோகர் டிராவல்ஸ்

2/176, பெரியண்ண வீதி, ஈரோடு - 638001. செல் : 94433 80152, 94434 04919

பெரியமேட், சென்னை-600 003. செல் : 95780 38845, 81220 20021

www.manohartravels.com e-mail : manohartravvels@gmail.com

# 2017 மே மாத சந்தாதாரர்கள்



வாழ்நாள் சந்தா செலுத்துபவர்களின் படம் இப்பகுதியில் இடம் பெறும். சந்தா செலுத்திய அனைவருக்கும் நமது செட்டிநாடு சார்பாக நன்றி!
- ஆ-ர்.

## வாழ்நாள் சந்தா ரூ.10,000/

- N. செல்லம்மை ஆச்சி, காரைக்குடி - 2

## ஐந்தாண்டு சந்தா ரூ.1,200/

- SM. அண்ணாமலை, சென்னை - 94
- CN. கண்ணன், சென்னை - 53
- C.KN. சுப்பிரமணியன், பெரியகுளம்
- V. அழகப்பன், திருச்சி - 18
- V.KR.KR.M. மனோகரன், கண்டரமாணிக்கம்
- S. பழனியப்பன், மதுரை - 20
- RM. சோமசுந்தரம், கோயம்புத்தூர் - 6
- RM. வைத்தியநாதன், நாட்டரசன்கோட்டை
- RM. நாராயணன், திருச்சி - 1
- L. திருநாவுக்கரசு, காரைக்குடி - 1
- A.CT. ரவி, சென்னை - 53
- V. ராமசாமி @ ஸ்ரீதர், சென்னை - 24
- AN. நாகப்பன், மானகிரி.
- P.CT.P. சிதம்பரம், சென்னை - 87
- PL. கணேசன், சென்னை - 26
- S. ஞானம்பாள், மதகுபட்டி
- M. மெய்யப்பன், சென்னை - 94

## இரண்டாண்டு சந்தா ரூ.480/

- ராம. வயிரவன், மதுரை - 7
- RM.KR.M.N. கணேசன் செட்டியார், சென்னை - 95
- L.M.N. முத்துமாணிக்கம், மதுரை - 20
- S. சுப்பிரமணியன், காரைக்குடி - 1
- சோமசுந்தரம், திருச்சி
- S. நாராயணன் செட்டியார், சென்னை - 26
- RM. மெய்யப்பன், காரைக்குடி - 2
- SP. ராமநாதன், காரைக்குடி - 1
- S. கதிரேசன், கோயம்புத்தூர் - 38
- M. சொக்கலிங்கம், காரைக்குடி - 1
- P.VR. பெத்தபெருமாள், தேவகோட்டை
- சரஸ்வதி ஆச்சி, சென்னை - 17
- PL. அருணாசலம், காரைக்குடி - 2
- RM. பசுபதி, நெய்வேலி
- PL. ராமநாதன், மதுரை - 20
- PR. பெரியகருப்பன், திருச்சி - 17
- RM. ஆனந்தன், பொள்ளாச்சி
- S. வயிரவன், சென்னை - 17
- CT. வெங்கடாசலம், சென்னை - 4
- M.K.R. பழனியப்பன், பெங்களூரு - 40
- SV. சாத்தப்பன், திருச்சி - 17
- S. முத்து, மதுரை - 104
- S. கமலக்கண்ணன், காரைக்குடி - 2
- SP.M. முத்துக்கருப்பன் செட்டியார், சண்முகநாதபுரம்
- N.L. சுந்தரம் செட்டியார், ஒக்கூர்
- S. தங்கமணி, மதுரை - 18
- A.S. அடைக்கலவன், கோயம்புத்தூர் - 43
- V. வள்ளியம்மை, மதுரை - 20
- N. பால சுப்பிரமணியன், உடுமலைப்பேட்டை
- SP. சாத்தப்பன் @ பாஸ்கர், சென்னை - 53
- N. சுந்தரம் (Ex.MLA), காரைக்குடி - 2
- V.C. ராமனாதன், சென்னை - 93
- Dr. PL. சுப்பிரமணியன், புதுக்கோட்டை - 1
- V. பழனியப்பன், திருப்பதி - 517 506

## ஓராண்டு சந்தா ரூ.240/

- மகிபை மா. சின்னையா, தஞ்சாவூர்
- R. சரோஜினி, சென்னை - 83
- SM. கார்த்திக், காரைக்குடி - 2
- V. நரச்சியப்பன், காரைக்குடி - 1
- CT. அருணாசலம், திருச்செங்கோடு
- KR.S. திருநாவுக்கரசு, சென்னை - 16
- உமையாள் ராமநாதன், பெரியகுளம்
- PL. நாராயணன், திருச்சி - 3
- A.KR.A.கருப்பன் செட்டியார், குழிபிறை
- RM.தனலெட்சுமி, செவ்வூர்
- RM.சிவலிங்கம், சென்னை - 41
- M.நாராயணன், புதுக்கோட்டை - 1
- L.சுப்பிரமணியன், சென்னை - 53
- L.சுப்பையா, புதுக்கோட்டை - 1
- PL.விவேகானந்தன், மதுரை - 107
- S.சுரேஷ் (எ) சுப்பையா, கோயம்புத்தூர் -41
- M. ராமநாதன், கோயம்புத்தூர் - 41
- V. வீரப்பன், U.S.A.,
- V. உமா வீரப்பன், காரைக்குடி - 1
- PL. அண்ணாமலை, புதுக்கோட்டை - 1
- RM. மாணிக்கம், சென்னை - 17
- P. மாணிக்கம் @ லெட்சுமணன் செட்டியார், சண்முகநாதபுரம்
- SP.V. ராமநாதன், காரைக்குடி
- L. லெட்சுமணன், கோயம்புத்தூர் - 6
- NS.P.K.சுப்பிரமணியன் செட்டியார், மதுரை - 20
- RM. ராமநாதன், ஈரோடு - 1
- ராம சிதம்பரம், நாட்டரசன்கோட்டை
- PR. முத்தையா, கீழச்சிவல்பட்டி
- SV. கண்ணப்பன், சென்னை - 91
- PL. ராமநாதன், வேகுபட்டி
- M. அங்கப்பன், கோயம்புத்தூர் - 6
- M. சண்முகம், புதுக்கோட்டை - 3
- PL. முத்துக்கருப்பன், புலியூர்
- VR. சுந்தரேசன், புதுவயல்
- S. மங்கையர்க்கரசி, புதுவயல்
- L. சிதம்பரம், சேலம் - 8
- A.AL. சுப்பையா, ஸ்ரீரங்கம்
- V. சேதுராமன், சென்னை - 100
- SP. சித்ரா, சென்னை - 17
- PL. லெட்சுமி, காரைக்குடி - 1
- SP. முத்துராமன், சென்னை - 32
- CT. தியாகராஜன், திருச்சி - 17
- RM. திருநாவுக்கரசு, ஓசூர்
- M. அண்ணாமலை, பள்ளத்தூர்
- N. வயிரவன், சென்னை - 42
- RM. சிதம்பரம், கோயம்புத்தூர் - 38
- P. ஆறுமுகம், கும்பகோணம் - 1
- A. நாராயணன், கோயம்புத்தூர் - 33
- VR. சிதம்பரம், தேவகோட்டை
- PL. முத்தையா செட்டியார், பொன் புதுப்பட்டி
- A. பழனியப்பன், கோயம்புத்தூர் - 103
- RM. சுப்பிரமணியன், திருச்சி - 18
- ST.N. நாச்சியப்பன், சென்னை - 4
- L. சிதம்பரம், சென்னை - 40
- RM. முத்து, திருச்சி - 20
- SP.N.RM. சண்முகம், சென்னை - 119
- AN. சுப்பிரமணியன், காரைக்குடி - 3
- AR. ராமநாதன், காரைக்குடி - 2
- M. நாகப்பன், திருச்சி - 17
- S.V.R. சின்னான் செட்டி, கண்டனூர்
- RM. முருகப்பன், காரைக்குடி - 1
- NK. ஐயப்பன், தேவகோட்டை
- SM. வள்ளியப்பன், காரைக்குடி - 2
- கோமதி அண்ணாமலை, காரைக்குடி - 2
- L. ராதா, திருச்சி
- PL. மீனாட்சி, திருச்சி - 18
- N. அருணாசலம், சென்னை - 18
- AR. சுந்தரம், மதுரை - 16
- V. சிதம்பரம், காரைக்குடி - 2
- அஸ்வின் நடேசன், சென்னை - 4
- RM.PL. பழனியப்பன், தஞ்சாவூர் - 4
- M. சோமசுந்தரம், கொடைக்கானல்
- L. ராமநாதன், அரியக்குடி
- KN. அருணாசலம், சென்னை - 40
- SM. முத்துராமன், சென்னை - 32
- V.AL.L. பஞ்சநாதம், கோயம்புத்தூர் - 25
- M. சொக்கலிங்கம், நாகப்பட்டினம் ஆக்கூர்
- G. முத்துக்குமார், சென்னை - 80
- V. சுப்பிரமணியம், கோயம்புத்தூர் - 6
- S.KN.S.S.M.PR. சுப்பையா செட்டியார், கோயம்புத்தூர் - 6
- பெரியகருப்பன் @ ராஜா, காரைக்குடி 2
- P. சிதம்பரம், மடிக்கேரி, கூர்க்
- V.KR. ராமலிங்கம், கோயம்புத்தூர் - 1
- SM. லெட்சுமணன், கரூர் - 6
- AL. ராமநாதன், தர்மபுரி
- AR. கருப்பையா, கோயம்புத்தூர் - 46
- AL. சூர்யா, சென்னை - 17
- PR. ராமாயி, கோயம்புத்தூர் - 6
- KR. பொன்னம்மாள் ஆச்சி, K. அழகாபுரி
- S. பெரியகருப்பன், சென்னை - 39
- RM. சிதம்பரம் செட்டியார், சேலம் - 7
- CT. தேவகி, சென்னை - 106
- KR.RM. அருணகிரி செட்டியார், சூரக்குடி
- RM. விஸ்வநாதன், மதுரை - 20
- M. ராமசாமி, சென்னை - 117
- A. அண்ணாமலை, ஏற்காடு
- N. நாச்சியப்பன், சென்னை - 53
- A.TR.சுந்தரம் செட்டியார், தேவகோட்டை




## ஆன்மிகப் பயணம்

தேவகோட்டை வ.பெரி. வகையைச் சேர்ந்த (மாத்தூர் கோவில் - மணலூர் பிரிவு) பங்காளிகளில் பெரியவர்கள், இளைஞர்கள் என ஆண், பெண் 80 நபர்கள் ஒன்று சேர்ந்து திரு.கரு.மு.காசி செட்டியார் (திருச்சி) அவர்கள் தலைமையில் கடந்த 06.05.2017 அன்று இரண்டு பேருந்துகளில் தேவகோட்டை யிலிருந்து வேதாரண்யம் சென்று அதிகாலை ‘கடல் ஆதி சேது’ கடற்கரையில் தீர்த்தம் ஆடி 07.05.2017 முதல் 09.05.2017 ஆகிய மூன்று தினங்கள் சப்த விடங்கத் ஸ்தலங்கள் ஆன 15 கோவில்களில் தரிசனம் செய்து 09.05.2017 இரவு தேவகோட்டை திரும்பினர்.

பயணத்துக்கான ஏற்பாடுகளை திரு.கரு. வீரப்பன் (தருமபுரி), திரு.லெ. பஞ்சநாதன் (கோவை) திரு.மீ. நாகப்பன் (புதுக்கோட்டை), திரு.சோம. சொக்கலிங்கம் (மதுரை) ஆகியோர் சிறப்புற செய்து இருந்தனர். மூன்று நாள் சுற்றுலாவில், எட்டுக்குடி நடப்பாண்டு நிர்வாக அறங்காவலர் திரு. S. அடைக்கப்பன் எட்டுக்குடி நகரத்தார் விடுதியில் வரவேற்று 07.05.2017 அன்று காலை உணவு கொடுத்து சிறப்பு செய்தார்கள்.

காரைக்கால் நகரத்தார் சங்கத்தின் நிர்வாக குழுவினர் திருநள்ளாறு ஆலயத்தில் வரவேற்று சிறப்பு தரிசனத்துக்கும் அனுமதி பெற்று 08.05.2017 மதிய உணவு, மாலை சிற்றுண்டி வழங்கினர்.

**தகவல்: வ.அள.லெ. பஞ்சநாதன், கோவை.**

## அறிவிப்பு

ஆச்சிமார்கள் பாடும் தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்கள் அழிந்து விடாமல் அவற்றை ஆவணப்படுத்தும் முயற்சியை கோவிலூர் மாடாலயம் மேற்கொண்டுள்ளது. பாடல்கள் பாட விருப்பமுள்ளோர் கோவிலூர் மடாலயத்தைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

தொடர்புக்கு: டாக்டர் சே. குமரப்பன், (9443442361) திரு. ராமசாமி - (9884180732) கோவிலூர் மடாலய அலுவலம் ( 04565 - 238783)



பைரவர் தமிழ் அருச்சனை வழிபாடு நூலினை தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் வெளியிட நகர வைரவன் கோயில் செயலாளர் திரு.வெ.ரெங்கநாதன் செட்டியார் பெற்று கொள்கிறார்கள். உடன் பதிப்பாசிரியர் எஸ்.எல்.எஸ். பழனியப்பன்

## ஒக்கூர் திருக்கோவிலுக்குப் புதிய காரியக்காரர் பொறுப்பேற்பு

ஒக்கூர் அருள்மிகு சசிவர்ண விநாயகர் திருக்கோவிலில் 23.04.2017, அன்று அருள்மிகு சசிவர்ண விநாயகர் திருக்கோவில் நகரத்தார் அறக்கட்டளையின் தலைவர் திரு.மு.சே. ரெ. சேக்கப்ப செட்டியார் தலைமையில் நகரத்தார்கள் கூட்டம் நடைபெற்றது. அப்போது புதிய காரியக்காரராக இரண்டு ஆண்டுகளுக்கு இலுப்பைக்குடிக் கோவிலைச் சேர்ந்த திரு.சி.கரு.ஆ.கண.ஆத.அண. ஆதப்ப செட்டியார் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரிடம் வயிரவன் கோவிலைச் சேர்ந்த திரு.நா.லெ.சுந்தரம் செட்டியார் பொறுப்புகளை ஒப்படைத்தார். கூட்டத்தில் வேறு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. நகரத்தார்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

**நா.லெ. சுந்தரம், ஒக்கூர்**

## மீண்டும் அறப்பணிக் கழகம்

மன்னார்குடி நாட்டுக்கோட்டை நகரத்தார் அறப்பணிகழகம் 1981-ஆம் ஆண்டு தொடங்கி சிறப்பாக நடைபெற்று வந்தது. இடையில் சில காலம் செயல்படாமல் இருந்தது. தற்போது மீண்டும் செயல்படத் துவங்கி உள்ளது. திரு.நா. நாச்சியப்பன் தலைமையில் அழ.கரு. அழகப்பன் செயலாளராகவும், அழ. பாலாஜி பொருளாளராகவும் கொண்டு செயல்படத் துவங்கி உள்ளது.

பிள்ளையார் நோன்பு, மாத கார்த்திகை உபயம், அன்னதானம், கூட்டு வழிபாடு, கல்வி உதவி மற்றும் பல நல்ல சமூக, சமுதாய மேம்பாட்டிற்காக செயல்பட திட்டமிட்டுள்ளனர்.

## சித்திரைப் பிரமோற்சவ திருவிழா

தேனிபட்டி ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ அகத்தீஸ்வரர் நகரச் சிவன்கோவிலில் சித்திரைப் பிரமோற்சவம் சித்திரை மாதம் 15-ஆம் தேதி முதல் 28ஆம் தேதி வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மேலும், 05.05.2017-ஆம் தேதி மகேஸ்வரருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனையும், அதனைத் தொடர்ந்து 1000-க்கும் மேற்பட்டவர்களுக்கு அறுசுவை அன்னதானம் நடைபெற்றது.

06.05.2017-ஆம் தேதி மாலை கோயில் கலையரங்கத்தில் தேவகோட்டை திரு. இராமநாதன் நிகழ்த்திய ஆன்மிகச் சொற்பொழிவு நடைபெற்றது. ஏற்பாடுகள் அனைத்தையும் நிர்வாக அறங்காவலர் திரு.கண.முத்து தேனப்பன் செட்டியார் மிகச் சிறப்பாக செய்து இருந்தார்.

## அமெரிக்காவில் செட்டிநாடு அருங்காட்சியகம்

அமெரிக்காவில் ஹூஸ்டன் நகர் ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கோயில் அருகில் கண்ணப்பன் கலை அருங்காட்சியகம் (KANNAPPAN ART MUSEUMS) மே 26, 2017ல் திறக்கப்பட்டது. நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த சொக்கலிங்கம் சாம் கண்ணப்பன் பொருள் உதவியால் செட்டிநாடு சம்பந்தப்பட்ட பொருள்களை வைத்து தொடங்கியது. பியர்லண்டு (PEARLAND) மேயர் டாம் ரீட் (TOM REID) கண்ணப்பனுக்கு சான்றிதழ் வழங்கினார். இந்திய உதவி தூதுவர் சுரேந்தரா ஆதானா (SURENDRA ADHANA) கண்ணப்பன் சேவை பற்றி பேசினார். பொருட்காட்சி பொறுப்பினர் ஹைடிவைச் (HEIDI WIESS) தலைமையில் பொதுமக்கள் பார்வையிட வாரத்தில் மூன்று நாட்கள் திறக்கப்படும்.

**தொடர்பு கொள்ள மின் அஞ்சல் :**
heidilodc@sbcglobal.net

## பள்ளத்தூர் கூடுதல் செய்திகள்

பள்ளத்தூர் SM.RM. சோலையப்ப செட்டியார் அவர்கள் தான் இந்தியாவில் இரண்டாவதாக விமானம் ஓட்ட லைசென்ஸ் பெற்றவர். (ஜே.ஆர்.டி. டாடா விமானம் ஓட்ட லைசென்ஸ் பெற்ற முதல் நபர்.)

இவர் சோனா மூனா வகையைச் சேர்ந்தவர்.

பள்ளத்தூர் ஊரை உருவாக்க உ.அ. வீட்டு பெரியவர்கள் சிவகங்கை மன்னரிடம் சென்று இடத்தை வாங்கி கவுல்களாக பிரித்து நகரத்தாருக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள். மேலும், தேவகோட்டை நகரத்தார்கள் பள்ளத்தூர் வந்து தெருக்களுக்கெல்லாம் பெயரிட்டு சிவன் கோயிலுக்கு தனி இடம் ஒதுக்கி பள்ளத்தூர் ஊரை உண்டாக்கினார்கள். இன்றும் பல தொழில் அதிபர்கள் இங்கு வசிக்கின்றனர். வீடுகள் அனைத்தும் மாட மாளிகைகள்.

OAPRM அவர்கள் தான் முதலில் AC உயர்நிலைப்பள்ளியை உருவாக்கினார்கள். ஒரு Term-க்கு Fees ரூ.5/- தான். பக்கத்து ஊர்களிலிருந்து ஆண்களும், பெண்களும் வந்து கல்வி பயின்றனர்.

வெ. முத்தையா செட்டியார் வீட்டில் ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் என மொத்தம் 9 பேர், முனைவர் பட்டம் பெற்றவர்கள் அவர்கள் குடும்பம் தான் 1911-ல் திருமயத்தில் வேதபாடசாலை நடத்திய குடும்பம்.

அதையே பின்னர் RMM பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்றி அமைத்து இன்றும் நன்றாக நடக்கிறது. மாணவ, மாணவிகளிடம் கட்டணம் வாங்குவதில்லை. முற்றிலும் இலவசம், பள்ளத்தூர் அருகில் உள்ள கொத்தரை சோலையாண்டவர் மிகுந்த சக்தி வாய்ந்த தெய்வம். இன்றும் சப்தாரணம் சிறப்பாக நடைபெறுகிறது.

**தகவல் : MVM முத்து, Phd., பள்ளத்தூர்**

## தண்ணீர் பந்தல்

கரூர் மாரியம்மன் ஆலய வைகாசிப் பெருவிழாவை முன்னிட்டு ஆலயம் அருகில் செட்டி நாடு சிமெண்ட் ஆலை சார்பில் தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டது. ஆலை பொது மேலாளர் முத்துக்கருப்பன், நகரத்தார் சங்கச்



செயலாளர் மேலை. பழனியப்பன், அழகப்பன் ஆலய பரம்பரை அறங்காவலர் முத்துக்குமார் கலந்து கொண்டனர்.

## வெள்ளி அங்கி சாத்தும் விழா

மே 7-ஆம் தேதியன்று மேலைச்சிவபுரி மீனாட்சி சொக்கேசர் நகரச் சிவன் கோவிலில் அனைத்து மூலவர்களுக்கும் வெள்ளி அங்கி சாத்துதல், வெள்ளி ரிஷப வாகனம் வெள்ளோட்ட விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நடப்புக் காரியக்காரர் வழக்கறிஞர் பழ. ராமசாமி, துணைக் காரியக்காரர் விஞ்ஞானி கருப்பையா ஆகியோரின் பெரும் முயற்சியில் முப்பதுக்கும் மேற்பட்ட மூலவர்களுக்கும் உபயதாரர்கள் சார்பில் வெள்ளி அங்கிகள் செய்து தரப்பட்டு நகரத்தாரிடம் ஒப்படைக்க, அவை அனைத்தும் சாத்துபடி செய்தும், பஞ்சமூர்த்திகள் புறப்பாடும், விருந்தும் நடைபெற்றன. விழாவிற்கு முத்து பார்மஸி ஏ. ஞானம், நாட்டாமை முத்தப்ப செட்டியார், பழநியப்பன், பெரியருப்பன், தே. நாகப்பன் ஆகியோர் முன்னிலை வகிக்க, விழவிற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார், மேலை. பழனியப்பன், குறள்சூடி உமையாள், பழ. கருப்பையா, வி.என்.சிடி. வள்ளியப்பன் உட்பட பலர் பேசினர். நகரத்தார் சங்க பிரமுகர்கள் அனைவரும் கலுந்து கொண்டனர்.

## கரூரில் மாரியம்மன் பூத்திருவிழா:

கரூர் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தின் பூத்திருவிழா 19.05.2017 நடைபெற்றது. இவ்விழாவில் நகரெங்கும் இருந்து 45 குழுக்கள் அலங்கார ரதங்களுடன் விடிய விடிய ஆலயம் வந்தன. கரூர் நகரத்தார் சங்கக் கட்டிடத்தில் இருந்து சுமார் 400 ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பூத்தட்டு ஏந்தி, ஸ்ரீ மீனாட்சி அம்மன் அலங்கார ரதத்துடன் முதல் குழுவாக இரவு 9.30 மணிக்கு ஆலயம் சென்று பூ செலுத்தினர். தலைவர் சுப. செந்தில்நாதன் சார்பில் இரவு விருந்தும் வழங்கப்பட்டது. செயலர், மேலை. பழனியப்பன், பொருளாளர் குமரப்பன், வைஷ்ணவி மெய்யப்பன், கரு.ரெத்தினம், அமர்ஜோதி ஆறுமுகம் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

MJF **அரிமா மேலை. பழநியப்பன், கரூர்**

## சேக்கிழார் விழா மற்றும் கருத்தரங்கம்

காரைக்குடி கோவிலூர் மடாலயம் சார்பாக 27.05.2017 அன்று மடாலய வளாகத்தில் சேக்கிழார் விழா நடைபெற்றது. விழாவிற்கு சீர்வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள் முன்னிலை வகித்தார்கள். பெரியபுராணத்தில் பக்தி, இயற்கை, பெண்மை, சமுதாயம், தொண்டு ஆகிய தலைப்புகளில் முறையே கவிஞர்கள் நீ. ரவிச்சந்திரன், கு. சிவபாரதி, முனைவர் தேவி நாச்சியப்பன், மெ. ஜெயங்கொண்டான் மற்றும் பொற்கிழிக் கவிஞர் கா. நாகப்பன் ஆகியோர் கவி பாடினார்.

28.05.2017 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் பேராசிரியர் முனைவர் ந.விஜய் "தொண்டர் சீர் பரவுவார்" என்ற தலைப்பிலும் பேரா. முனைவர் சபா. அருணாசலம் “மன்னுத போதினியார்” என்ற தலைப்பிலும் சிறப்புரை ஆற்றினர்.

## 95-ஆவது பிறந்த நாள் விழா

கோவிலூர் மடாலய வளாகத்தில் தெய்வத்திரு. நாச்சியப்ப சுவாமிகளின் 95-ஆவது பிறந்த நாள் விழா நடைபெற்றது.

சீர்வளர் சீர் மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள் தலைமையில் புதுக்கோட்டை திலகவதியார் ஆதினகர்த்தா தவத்திரு. ஸ்ரீதயானந்த சந்திரசேகர சுவாமிகள் திருக்களர் ஆண்டவர் வரலாறு, வைராக்கிய சதகம் ஆகிய நூல்களை வெளியிட்டு சிறப்புரை ஆற்றினார். பேரா. முனைவர் திருமதி விசாலாட்சி சுப்பிரமணியன் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டு விழாச் சிறப்புரை ஆற்றினார்.

முன்னதாக திருக்குறள் முற்றோதல் நிகழ்வும் நடைபெற்றது.

## கல்வி நிதி வழங்கும் விழா:


நகரத்தார் கல்வி உதவிக் குழு சார்பில் 12-ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று உயர் கல்விக்கு செல்லும் மாணவர்களுக்கு கல்வி நிதி வழங்கும் விழா மதுரை பிரேம் நிவாஸ் அரங்கில் அதன் ஒருங்கிணைப்பாளர் பள்ளத்தூர் மனிதத்தேனீ ரா. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தேவகோட்டை அரு. சொக்கலிங்கம் வரவேற்புரை ஆற்றினார். புதுவயல் முனைவர் எஸ்.எம். கண்ணன் வழிகாட்டல் உரை ஆற்றினார். தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு முருகன் டிராவல்ஸ் எஸ்பி. பழனியப்பன், மதகுபட்டி பிஎல். சுப்பிரமணியன், மேலைச்சிவபுரி வழக்கறிஞர் பழ. ராமசாமி, சொக்கநாதபுரம் வயி.லெட்சுமணன், கீழச்சிவல்பட்டி எம்.மலையலிங்கம் வழங்கினர். ஒன்பது மாணவர்களுக்கு தலா ரூ.10,000/- வழங்கப்பட்டது. அதிக மதிப்பெண் பெற்ற எஸ். விஸ்வநாதன், வை. அண்ணாமலை, பெரி.மீனாட்சிசுந்தரம், எஸ்பி.கற்பககணேஷ் ஆகியோருக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப் பட்டன.








**அழ.ஹரிணி,**
3-ஆம் வகுப்பு, செயின்ட் ஜோசப் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி
பெற்றோர் : KR. அழகப்பன் - AL. மீனாள்

K.**கனகசபை**
7ஆம் வகுப்பு
சேது ராணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
பெற்றோர் : கனகு கருப்பையா - கல்பனா



M.**சாய் பாலா**
5ஆம் வகுப்பு
ஜவஹர் வித்யாலயா சீனியர் செகண்டரி பள்ளி, சென்னை
பெற்றோர் : PL. மெய்யப்பன் - M. நாகம்மை

R.**சொர்ணா,**
1ஆம் வகுப்பு, அமிர்தா வித்யாலயா பள்ளி, கோயம்புத்தூர்
பெற்றோர்:RM.ராதாகிருஷ்ணன் - R. ஜானகி




**ஐஸ்வர்யா**
6-ஆம் வகுப்பு
சென்னை



AR.**அலமேலு**
8ஆம் வகுப்பு
பொன் வித்யாஷ்ரம் பள்ளி, வளசரவாக்கம்.
பெற்றோர்: AR.அருணாசலம் - AR. மரகதவள்ளி




**பழ. மீனாட்சி,**
U.K.G.
D.A.V. Nursery School, கோபாலபுரம், சென்னை
பெற்றோர்: M. பழனியப்பன் - PL. சொர்ணா




**சு. மீனாட்சி**
12-ஆம் வகுப்பு, வேளாங்கண்ணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சென்னை
பெற்றோர் : மெ.சுப்பிரமணியன் - சு.வள்ளியம்மை

**குறிப்பு: பிஞ்சு ஓவியம் பகுதிக்கு படம் அனுப்பும் பெற்றோர் தங்கள் சந்தா எண்-ஐ தவறாது குறிப்பிட வேண்டும்.**

# அன்பார்ந்த உறவுகளே !

நமது செட்டிநாடு இதழை உங்கள் வீட்டில் இருந்தபடியே தொடர்ந்து படிக்க, சந்தாதாரர் ஆகுங்கள். தபால் மூலம் உங்களுக்கு நமது செட்டிநாடு வந்து சேரும். நீங்கள் செலுத்தும் சந்தாத் தொகை நிதி உதவி வேண்டுவோருக்கு செலவிடப்படும். சந்தா செலுத்துவதன் மூலம் ஒரு குடும்பத்திற்கு உதவிய மனநிறைவு உங்களுக்கு ஏற்படும்.

**சந்தா விவரம்:**

1. ஆண்டு சந்தா ரூ.240/
2. இரண்டாண்டு சந்தா ரூ.480/
3. ஐந்தாண்டு சந்தா ரூ.1,200/
4. வாழ்நாள் சந்தா ரூ.10,000/

**வெளிநாடு**

சிங்கப்பூர், மலேசியா - SG $ 25/

பிற நாடுகள் - US $35/

சந்தாதாரர் ஆக, கீழே உள்ள படிவத்தை பூர்த்தி செய்து,

1) Chettinad Print Media P Ltd என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தக்க வகையில் வங்கி காசோலை/வரைவோலை அனுப்பலாம்.
2) வங்கி மூலம் : Chettinad Print Media P Ltd. என்ற தலைப்பில் Indian Bank, Thousand Lights, Chennai - 600 006. IFSC எண்: IDIB000T020, நடப்புக் கணக்கு எண்.6412480441ல் செலுத்தலாம்.
3) மணியார்டர் மூலம் செலுத்தலாம்.

## படிவம்

திரு/திருமதி:............................................................

முகவரி:............................................................

............................................................

கோவில்:...................................பிரிவு:............................................................

சொந்த ஊர்............................................................

கைபேசி:...................................தொலைபேசி:............................................................

▸▸ இமெயில்: ............................................................

▸▸ புதிய சந்தா ☐ / சந்தா புதுப்பித்தல் ☐ / Ref No.............................................
▸▸ ஏற்கனவே இதழ் பெறப்பட்டு வந்தால் அதன் Ref No. குறிப்பிடவும்.

செலுத்திய சந்தா 240/-,480/-, 1200/-, 10,000, நேரில் ☐ மணியார்டர் ☐ காசோலை ☐

வரைவோலை ☐ வங்கி ☐ எண்.........................................../நாள்........................

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**நமது செட்டிநாடு (மாத இதழ்), ராணி சீதை அரங்கம், 6வது தளம்,**
**603, அண்ணா சாலை, சென்னை - 600 006.**



# திருமண சேவை

இப்பகுதியில் மணமகன், மணமகள் வேண்டுவோர் தொடர்பான விவரங்கள், இலவச சேவை அடிப்படையில் வெளியிடப் படுகின்றன. முதல் மணமா, மறுமணமா என்ற விவரத்தைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். தேவை இருப்போர் நேரிடையாக உரியவர்களைத் தொடர்பு கொண்டு, ***தீர விசாரித்து*** திருமணம் பற்றி முடிவெடுக்கலாம்.



பெயர் : VR.**சரவணன்**
வயது : 31
நட்சத்திரம் : உத்திரட்டாதி (செவ்வாய் பகை ஜாதகம்)
தந்தை : சீ. வீரப்பன்
தாயார் : வீர. சரோஜா
சொந்த ஊர்: கல்லுப்பட்டி
கோவில் : மாத்தூர் (மணலூர்)
படிப்பு : MCA (MBA)
வேலை : Software Engineer - Poland
சம்பளம் : Rs.2/- Lakh per month (Indian Currency)
செல் : 80561 94098



பெயர் : V. **ராமனாதன்**
வயது : 35
நட்சத்திரம் : மூலம் (ராசி தனுசு)
தந்தை : PL. வீரப்பன்
தாயார் : V. கமலா
சொந்த ஊர்: பலவான்குடி
கோவில் : வயிரவன் கோவில் (பெரிய வகுப்பு)
படிப்பு : MBA (HR)
வேலை : Asst. Manager, TATA Consultancy Services,Chennai.
சம்பளம் : Rs.85,000/- per month
கைபேசி : 95518 00494, 72996 06020



பெயர் : V. **சிங்காரம்**
வயது : 30
நட்சத்திரம் : மிருகசீரிஷம் (மிதுனம்)
தந்தை : S. வள்ளியப்பன்
தாயார் : V. நாச்சம்மை
சொந்த ஊர்: ஆ.தெக்கூர் (பொன்னமராவதி)
கோவில் : மாத்தூர் (மணலூர்)
படிப்பு : Diploma C.T./ B.Sc.(C.S)
வேலை : I.T. Analyst, T.C.S., Bangalore
சம்பளம் : Rs.90,000 per month
செல் : 9486770910/9790019459



பெயர் : V. **முத்துக்கருப்பன் (எ) விஜய பாஸ்கர்**
வயது : 33
நட்சத்திரம் : ரோகிணி (ராசி-ரிஷபம்)
தந்தை : PL. வீரப்பன்
தாயார் : V. கமலா
சொந்த ஊர் : பலவான்குடி
கோவில் : வயிரவன் கோவில் (பெரிய வகுப்பு)
படிப்பு : DECE
வேலை : Precision, Chennai.
சம்பளம் : Rs.35,000/- per month
கைபேசி : 95518 00494, 72996 06020



பெயர் : **லெ. மெய்யப்பன்**
வயது : 33
நட்சத்திரம் : விசாகம்
தந்தை : அழ. லெட்சுமணன்
சொந்த ஊர் : கோனாபட்டு
கோவில் : இலுப்பக்குடி
படிப்பு : D.E.E.E., (M.B.A.)
வேலை : (சொந்த கம்பெனி) விசாகா பவர் செக்யூரிட்டி சிஸ்டம்ஸ், அல்ட்ரா யுனிக் சிஸ்டம்ஸ், சென்னை
வருமானம் : Rs.60,000/- per month
கைபேசி : 9952060799, 7094189312



பெயர் : S. **சரவணன்**
வயது : 34
நட்சத்திரம் : ஹஸ்தம் (முதல் பாதம்)
தந்தை : MR. சேவுகன்
தாயார் : S. திலகம்
சொந்த ஊர் : கல்லல்
கோவில் : வயிரவன் கோவில்
படிப்பு : B.E. (Mech.)
வேலை : Al Abbar Aluminium Asst. Production Manager, Dubai
சம்பளம் : Rs.2/- Lakhs per month
கைபேசி : 98944 64317, 98949 62025

# செட்டிநாடு அஞ்சல்




எனது ஓவியம் கடந்த மாத நமது செட்டிநாடு இதழில் வெளியாகி உள்ளதைப் பார்த்து, நானும் எனது குடும்பத்தினரும் மிக்க மகிழ்ச்சி யடைந்தோம். எனக்கும் வரைய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மேலும், ஓவியங்களை வரைந்து வருகிறேன். நமது செட்டிநாடு என் போன்றவர்களுக்கு ஊக்கம் அளிப்பது மகிழ்ச்சி தருகிறது.

மு. வைஷ்ணா, சென்னை - 125

மே இதழில் வெளிவந்துள்ள IBCN-ஐ பற்றி மிக விரிவாக சுவையாக நேரில் வர முடியாதவர்களும், வந்ததை போன்ற ஓர் உணர்வை இக்கட்டுரை ஏற்படுத்தியிருக்கிறது என்பது மிகைப்படுத்தப்படாத உண்மை. பலரும் விரும்பிப் படிக்கின்ற இதழாக இதனை ஆக்கியிருக்கும் ஆசிரியருக்கு என் பாராட்டுக்கள்.

முனைவர் ரவி தமிழ்வாணன், சென்னை - 17

நமது செட்டிநாடு மே இதழில் துபாயில் நடைபெற்ற நகரத்தார்களின் உலக வர்த்தக மூன்றாவதுமாநாட்டுச்செய்திகளை விரிவாகவும், சிறப்பாகவும் கருத்திற்கினியதாகவும் வெளி யிட்டுள்ளீர்கள்.

மேலும், மாநாட்டுக் காட்சிகளை நடுப் பக்கத்தில், எண்ண எண்ண இனிக்கும் வகையில் வண்ணப்படங்களாக கண்ணிற் கினியதாக வெளியிட்டுள்ளீர்கள்.

மாநாட்டில் பங்கேற்ற பெருமக்கள் தாங்கள் கேட்ட அனுபவ உரைகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளும் பட்சத்தில் ஆக்கமும், நற்பயனும் விளைவது உறுதியென நம்புகின்றேன். மாநாட்டின் ஒரு நிகழ்வாக புதிய இணையதளம் துவங்கப்பட்ட செய்தியும், நான்காம் மாநாடு இந்தியாவில் நடை பெறவுள்ள செய்தியும், நகரத்தார் நிதியம் உதயமாகும் செய்தியும் நம் மகிழ்வினை மும்மடங்காக்கியது.

மாநாட்டின் நிகழ்வுகளையும் மாநாட்டு உரைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட உயர்வான கருத்துக்களையும் முத்துக்கள் கோர்க்கப்பட்ட முத்தாரம் போல் இதழின் ஆசிரியரே கருத்தோட்டமுள்ள கட்டுரையாக்கி யிருப்பது மனதிற்கு நிறைவைத் தருகிறது.

பாராட்டுக்கள். நன்றி. பணி தொடர நல்வாழ்த்துக்கள்.

M. காந்திராஜா, மேலைச்சிவபுரி

மே இதழில் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகரின் ராஜகோபுரத்தை மிக அருகில் அட்டைப் படமாக கண்டதில் மகிழ்ச்சி.

கலைமாமணி அரு.இராமநாதனின் வரலாறு இடம்பெறுவதில் மகிழ்ச்சி.

கட்டுரை மூலம் கைலாயம் அழைத்துச் சென்ற கோட்டையூர் R. மீனாட்சி அவர்களுக்கு நன்றி.

உழைப்பில் உயர்ந்த ராமு அண்ணாமலை, பழனி இருவரையும் பாராட்டுவோம். நகரத்தார்கள் தம் குழந்தைகளுக்கு நகரத்தாருக்குரிய பெயர்களைச் சூட்ட வேண்டுகிறேன். நகரத்தார் சிகரத்தார் சிகரத்தில் நகரத்தாராகி விட்டது பார்த்தீர்களா? ஒரு பாடல் உருவாவதற்கு எத்தனை பேர் எப்படி உழைத்திருக்கிறார்கள்? படைப்பாளர்களிடம் படைப்பு பெறுவது மிகவும் கஷ்டம். "தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும்" பாடலுக்காக அஜந்தா செல்லப்பன் எவ்வளவு அலைந்திருக்கிறார். வீண் போகவில்லை. நமக்கு நல்ல பாடலைக் கொடுத்திருக்கிறது.

வலம்புரி லேனா, திருவாலம்பொழில்

3-வது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் நம் இதழுக்கு வாழ்த்துக்கள்.

நகரத்தாரின் ஆன்மிகத் தொண்டும், அருந்தமிழ்ப் பணியும் சிறப்புடனே இருந்தது. சிகப்பி இல்லத்தில் இலக்கிய இளைப்பாறல், தமிழ் இமயம் ஐயா வ.சுப. மாணிக்கனார் ஆகியவைகளுடன் இதழ் சிறப்புடன் இருந்தது. உழைப்பால் உயர்ந்தவர்கள் நல்ல பகுதி. அச்சும், வடிவமைப்பும் அற்புதம்.

AN. சிதம்பரம், விராச்சிலை

தெரிந்ததும்! தெரியாததும்! என்கிற தலைப்பில் கைலாயம் போகலாமா.....? என R. மீனாட்சி, கோட்டையூர் எழுதியுள்ள விபரங்கள் மிகவும் அருமையாகவும், தெளிவாகவும், விபரமாகவும் கைலாயம் போய் வந்தது போல் இருந்தது. உண்மையிலேயே எனக்கும் இதை படித்தவுடன் கைலாயம் போக வேண்டும் என ஆவல் ஏற்பட்டது. மாதந்தோறும் R. மீனாட்சி எழுதும் விபரங்கள் மூலமாக நிறைய விபரங்கள் தெரிந்து கொள்ள முடிகிறது. தொடரட்டும் அவர் தம் பணி.

இதுபோன்ற உபயோகமான விபரங்களை தொடர்ந்து பிரசுரிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தொடரட்டும் உங்களது தொண்டு.

V. பழனியப்பன், சென்னை - 86

"அப்பாவின் திரைப்பயணம்" தொடர் அருமை. கண்ணதாசனும், வேலுமணியும் வெவ்வேறு கட்சியினராக இருந்தாலும் தொழில் என்று வந்துவிட்டால் (இருவரும் திரைப்படத் துறையினர்) செய்து கொடுக்க வேண்டும் என்ற கண்ணதாசனின் எண்ணம் அருமை.

M. செல்லப்பன் போன்ற உண்மையான, நம்பிக்கையான, விடாமுயற்சியுடைய ஆட்கள் அன்று இருந்ததால்தான் கண்ணதாசனின் அருமையான வரிகள் நமக்கு பாடலாய்க் கிடைத்தது. மேலும், இக்கட்டுரை ஒரு தொடர்கதை படிப்பது போல் விறுவிறுப்பாய் இருக்கிறது.

V. சரவணன், சிவகங்கை

நமது செட்டிநாடு இதழில் நாங்கள் மிகவும் விரும்பி படிப்பது சகோதரி மீனாட்சி அவர்களின் தெரிந்ததும், தெரியாததும் என்ற பகுதியைத்தான். பிள்ளையார் நோன்பை வருடா வருடம் கொண்டாடி மகிழ்ந்தாலும் ஏன் அதைச் செய்கிறோம் என்ற காரணத்தை நாங்கள் தெரிந்து கொண்டது அவர்களுடைய கட்டுரையால் தான். அதுபோல் பள்ளி கொண்ட சிவன் அமைந்த கோவில் பற்றியும், திருமலை திருப்பதி கோயில் பற்றி இதுவரை நாங்கள் அறிந்திராத செய்திகளையும், சிட்டுக்குருவியின் சிறப்புகளையும் பற்றி அரிய பல செய்திகளை மிக அழகான தமிழ் நடையில் எழுதி வந்த அவர்கள் தற்சமயம் திருக்கைலாயம் பற்றி மிக அருமையாக எழுதி உள்ளார்கள். கைலாயம் போகாமலேயே கைலாயம் சென்றுவந்த உணர்ச்சி எங்களுக்கு அதைப் படிக்கும் போது ஏற்பட்டது. இதுவரை திருக்கயிலாயம் பற்றி இப்படி ஒரு கட்டுரையை படித்ததே இல்லை என்று அங்கு சென்ற வந்த எங்கள் உறவினர்களும் பாராட்டினார்கள். சிட்டுக்குருவி பற்றிய கட்டுரைக்கு U.S.ல் இருக்கும் எங்கள் சகோதரர் மிகவும் பாராட்டுத் தெரிவித்துப் பேசினார்கள். இந்தக் கட்டுரைகளை எல்லாம் நாங்கள் தனியாகப் பிரித்து எடுத்து பத்திரப்படுத்தி வைப்பதுடன், எங்கள் குழந்தைகளுக்கும் கதையாகக் கூறியதுடன், வெளிநாடுகளில் வாழும் எங்கள் உறவினர்களுக்கும் கொடுத்து படிக்கச் செய்து உள்ளோம். அழகான தமிழ் நடையில் அற்புதமான செய்திகளை மாதந்தோறும் எழுதிவரும் சகோதரி மீனாட்சி அவர்களுக்கு எங்கள் அனைவரின் பாராட்டுக்கள்.

நம் நகரத்தார் பெண்மணிகளில் இப்படி நயம்பட எழுதும் பெண் எழுத்தாளர் ஒருவர் இருக்கிறார் என்ற தெரியாத உண்மையை உங்கள் பத்திரிகை மூலம் தெரிந்து கொண்டோம்.

ஆனால் ஒன்று, இப்படிப்பட்ட எழுத்தாளரை, எங்களுக்குத் தெரியாத நல்ல பல செய்திகளை நாங்கள் தெரிந்து கொள்ளும் வகையில் எழுதும் அவரைப்பற்றி நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?

AL. வசந்தா, காரைக்குடி
பழ. சிவகாமி, முத்துப்பட்டிணம்
S. அபிராமி கதிரேசன், அம்பத்தூர்
S. மணிமேகலை, அம்பத்தூர்



**"தெரிந்ததும், தெரியாததும்"** என்ற தலைப்பில் பல நல்ல பயனுள்ள செய்திகளை மாதந் தோறும் எழுதி வரும் திருமதி R.மீனாட்சி, கோட்டையூரைச் சேர்ந்தவர். மாத்தூர் கோயில் அ.க குடும்பத்தில் சித. நாராயணன் செட்டியார் – கண்ணபுரம் ஆச்சி அவர்களின் மருமகள். பள்ளத்தூரில் திருநகர் ராமன் செட்டியார் – விசாலாட்சி ஆச்சி அவர்களின் மகள். இவருடைய கணவர், மகன் இருவருமே வழக்கறிஞர்கள். மகள் பொறியியல் பட்டதாரி. திருமதி மீனாட்சி அவர்கள் மதுரை பாத்திமா கல்லூரியில் பயின்றவர். பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் (MA Economics) பெற்றவர். இந்தியன் வங்கியில் 20 ஆண்டுகள் பணிபுரிந்த பின் விருப்ப ஓய்வு பெற்று தற்சமயம் சென்னையில் அண்ணா நகரில் வசித்து வருகிறார். ஆன்மிகத்தில் ஆழமான ஈடுபாடு கொண்ட இவர் தன் கணவரோடு திருக்கைலாயம் சென்று தரிசித்துத் திரும்பிய பேறு பெற்றவர். அனைத்து வைணவ திவ்ய தேசங்களுக்கும் சென்று வந்தவர். அவருடைய எழுத்தை மாதந்தோறும் படித்துப் பயனுற்று தொலைபேசி வழியாகவும், கடிதங்கள் மூலமாகவும் பாராட்டி மகிழும் வாசகர்களுக்கு எழுத்தாளர் திருமதி மீனாட்சி அவர்கள் சார்பிலும், நமது செட்டிநாடு பத்திரிகை சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மே மாத இதழில், “உழைப்பால் உயர்ந்தவர்கள்” என்ற தலைப்பில் இராமு. அண்ணாமலை மற்றும் பழனி அண்ணாமலை ஆகிய இருவரின் சாதனைகளையும், திறமைகளையும் மிகச் சிறப்பாக தொகுத்து வெளியிட்டதற்கு பாராட்டுக்கள். வாழ்த்துக்கள்.

கி. சிதம்பரம், தேரழுந்தூர்

நமது செட்டிநாடு மே 2017 இதழில் தெரிந்ததும் தெரியாததும் பகுதியில் கோட்டையூர் மீனாட்சி ஆச்சி அவர்களின் கைலாயம் போகலாமா? பயணக் கட்டுரை மிகவும் அருமையான நடை. பாராட்டுக்கள், தேவாரம், திருவாசகம், திருவிளையாடல் புராணங்களின் ஒப்பீட்டுக்கு பாராட்டுக்கள். அதில் இராவணனைப் பற்றிய குறிப்பு என்னை வணங்க வைத்தது. சிறந்த சிவபக்தன். அதனால்தான் இராவணன் மேலது

நீறு, எண்ணத் தருவது நீறு என்றார்கள் தவசீலர்கள். சென்று பாருங்கள் கைலாயத்தை வாழ்க்கையின் உண்மையை உணர்வீர்கள் என்று காட்டினார். மிக்க நன்றி. கைலாயம் போக வேண்டும் என்ற ஆசை உள்ளது படித்த பின்பு. இறைவன் அருள் வேண்டும்.

கரு. முத்து வெங்கடாசலம், சண்முகநாதபுரம்

நான் ஒரு ஆட்டோ ஓட்டுனர் என் வயது 32. திருவண்ணாமலை சிவபெருமானிடம் எனக்கு சிறுவயது முதலே பக்தி. நான் தீவிர சிவபக்தன். வள்ளலாரும், பட்டினத்தாருமே என் வழிகாட்டி. என் சிவ பக்தியை நன்கு அறிந்த ஒரு நண்பர். தங்கள் பத்திரிகையை என்னிடம் தந்து படிக்கச் சொன்னார். திருக்கைலாயம் பற்றி மீனாட்சி அம்மாள் எழுதி இருந்த கட்டுரை மிகவும் அற்புதமாக இருந்தது. பாராட்ட வார்த்தைகள் இல்லை. அதைப் படித்ததும் கைலாயம் சென்று வர வேண்டும் என்ற ஆவல் மனதில் நிறைய இருக்கிறது. கட்டுரை எழுதிய மீனாட்சி அம்மாள் அவர்களுக்கு இறை அருள் கிட்டட்டும். என் போன்ற சிவனடியார்களை கைலாயம் போக வேண்டும் என ஏங்க வைத்த கட்டுரை. இது போல ஒரு கட்டுரையை நான் படித்ததே இல்லை. சிவனே போற்றி! எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி! தென்னாடுடைய சிவனே போற்றி!

திருச்சிற்றம்பலம் கு. முத்துராமன்,
சென்னை.


# தேவை

நமது செட்டிநாடு இதழுக்கு உறுப்பினர் சேர்க்க (விளம்பரம் பெறுதல், செய்தி சேகரிக்க) முகவர்கள் தேவை. விருப்பமுள்ள ஆண்கள் / பெண்கள் கீழ்க்கண்ட படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முகவர்களின் செயல்பாட்டிற்கு ஏற்ப வருமானம் இருக்கும்.

**விண்ணப்ப படிவம்**

பெயர் :____________________

ஊர் : ____________________

கோவில் :____________________

தற்போதைய இருப்பிட முகவரி : ____________

____________________

____________________

தொழில் : ____________________

தொடர்பு எண்.: ____________________

பிற விவரங்கள்:
வசிப்பிடப் பகுதியில் தங்களை அறிந்த:
இரண்டு நபர்களின் பெயர், முகவரி, தொடர்பு எண்.

1) ____________________

____________________

2) ____________________

____________________

**கையொப்பம்**


அன்புடையீர்,

நகரத்தார் சங்கங்கள்/சத்திரம் அறக் கட்டளைகளின் முகவரியும், தங்கும் வசதி உள்ள விவரமும் அடங்கிய முகவரிகையேடு ஒன்று தஞ்சாவூர் நகரத்தார் சங்கம் சார்பாக வெளியிட உள்ளோம். ஆகவே, தங்களுடைய நகரத்தார் சங்கம் பற்றிய முகவரியும், மற்ற விவரங்களையும் கீழ்க்கண்ட விண்ணப்ப படிவத்தில் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**விண்ணப்பப் படிவம்**

நகரத்தார் சங்கம்/சத்திரம்/
அறக்கட்டளையின் பெயர்
இளைஞர் சங்கம்/மகளிர் சங்கம்:

..........................................

சங்க முகவரி, தொலைபேசி எண்,
கைபேசி எண்: ..............................

..........................................

..........................................

E.mail ID : ..............................

தங்கும் வசதி :
உள்ளது ☐ இல்லை ☐

திருமணம் மண்டபம் வசதி:
உள்ளது ☐ இல்லை ☐

நகரத்தார் சங்க
தலைவரின் பெயர் :
தொலைபேசி எண்.
/ கைபேசி எண். :..............................

..............................


**சங்க தலைவரின் பெயர், கையெழுத்து**

குறிப்பு: இளைஞர் சங்கம், மகளிர் சங்கம் புதிதாக ஆரம்பித்திருந்தால் இந்த விண்ணப்ப படிவத்தை டைப் செய்து பூர்த்தி செய்து அனுப்பவும். பூர்த்தி செய்த படிவம் அனுப்ப வேண்டிய முகவரி


நகரத்தார் சங்கம் - தஞ்சாவூர்
53, பாம்பாட்டித் தெரு, கீழவாசல்,
தஞ்சாவூர் - 613001
போன்: 04362 - 230462
E.mail: thanjavurnagaratharsangam@gmail.com

# சிறுவர்நாடு

## வீண் பழி



குறிஞ்சி என்ற ஊரில் முனுசாமி என்ற ஒருவன் இருந்தான். அவன் ஒரு முறை தேவையில்லாமல் ஒரு கிராமவாசி மீது பழி சொல்லி, பஞ்சாயத்தைக் கூட்டினான்.

பஞ்சாயத்தில் கிராமவாசிக்குத் தண்டனை கிடைத்தது. பின், வீட்டிற்கு வந்த முனுசாமியின் மனசாட்சி அவனை உறுத்தியது. கிராமவாசி மீது தான் பழி சொன்னதை எண்ணி வருந்தினான். எனவே, தன் பாவத்திற்கு ஏதாவது பிராயச்சித்தம் உண்டா என்று தேடினான்.

என்ன பிராயச்சித்தம் செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. எனவே, அந்த ஊரிலிருந்த ஒரு துறவியிடம் சென்றான். "துறவியாரே! நான் இந்தக் கிராமத்தில் வசிக்கும் ஒருவர் மீது வீண் பழி சொல்லிவிட்டேன். அது என் மனத்தை உறுத்துகிறது. அந்தப் பழி சொன்ன பாவத்தில் இருந்து தப்பிக்க எனக்கு வழி கூறுங்கள்!" என்று கேட்டான்.

துறவி சிறிது யோசித்துவிட்டு, "இன்று இரவு ஐந்து கிலோ இலவம் பஞ்சை எடுத்துப் போய் அந்த கிராமவாசியின் வீட்டுக்கு முன்பு பரப்பிப் போட்டுவிட்டு வந்து விடு. நாளை வந்து என்னைப்பார்", என்று கூறினார்.

## 8 வித்தியாசங்கள்

இரண்டு படங்களுக்கும் **எட்டு** வித்தியாசங்கள் உள்ளன. கண்டுபிடிக்க முடியாதவர்களுக்கு **அடுத்த** பக்கத்தில் விடை இருக்கிறது.



## எட்டு வித்தியாசங்கள் விடை

**1. திருடனின் சட்டை 2. வீட்டின் ஜன்னல் 3. போலீஸ்காரரின் பாக்கெட் 4. கத்தியின் அமைப்பு 5. பறவையின் தலை, 6.மேகம் 7. மரக்கிளை 8.போலீஸ்காரரின் சட்டையில் கோடு.**

முனுசாமியும் பஞ்சைக் கொண்டு சென்று கிராமவாசியின் வீட்டின் முன் பரப்பி விட்டான். பின் மறுநாள் சென்று துறவியைப் பார்த்தான். "துறவியாரே! என் பாவம் போய் இருக்குமா இந்நேரம்?" என்று கேட்டான்.

உடனே துறவி, "முனுசாமி! நீ இப்போது அந்த கிராம வாசியின் வீட்டிற்குச் செல். அவன் வீட்டு முன் நீ நேற்றிரவு பரப்பி வைத்த பஞ்சை மீண்டும் பொறுக்கிக் கொண்டுவா," என்றுகூறினார்.

முனுசாமி மிகுந்த ஆவலுடன் ஓடினான். ஆனால் ஒரு விரல் அளவு பஞ்சு கூட அங்கு இல்லை. எல்லாம் காற்றில் பறந்து போய் விட்டிருந்தது. அதனைக் கண்ட முனுசாமி திடுக் கிட்டான். மீண்டும் துறவி யிடம் ஓடி வந்தான்.

"துறவியாரே! நேற்றிரவு நான் கிராமவாசி வீட்டின் முன்னால் போட்டுவிட்டு வந்த பஞ்சில் ஒரு துளிப் பஞ்சு கூட இப்போது அங்கு இல்லை. என்ன செய்வது?" என்று கேட்டான்.

துறவி சிரித்து விட்டு, "முனுசாமி! நீ விரித்துப் போட்டுவிட்டு வந்த பஞ்சை இப்போது மீண்டும் எப்படி அள்ள முடியாதோ, அதே போல, நீ ஒருவர் மீது கூறிய பழியையும், அதனால் உனக்கு ஏற்பட்ட பாவத்தையும் மாற்ற முடியாது. திருப்பி வார முடியாத பஞ்சைப் போன்றது தான் உன் பழிச்சொற்களும். அவற்றை இனித் திருப்பி வார முடியாது. இறைவனிடம் உன் தவறுக்காக மன்னிப்பு கேள்," என்று கூறினார்.

முனுசாமிக்கு உண்மை புரிந்தது. அன்று முதல் மற்றவர்கள் மீது பழி சொல்லும் குணத்தையே விட்டுவிட்டான். பிறர் மீது வீண் பழி சுமத்துவதால் பலன் ஏதும் கிடைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்தான் முனுசாமி.

# பலம் மட்டும் நம் பலமில்லை

ஒரு ஜப்பானிய சாமுராய் வீரனின் வீட்டில் எலித் தொல்லை மிகவும் அதிகமிருந்தது. அதிலும் குறிப்பாக, ஒரு முரட்டு எலி அந்த வீட்டில் இருந்த உணவுப் பொருட்களைத் திருடித் தின்றபடியே இருந்தது. வீட்டுப் பூனையால் அந்த எலியைப் பிடிக்கவே முடியவில்லை. அத்துடன் பூனையை அந்த எலி பாய்ந்து தாக்கிக் காயப்படுத்தியது. ஆகவே, சாமுராய் தனது அண்டை வீட்டில்



இருந்த இரண்டு பூனைகளை அழைத்து வந்து முரட்டு எலியைப் பிடிக்க முயற்சி செய்தான்.

இரண்டு பூனைகளும் முரட்டு எலியைத் துரத்தின. ஆனால், எலி ஆவேசத்துடன் பாய்ந்து தாக்கி அந்தப் பூனைகளையும் காயப்படுத்தியது. முடிவில் சாமுராய் தானே எலியைக் கொல்வது என முடிவு செய்து, ஒரு தடியை எடுத்துக்கொண்டு போய்த் துரத்தினான். எலி அவனிடம் இருந்து தப்பி தப்பி ஓடியது. முடிவில் குளியலறைப் பொந்துக்குள் ஒளிந்து கொண்டது. அவன் குனிந்து அதனைத் தாக்க முயற்சித்தான். ஆனால், வேறொரு வழியாக எலி வெளியே வந்து அவன் மீது பாய்ந்து தாக்கியது. அதில் அவனும் காயம் அடைந்தான். 'ஒரு முரட்டு எலியை நம்மால் பிடிக்க முடியவில்லையே, நாமெல்லாம் ஒரு சாமுராயா?' என அவமானம் அடைந்தான்.

அவனது மனவேதனையை அறிந்த ஒரு

நண்பர், "நண்பா அருகில் உள்ள மலையில் ஒரு கிழட்டு பூனை இருக்கிறது. அந்தப் பூனையால் எந்த எலியையும் பிடித்து விட முடியும்" என ஆலோசனை சொன்னார்.

சாமுராயும் வேறு வழியில்லாமல் அந்தக் கிழட்டுப் பூனையைத் தேடிப் போய் உதவி கேட்டான். பூனையும் உதவி செய்வதாக ஒப்புக்கொண்டது. அதன்படி மறுநாள் சாமுராய் வீட்டுக்கு அந்தக் கிழட்டு பூனை வருகை தந்தது. பூனை இருப்பதை அறிந்த எலி, தயங்கித் தயங்கி வெளியே வந்தது. கிழட்டு பூனை தன் இடத்தை விட்டு நகரவேயில்லை. எலி தைரியமாக அங்குமிங்கும் ஓடுவதும் வெண்ணெய்க் கட்டிகளைத் திருடித் தின்பதுமாகயிருந்தது. மற்ற பூனைகளாவது எலியைத் துரத்த முயற்சியாவது செய்தன. ஆனால்,இந்தக் கிழட்டுப் பூனையோ இருந்த இடத்தை விட்டு அசையவே மறுக்கிறதே என சாமுராய் அதன் மீது எரிச்சல் அடைந்தான். ஒருநாள் முழுவதும் அந்தப் பூனை அசையாமல் அப்படியே இருந்தது.

மறுநாள் வழக்கம் போல எலி வலையை விட்டு வெளியே வந்தது. சமையலறையில் போய் இனிப்பு உருண்டைகளை ஆசையாக தின்று விட்டு மெதுவாக திரும்பியது.

அடுத்த நொடி திடீரென பாய்ந்த அந்த கிழட்டு பூனை ஒரே அடியில் அந்த எலியைப் பிடித்து கடித்து கொன்று போட்டது. சாமுராய் அதை எதிர்பார்க்கவேயில்லை. இவ்வளவு பெரிய முரட்டு எலியை ஒரே அடியில் எப்படி அந்தக் கிழட்டுப் பூனை வீழ்த்தியது என வியப்படைந்தான்.

இந்தக் செய்தியை அறிந்து கொண்ட பூனைகளெல்லாம் ஒன்றுகூடி,

"எப்படி முரட்டு எலியைக் கொன்றாய்? இதில் என்ன சூட்சுமம்?" எனக் கேட்டன.

"ஒரு சூட்சுமமும் இல்லை. நான் பொறுமையாக காத்திருந்தேன். நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை அந்த எலி நன்றாக அறிந்திருந்தது. ஆகவே, அது தன்னைத் தற்காத்துக் கொள்ளப் பழகியிருந்தது. நான் நிதானமாக, பொறுமையாக காத்துக் கிடந்த போது அது என்னைச் செயலற்றவன் என நினைத்துக் கொண்டது. ஆயுதத்தை விட பல மடங்கு வலிமையானது நிதானம். எதிரி நாம் செய்யப் போவதை ஊகிக்க முடிந்தால் அது நமது பலவீனம். வலிமையானவன் தனது சரியான சந்தர்ப்பத்துக்காக காத்துக் கொண்டுதான் இருப்பான்!" என்றது அந்த கிழட்டுப் பூனை.

அப்போது மற்றொரு பூனை கேட்டது.

"நான் பாய்ந்து தாக்குவதற்கு பல ஆண்டுகள் பயிற்சி எடுத்திருக்கிறேன். என் நகங்கள் கூட கூர்மையானவை. ஆனாலும், என்னால் ஏன் அந்த முரட்டு எலியைக் கொல்ல முடியவில்லை!"

"உன் பலத்தை போலவே எலியும் தன்னை காத்துக்கொள்ளப் பழகியிருக்கிறது. எல்லா எலிகளும் பூனைகளுக்குப் பயந்தவை இல்லை. நான் ஒரு பூனை என்ற அகம்பாவம் உன்னிடம் மேலோங்கியிருக்கும். ஆகவே, ஒரு எலி திரும்பி தாக்க முயற்சிக்கிறது என்றதுமே நீ பயப்படத் தொடங்கியிருப்பாய். ஆகவே, உன்னை துரத்தி அடித்து எலி காயப்படுத்தியது. ஆவேசமாக கூச்சலிடுபவர்கள், கோபம் கொள்கிறவர்கள், அவசரக்காரர்கள் தங்களின் பலவீனத்தை உலகுக்கு வெளிச்சமிட்டு காட்டுகிறார்கள். பலவான் தனது பேச்சிலும், செயலிலும் அமைதியாகவே இருப்பான். உலகம் அவனை பரிகசிக்கவும் கூடும். ஆனால் தகுந்த நேரத்தில் அவன் தன் திறமையை நிரூபித்து வெற்றியடைவான்!" என்றது கிழட்டுப் பூனை.


சாமுராய்களுக்கு மட்டுமில்லை சாமானியர் களுக்கும் இந்தக் கதை பொருந்தக்கூடியதே. மற்ற பூனைகளிடம் இல்லாத எந்த ஒரு தனித் திறமையும் கிழட்டுப் பூனையிடம் கிடையாது. ஆனால், அது தன் பலத்தை மட்டுமே நம்பாமல் எதிரியின் பலவீனத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டது. வாய்ச் சவுடால் விடுவதை விட காரியம் செய்து முடிப்பது முக்கியம் என அனுபவம் அதற்கு உணர்த்தியிருந்தது. காத்திருப்பது முட்டாள்தனமில்லை என அந்தப் பூனை உணர்ந்திருந்தது.

வெற்றியை தீர்மானிப்பது வெறும் ஆயுதங்களில் மட்டுமே இல்லை. மனத் தெளிவும், நிதானமும், தகுந்த நேரத்தில் தன் திறமையை முழுமையாக வெளிப்படுத்து வதேயாகும்.

நம் பலம் மட்டும் நம் பலமில்லை. நமது எதிரியின் பலவீனமும் நமது பலம் தான்.

■

Namadhu Chettinad Printed by A.N.Vairavan, at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai 600 083 and Published by A.N.Vairavan at New No.39, Old No.15, 2nd Floor, Flat No.6, Pookkara Street, Vadapalani, Chennai 600 026. Editor : N.Avadaiappan






Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CC(S)DN/541/16-18.
Licensed to post without prepayment under WPP No.TN/PMG (CCR)/WPP 542/16-18 and published on first week of every month.




எண்ணூர் காமராசர் துறைமுகத்தில் அதிநவீன சரக்கு பெட்டக முனையத்தை 09.06.2017 அன்று திறந்து வைத்த மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களுக்கு செட்டிநாடு குழும மேலாண் இயக்குநர் திரு.எம்.ஏ.எம்.ஆர்.முத்தையா (எ) அய்யப்பன் அவர்கள் பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்கிறார். (செய்தி பக்கம் 10)


ISSN 2454-9649